# திருவரங்கச் செல்வர் எனும் கூத்து காவியம்

ஆய்ந்து, அறிந்து ஆக்கியோன்: பெ.கி.மாயகூத்தன்

(ஐய்யங்கார்)



ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீ ரங்கமன்னார்



தொண்டரப்பொடி ஆழ்வார்

ஸ்ரீ:



# திருவரங்கச் செல்வர்

எனும்

# கூத்து காவியம்

ஸ்வாமி தொண்டரடிப்பொடிகளை தாஸியின் மூலம்
உலகுக்கு அறிமுகப்படுத்த அடியேனுக்கு விருப்பம்
இல்லை, அது அபசாரம், பாடல்களின் மூலம்
தெறித்த அவரது மேதா விலாசத்தை
வைத்துக் கொண்டு இக் கூத்தினை
உங்கள் முன் அரங்கேற்றுகிறேன்.

ஆய்ந்து அறிந்து ஆக்கியோன்

பெ. கி. மாயக்கூத்த ஐய்யங்கார்

3, தெள்ளிய சிங்கப் பெருமாள்
முதல் சந்து
திருவல்லிக்கேணி, சென்னை-5.

முதற்பதிப்பு அக்டோபர் 1999

மத சம்பந்தமான நூல்கள் வெளியிடுவதற்கான
பொருளுதவி என்ற திட்டத்தின்படி திருமலை
திருப்பதி தேவஸ்தானங்கள் வழங்கிய பொரு
ளுதவியைக் கொண்டு இந்நூல் வெளியிடப்
படுகிறது. இதனை ஆய்ந்து அச்சிட ஏற்ற
தன் ஆதரவு நல்கிய பெரியோர்களுக்கும்
திருமலை திருப்பதி தேவஸ்தானங்
களின் அதிகாரிகளுக்கும்
எனது நன்றி கலந்த
வணக்கம்.

செ.ப கி. மாயகூத்த ஐய்யங்கார்

விலை ரூபாய் : 25-00

அச்சிட்டோர் : குரு அச்சகம்
19, இருசப்ப கிராமணி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-5. ☎ 8544371

# முன்னுரை

வைணவக்காவின் நறுமணத்தை அதன் வடிவழகை சிறிது மாந்திய மாண்புக்கு ஏதேனும் பெருமையுறச் செய்ய எண்ணினேன். அந்த முயற்சியின் முகிழ்வுதான் "திருவரங்கச் செல்வர் எனும் இக் கூத்து.

ஆய்ந்து அறிந்து ஆக்கினேன் என்பதற்கு பதில் சான்று ஆறுயிரம் ஆண்டுகட்கு முந்திய ஆழ்வார்களின் வரலாற்றைக் கூறும், அவர்களது பாசுரங்களின் பதிப்போடு கூடிய புத்தகம் தான்.

டாக்டர் பட்டம் பெற்ற பேராளர்களைப் போற் அடியேன் இதில் ஏதும் செய்யப் பெற்றேனில்லை ஆற்றலும் இல்லை.

ஏனெனில்? இறைக் கடலில் ஆழ்ந்து ஆழ்ந்து அகழ்ந்து அளைந்து மகிழ்ந்து முகிழ்த்த ஆழ்வார்களின் திறை கூற முறை யாண்டு உளது!

பெரியோர்களே! இச்சிறியேன், திருமகுவும் தடந்தோளன் செங்கண்மால் தடமார்பில் பிராட்டியையும் சேர அழகட்டும் மாலாவனமாலை எனப்பெயர் பூண்ட ஒரு மாலையின் அம்சமாய் உதித்த விப்ர நாராயணனை கதாநாயகனுக்கி காவியம் புனைந்த மைக்குக் காரணம் அவர் தொண்டுக்குத் தன்னை ஈந்ததாய்மை!

திருப்பள்ளியெழுச்சி பாடல்களின் ஒவ்வோர் வரியும் பரவசம் மட்டும் அல்ல. காலை போழ்தின் கவினை, நடைமுறைகளை, உயிர்ப்பை உன்னதத்தை உணர்வோடு விளையாட' விடுகிறது.

"விடை மணிக் குரலும்" எனும் போழ்து கன்று ஒன்று கல கல என மணிக்குரல் ஒலிப்ப துள்ளி ஓடுவது போன்ற மயக்கில் தள்ளுகிறது.

"களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த" வண்டு மிழற்று முன்னர் அரங்கனுக்கு ஒரு கலம்பக கதம்ப மாலையைச் சூட்டி அழகு பார்க்கிறார் ஆழ்வார்.

"எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்

ஈன் பனி நனைந்த தம் இருஞ்சிறகு உதறி"

கைபுனைந்து இயற்ற கவின் பெறும் வனப்பு! கற்பகக் காவிலே பாரிஜாத மலர்கள் இப்படித் தான் ஒளிருமோ! உதிருமோ! வாழ்க வைணவம்!!

"சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க"

நெருக்கத்திலும் எட்டி எட்டி பாாப்பது கவிஞனின் கருத்தில் எம்பெருமானின் ஈர்ப்பு.

இப்படி துளவத் தொண்டன் சொல்லையும் சுவையையும் தொடுத்துக் கொண்டே போய் அடியேனை அவருக்கு ஆட்படச் செய்தார் தொண்டரடிப் பொடிகள்!

மாலை கட்டி மாலையே பார்த்தவர் சேலை கட்டியவளை ஏன் பார்த்தார். சிருங்காரத்திற்காகவோ? இல்லை, ஒரு தெளிவு நமக்கு ஏற்படும்.

தெளிவின் தேர்வு அவரைத் தொண்டரடிப்பொடி ஆக்கியது.

தாமரையாள் தவழும் மார்பன் தமிழுக்கோர் பரிசைக் காண ஆடிய நாடகம் அரங்கேறக் காணலாமா?

வாருங்கள்! சிறப்பினைச் சொல்லுங்கள்! தேய்வுக்கு பொறுத்து வாழ்த்துங்கள்

''திருவரங்க செல்வர் வருக! வாழ்க!

இன்னும் சில சொல்ல வேண்டியவனுகிறேன்.

அதுதான் சமயம்—பிற மதங்கள்

ஆழ்வார்கள் சிலரை அது அன்றே, இன்றைய நிலைகாட்டி எச்சரித்து இருக்கிறது.

வீணை விவகாரங்களின் விளைவு நாட்டை என்ன செய்யுமோ என்று இன்றைக்காக அன்றே அஞ்சியிருக்கிருர்கள்.

பாவம்! இறைபகுளில் ஆழும் போழ்தே அவர்கட்கு ஒரு சொத்தை முத்தும் கிடைத்திருக்கிறது.

நம் பாரதத்தின் பரிதாபம் ஆருயிரம் ஆண்டுகட்கு முன்னரே அறுதியிடப்பட்டுள்ளது போலும்!

அடியேனுக்கு அதுபற்றியெல்லாம் கவலைகிடையாது எனினும் ஆழ்வார்கள் ஆழ்ந்த எண்ணத்தைக் குறிக்க வெளிபடையாக தொண்டரடிப் பொடியின் கருத்தை எழுதுவது மூலம் சிறிது எழுத வேண்டியதாயிற்று, அந்த வரையில் மலரைத்தான் தூவிச் சென்றுள்ளேன் எல்லோரும் வாழ வேண்டும் என்று!

இவ் ஆழ்வாரின் உயர்வு கருதி மேலும் உங்களுடன் களிப் பாட ஆசை சிறிது நேரம் செலவிடுங்கள்.

அரங்கன், ஆழ்வார் இறுதிச் சுற்று விளையாட்டு திருமாலை என்னும் பாசுர சிறப்பால் முடிவு பெறுகிறது.

இதில் தன்னை கேட்பவனுக வைத்து கொண்டு பாடச் சொல் லுஞர் அரங்கன்.

அவ்வளவுதான் ஆழ்வாரின் உற்சாகம் காட்டாற்று வெள்ள மாகிறது.

ரங்க நாதம் என்னும் ஒரு ராஜ சாரட்டில் ஏறி அமர்ந்து கொள்கிறார்.

கவிநயம், மொழிநயம், கற்றநயம், கற்பித்தோர் நயம் என நான்கு குதிரைகள் திமிறிக் கொண்டு நிற்க.

ஆழ்வார் இதை இப்படியே ஓடிச் சென்று நமன் தமர் தலைகளை நசுக்கிக் காட்டுகிறேன் பார் என்று புறப்படுகிறார்.

கலியுகத்தின் பொல்லாத நடைமுறைகளின் தாக்கம்! அதற்கு காரணமானவர்களை எமன் இன்னும் விட்டு வைத்திருக்கிறானே என்ற ஏக்கம் கலி தன்னைக் கடக்கப் பாய்ந்து என வெளிப்படுகின்றது.

விடவில்லை ஆழ்வார் "நாவலிட்டு உழி தருகின்றோம் என என கோஷமிடுகிறார்.

நாவலிடுதல் என்றால் வெற்றி கூறுதல் வாய்மை போற்றுதல் எனப் பொருள் போலும்

நம் மண்ணிற்குக் கூட (நாட்டிற்கு) நாவலந்தீவு என்றோர் பெயர் உண்டு.

கண்ணனின் வண்ணத்தை காட்டுவதால் தான் ஒரு பழத்தை நாவல் பழம் என்கிறோம்.

இளமையும் வளமையும் நாவில் தெறிப்போரை நாவலர் என்கிறோம் நாவல் என்கிறோம்.

இத்தனை கருத்தூடு ஆர்ப்பரிக்கும் ஆழ்வார் மூவுலகம் உண்டு உமிழ்ந்த முதல்வா என அரங்கனை விளித்து இத்தனை லோக விவேகங்கள் அடியேனுக்கு எப்படி வந்தது தெரியுமா?

நின் நாமம் கற்ற ஆவலிப்பால் அதனை அடியேனுக்கு நீ உடைமையாக்கியதால் என பெருமை பூணுகிறார். விரிவஞ்சி விடுகிறேன் கூத்தின் கூறாக இறுதியில் மேற்படி பாடலை கண்டின்புறலாம்.

தொண்டு தந்நலமற்றது-எதனையும் எதிர்பாராது தொண்டுக்கு தொண்டே ஆனை என இருப்பது.

அந்த வேறுபாடு காண முடியா செயல்பாடு கொண்ட நிலையினை ஊழியம் எனவும் போற்றலாம்.

கனிவும் பணிவும் முந்துறும் இந்நிலை வாழ்வின் அணியாம்

இந்நிலைப் பாட்டில் தன்னை இழந்த ஆழ்வார்க்குதொண்டிற்கு தடையாக நிற்கும் எதுவுமே தூசியாகப் பட்டது.

அதனை துடைப்பதும் ஒரு தொண்டு என்று முன் நின்றார்.

எங்கணும் மலிந்து மக்களை பயமுறுத்தும் கலியின்காட்டாட்சி

சாதி சமயங்களின் சந்திப்பு

ஈசலைப் போல் இறக்குமதியாகிக் கொண்டிருந்த பிற சமயத் தலைவர்களின் போட்டி, பொறாமை, ஆள்பிடித்தல், அடகு வைத்தல் என்பன போன்ற ஈனம்.

ஆழ்வாரை அலற வைத்திருக்கிறது.

காரணங்களை இன்னும் கூர்ந்து பார்க்கிறார்.

தொண்டே துணை என்கிறார் ஆம்! தொண்டு பூண்ட அமுதம் உண்ணு என்ற கழிவிரக்கம் ஆட்கொள்கிறது நம்மையும்

சமயங்களின் சழக்குக்கு சான்று கூற வந்த ஆழ்வார் தலையறுப்பு உண்டும் சாகேன் எனவும்.

சமயங்களின் மலிவும் சார்ந்த செயல்களும் பேச்சுக்களும் நாட்டில் நோயாகி விட்டதே என்று நோகும் இவர் அவைகளை கண்டிக்கும் முகத்தால் அவைகள் பரவக் கூடாது என்ற ஆளுமையும் கொண்டு, உண்மை இதுவே யாளுல் ஊரழிந்து வாழும் வகையே கேள்விக் குறியாகும் என்று கரைந்து பொறுப்பு அறியனகள் பேசுவோரை குறிப்புடன் சாட்சிகளுடன் தண்டிக்க வேண்டும் என்று பொறுமி தலையை ஆங்கே அறுப்பதே கருமம் கண்டாய் என வெடிக்கிறார் விம்மி.

தனி மனித ஆசைகள், சாகசம், முறைகளை அழித்த முன்னேற்றம் இவைகளை விரும்பாத இவர் அதன் காரண காரியங்களான மாத ரார் வேட்டை மயக்கு பிறப்பு இறப்பு இவைகளை வெறுத்து விரைத் துவிரைகிறார் அனைத்தும் அரங்கனே அழகனே என்று.

கொடுமை கூறாரம், கொதிப்பு குழம்பம் அமைதியின்மை,

இவைகளை நாம் நரகமென்கிறோம்.

இவைகள் அழிந்து பட ஆழ்வார் நரகமே சொர்க்கமாகும் நாமங்கள் உடைய நம்பி என்று அரங்கனை விளித்து ஆருயிர்காக இரங்குகிறார்.

"வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை கொண்டல் மீதணவும் சோலை அண்டர் கோன் அமரும் சோலை"

என்றெல்லாம் அரங்கத்தை அடையாளங்காட்டி அரங்கனை அர்ச்சிக்கிறார்.

"காமொளி வண்ணனே! கார் திரள் அனையமேனி கண்ணனே! என் மதுர ஆறே என் வாழ்வே" என்று,

தமிழ் தவழ்ந்து சென்று காவிரியாய் கொள்ளிடமாய் அரங்கனின் அடியை தழுவுகிறது.

பூரிப்பில் புரளுகிறார் ஆழ்வார்.

போதரேல் என்று ஆதரம் தந்தவனை படம் போட்டு காட்டுகிறார் ஒரு இடத்தில் [இனி திரை திவலை மோத எறியும்தண்பரவை மீதே-தனி கிடந்து அரசு செய்யும் தாமரைக் கண்ணன் எம்மானை-கனியிருந்தனைய செவ்வாய் கண்ணனைக் கண்டகண்கள் பனி அரும்பு உதிருமாலோ] என்று

இன்பமயமான மெல் இரைச்சல் இன் ஓசை.

சுகானுபவத்தின் நாதாநந்தம் தருவது இனி திரை திவலை களிர்சல் ஜல் ஜல் சப்தம்.

தண்பரவை இதமான குளிர்வால் விரிந்த சமுறு.

தனி கிடந்து அரசு செய்யும்-அமைதியின் ஆழ்ந்த ஆளுமை-உலகை உயிர்களை காக்கும் யோகு, சிந்தனையின் ஓலக்கம்.

தாமரைக் கண்ணன்-உள்ளார்ந்த சிந்தனையின் விரிவு தாமரையின் மலர்வு மணம்.

கனியிருந்தனைய செவ்வாய்-உலகு உயிர் அதன் உன்னதும் உயிர்ப்பு அன்பு, அருள் என கருணைக் கனிவினால் முறுகி எழுந்து முகிழ்த்தலர்ந்த அரக்கேறிய முத்திரை குத்தப்பட்ட செவ்வாய்.

இனி பனி அரும்பு உதிருமாலோ என்ற வரி பரவசத்தின் எல்லை அதனை பகிரங்கப் படுத்துகிறார் ஆழ்வார் நீர் வார்க்கும்விழிகளுடன்.

இறை இன்பம்-அதன் இறுதி-பெறும் பரிசு!

மெல்லரும்புகளை ஒவ்வொன்றாக நீளவாக்கில் உதிர்த்தால் அடுக்கடுக்காக அடுத்தடுத்து அது வீழ்ந்தால்-சிந்தித்து பாருங்கள் பனி அரும்பு உதிருமாலோ!

இதை யார் செய்வது செய்ய முடியும்.

ஆழ்வாருக்காக அரங்கன் செய்கிறார்.

செய்தாக வேண்டும் ஏன் என்றால் இந்த ஆழ்வார் ஒருவர் தான் அரங்கனை மட்டும் தத்து எடுத்து பாடியவர், பேசியவர்.

பேசுகிறாரே! பேசிற்றே பேசலல்லால் என்று,

அரங்க மாதகருளான அரங்கமாநகருளானே என விதிர்த்தழைத்து வேணவாக்கொண்டு கேள்வியும் பதிலுமாக நிறையப் பேசியிருக்கிறார்,

நேரில் சந்திக்கும் இருவரை காண்பது போல ஒரு உணர்வு நமக்கு ஏற்படுகிறது.

ஆழ்வாரின் சொல்லும் அணியும் சுவையும் பொருளும் பக்திப் பெருக்கும் பாங்கும் அரங்கனை நகரவிடவில்லை போலும்.

சாதி சழக்கு சமயம் சடங்கு உயர்வு தாழ்வு இம்மை மறுமை இன்மை உண்மை இவைகளெல்லாம் கூட இவர்களது சந்திப்பில் அலசப்படுகிறது.

பொதுமை பொதிந்த இவ்வாழ்வாரின் கருத்து நம்மை புதுமைக்கிட்டு செல்கிறது,

நிறைவாக அரங்கனை வேண்டி நிற்கும் இவர் அரங்கனின் பரிவுக்கும் தெரிவுக்கும் உவமை காட்டுகிருர்.

[பெண்ணுலாம் சடையினுனும் பிரமன் உன்னைக் காண்பான் எண்ணிலா வூழி வாழி தவம் செய்தார் வெள்கி நிற்ப-விண்ணு ளார் வியப்ப வந்து ஆனைக்கு அன்று அருளை ஈந்த—கண்ணறு உன்னை என்னுெருகனை கருக் கருதுமாறே]

ஆதி மூலமே என்றழைக்கும் போழ்து ஆனைக்குள் புரிந்த உன் திறல் மலிந்த செயல் ஆளுமையின் உரிமை,

அடியவர் பால் கொண்ட அன்பு இவை கண்டு விண்ணோர் வியப்பு.

நிரந்நரமான ஒரு பேற்றை தர முடியாத அதிகாரமில்லாத பிரமனையும் சிவனையும் நம்பி காலம காலமாக தவம் செய்கிருேமே என்று வெட்கத்தால வெதும்பிஙவர்கள் புறமே நிலையழிய.

நம்மால் இது போல் ஏன் செயல்பட முடியவில்லை என்ற கேள்விக் குறியுடன் பிரமனும் சிவனும் அரங்கா என்று என்னை போல் உன்னைப் பார்க்க!

அடே எங்கப்பா நீ யாருன்னு தெரிந்து கொண்டேன்! அரங்கா புரிந்து கொண்டேன்.

என்பால் என்ன அனைத்து உயிர்களையும் காப்பவன் நீ கதியும் நீ.

உன்னை என் சமமாக எண்ணி இத்துணை போழ்து விளையாடி யதற்கு இறைஞ்சுகிறேன்.

என் தொழுகையும் நீ துணையும் நீ பொறுத்தருள் வேண்டு கிறேன். மாப்பளித்து [மன்னிப்பு] எளியேனின் புன்கவியை ஏற்ற ருள்! இப்படி அரங்கனிடம் அடைக்கலம் ஆகிருர் இவ் ஆழ்வார்.

ஸ்ரீ:

# திருவரங்கச் செல்வர்

## எனும்

# கூத்துக் காவியம்

## காட்சி 1

வைரமணித் காட்டின் மத்தியிலே
ஒரு மாணிக்கச் சோதி மரகதச்
சுடர் பைம் பொன் அணிபுனைந்து
படுத்தாற் போன்று
பாற்கடலுள் பரமனின் துயில்
அணிமா மலர் மங்கையின் அடி வருடல்

''ஸஹஸ்ர சிர்ஷா புருஷ:'' என்று தொடங்கும் மறையார்ந்த மங்களத் தொடர்''

தன்னுள் அவனைக் கண்டு அவனுள் உலகைக் காணும் நித்ய சூரிகள் எனும் காப்புக் குழாம்

வசிஷ்ட வாமதேவாதிகள் பிரமன் உட்பட செய்கின்ற பிரார்த்தனை

நாரதனின் யாழில் விடியல் பண்

இப்படிப் பண்ணும் இசையும் பல்லாண்டும் சேர அங்கு ஒரு இனிய சூழல்

பாம்புப் படுக்கை சிறிதே அசைகிறது

செந்தளிர் கரத்தான் திருமாமகள் ஐயனின் சேவடியை அழுக்கிப் பிடிக்க

கருணைக் கனிவினால் மலர்ந்த திருமுகத்தில் ஒரு மின்னொளி

வேதமே தானான விமலனின் செவ்விதழ்கள் ஒரு செங்கீற்றை சிதறவிட அதன் பூரிப்பில் புவனம் எழுமையும் தொழுகையும் பெற்றது.

சதுர் மறையாளர்களின் சரண இசை இறைவனை தந் நிலைப் படுத்த அருளார்ந்த பூமகள் ''ப்ரபோ'' என பணிந்து நின்றாள்.

பாற்கடலுள் முத்துக்களின் சிதறல்கள்

இராஜசிம்மம் முழங்கிற்று "தேவி" ஆண்மையின் கோலோச்சல் மாமகளைப் பார்த்தபடி வந்தவர்களை வரவேற்றான் இறைவன்

**தேவி :** "ஸ்வாமி, இந்திரனுள்ளிட்ட இவர்களெல்லாம் தங்களிடம் ஏதோ கூறத் துடிப்பதாகத் தெரிகிறது! [இரந்தாள் இலக்குமி, தாயல்லவா]

**இறை:** "நான் கேட்க மாட்டேன் என்று சொல்கிறேன், என்ற இறைவன் சிறிது திரும்பி" நாரதா உனக்குத் தான் உலகவிஷயம் அத்துப்படி நீதான் சொல்? [என்றார் நளினமாக]

**நாரத :** சரிதான், என்னை விட மாட்டீர்கள் போலும் எல்லா வற்றிற்கும் நாரதன் தானு

**இறை:** ஆமாம் நீயும் எல்லாவற்றிற்கும் எப்பொழுதும் என்னைத் தானே வமபு இழுக்கிறாய்

**நாரா :** அது...அது வேறொன்றுமில்லை தேவரீருக்கு உயிர்களிடத் திலுள்ள அன்பு அக்கறை அதைத்தான் சொல்லிக் கொண்டு திரிகிறேன்.

**இறை :** நீ திரிந்து கொண்டு இருப்பதைச் சொல்லவில்லை தெரிந்து கொண்டு வந்து திரிக்கிறாயே கயிறு அதில் எத்தனை பேர்களை இழுத்து வலித்து உன் எண்ணங்களை பூர்த்தி செய்து கொண்டுள்ளாய்.

**நாரத :** ஐய்யயோ அப்படி எல்லாம் ஒன்றுமில்லை ஸ்வாமி அடியேன் அடியேனுக்தானிருக்கிறேன். எல்லாம் தங்கள் செயல்

**தேவி :** பாவம் நாரதனை ஒன்றும் சொல்லாதீர்கள் அவன் குழந்தை மாதிரி

**நாரா :** சரி சரி, அன்னைக்கு அடியேன் மீதுள்ள இந்தப் பரிவு ஏதோ ஒரு கவலையைக் காட்டுவது போல் தெரிகிறது. அப்படி ஏதுமிலலை தாயே.

**இறை :** சொல்லு நாரதா தயங்குவது ஏன்?

**இந்தி :** [முந்திக் கொண்டு] தாங்கள் அறியாததையா சொல்லப் போகிறோம். பூவுலகம் என்ற தாங்கள் தானே அழைப்பீர்கள் பூலோகத்தை-இப்போழ்து மென்மையும் இல்லை தன்மையும இல்லை புரட்சி என்ன பெயரால் எங்கு நோக்கினும் புரட்டு. திருட்டு. கையூட்டு—மதஸ்தர்கள் கட்சிசேர்த்துக்கொண்டு செய்யும் கயமை, மொத்தத்தில் மக்கள் அமைதிக்காக அலைகிறார்கள்.

வந்த : ஆமாம் ப்ரபோ! செய்வதறியாது திகைத்து நிற்கும் மக்களை சமயத்தின் பேரால் தனதாக்கிக் கொண்டு தான் மட்டும் வாழ எண்ணும் போலித்தனம் மலிந்து விட்டது ஐயனே

இறை : பிரமனே நீயேன் பேசவில்லை.

பிரமன்: பேசுவதால் பிழைபட்டழிந்து விடுமா ப்ரபோ! சார மற்றசமயங்களைச் சார்ந்துழலும் மக்கள் சங்கடப்படுவது இயல்பு தானே! காலத்தை கலிதேவன் அட்சி செய்ய முற்பட்டு விட்டான் போலும்! கவனமாக இருக்க வேண்டியது மக்கள்கடமை.

இறை : அப்படியென்றால் நீயும் நானும் எதற்கு

பிரமன் : நானு, நான் என்ன செய்யட்டும் குறைவற அறிய வாய்ப்பை கொடுத்துத் தான் அனுப்புகிறேன். உயிர் கட்கு இனி காக்கும் கடவுள் தாங்கள் தான் மக்களை வழிபடுத்த வேண்டும். வேண்டுகிறேன்!

இறை : நல்லது நீங்கள் போங்கள் ஆவன செய்கிறேன். தேவி...

தேவி : உண்மைதான் ப்ரபோ, நாராயணு என்று நாரதனைத் தவிர வேறு யாருமே சொல்லக் காணோம் பூவுலகில் என்ன இதுமெளனம் பேச்சைக் காணோம் யாது செய்வ தாக திருவுள்ளம்?

இறை : கமலையே, அடியவர்கட்கு எது உகந்தது என்று முந்தி முடிவு செய்வது நீதானே!

தேவி : புரிகிறது ஏன் கனிவுறப் பார்க்கிறீர்கள் என்று அணியுள் அணியாக என்னோடு போட்டியிட்டு தங்கள்தடமார்பில் தவழும் வனமாலையை தமிழகத்திற்கு, உவந்து மகிழும் காவிரிக்கரைக்கு அனுப்புவதாக உத்தேசம் போலும்? அப்படித்தானே!

இறை : அனுமதியுடன் தானே அனுப்பப் போகிறேன்.

தேவி : ஸ்வாமி வனமாலைக்கு சடினமான பணியைக் கொடுத்து கலங்க அடிக்காதீர்கள்!

இறை : இல்லை ப்ரியே வனமாலை எப்படிப் போகிறது என்பதை எடை போட்டு பார்த்துக் கொள். அப்படியே திரும்ப

வரும் கவலை வேண்டாம். நல்லது கெட்டது நிறைந்த பூவுலகவாழ்வில் நிறைந்த அடைவு அனுபவங்களைபெற்று திரும்புவான் வளமாலை.

—திரை—

## காட்சி 2

களநிலை—திருவரங்கம் பெரிய கோவில் ஆசாரவாசல் அந்தணர்கள் ஊர் பெரிய மனிதர் குதிரைமீது வர அவரது மனைவி பல்லக்கில் வர உடன் வருபவர்களும் உயர்ந்த ஆடை அணிகளுடன் கோயிலுள் செல்கின்றனர். கோயில் விசேஷ சிறப்புடன் விளங்குகிறது

ஒருவன்: அந்—(தன்னைச் சார்ந்தவர்களிடம்) போவது யார் என்று தெரிகிறதா? வெல்ல மண்டி முதலாளி வேத விலாச முதலியார்

மற் : அவருடன் போவது—அவர்

முதல்: தாலி கட்டிய மனைவி சங்கரத்தம்மாள். அவர்கட்கு பேரன் பிறந்திருக்கிறானும். அந்த பூரிப்பு பார்த்தீரா இன்று அரங்குவுக்கு [அரங்கன்] ஐந்து மூட்டைவெல்லம் அக்கார வடிசலாம்.

அடுத் : ஏன் ஸ்வாமி இவர் வெல்ல வியாபாரம் செய்தா பெருமாள் உபாயத்தைக் கூட வெல்லத்தில் தான் செய்யணுமா கற்கண்டு அடிசில் செய்யக் கூடாதா?

முதல் : எதில் செய்தால் என்ன பெருமாள் வேண்டாமென்று சொல்லப் போகிறார். ஐந்து மூட்டை வெல்லம் அடிசில் கோவில் கொள்ளாத கூட்டம் வரும் அவருக்கு ஆசீர் வாதம் ப்ரசாதம் தரும்போது அலசியம் கலந்துக்கணும்.

மற்ற : அதுக்கும் வெல்லத்தையே வெகுமானமாகத் தந்து விடப்போகிறான் ஜாக்கிரதை,

முதல் : யார் சொன்னது அப்படி பொன்னைப் பரிசாகக் கொடுக்கும் பூபதியாக்கும் அவன். சரி சரி அங்கே பாரும் ஒரு பல்லக்கு [எல்லோரும் வாசலைப் பார்க்க] யாரோ ஒரு பெரியமனிதர்

மற்ற : ஸ்வாமி இன்று நிஜமாகவே நல்ல நாள் தான் பார்த்தால் நம்மவர் மாதிரி இருக்கே [வந்தவர்கள் இவர்களை நோக்கி வர] அடடா வாங்க வாங்கோ நம்ம மணவாள ஸ்வாமி எங்கே இப்படி அம்மங்காருடன் [அம்மங்கார் — மனைவி]

வந்த : மண்டங்குடி சென்று வருகிறோம்,

முதல் : என்ன விசேஷமோ!

ஒரு : தாங்கள் தருக்கி நிற்பதைப் பார்த்தால் பெரிய சேதியொன்று எங்களை அதிர வைக்கப் போவது போலிருக்கிறது சொல்லுங்கள் சீக்கிரம்.

வந்த : ஒரு காப்பிடல் காரணமாகப் போய் வருகிறோம் [காப்பிடல் — திருஷ்டிகழிப்பு] அதேவேளை, மற்றொரு குழந்தைக்கு காப்பிட வேண்டியதாயிற்று.

ஒரு : ரொம்ப சரி தேவரீர் புளகம்மாந்திப் பூரிப்பதைப் பார்த்தால்...

வந்த : ஆமாம் மற்றொரு குழந்தையென்றேனே!

கூ. எ. : சொல்லுங்கள் ஸ்வாமி தயக்கமேன்

வந்த : மறையாயிரம் மகிழ்ந்து உரைந்த மாறனின் மறு அவதாரமோ என்னலாம்படி ஒரு தேசு.நம் அழகிய மண வாளருக்கு சாத்துவோமே வகுச்சல் அப்படி பகிர்ந்து நேர்ந்து படைக்கப்பட்ட அவயவப்பூர்த்தி (வகுச்சல் என்று மாலை பலமலர்களானது)

மற்ற : எப்படியோ நல்லாயிருக்கணும். பிள்ளை நம்அரங்கனுக்கு ஆயிரங்காலம் தொண்டு செய்துகொண்டு ஒருகுறை யின்றி வாழவேண்டும்.

வந்த : அதற்காகவே பிறந்தவன் போலிருக்கிறது கையும் காலும் மூக்கும் முழியும் அடடா. மொத்தத்தில் வடிவழகன் விப்ரநாரயணன் என்று பெயர்வைத் துள்ளான் ஆனால்............

ஒரு : அதென்ன ஸ்வாமி விசனமான ஆனால்?

வந்த : வக்கிரவாழ்க்கை, என்றாலும், அரங்களின் தொண்டால் ஆயிரம் பெறுவான்.

முதல் : எப்போழுதுமே தொண்டு செய்யத் துணிபவர் வக்கிர மான வாழ்க்கையை தான் பெறமுடியும். ஒரு வகையில்,

ஒரு : சரி, எப்படியோ ஒரு நல்ல பிள்ளை. தேசம் திகழ்வு மாகத் வைணவத்தை வாழவைக்கப் பிறந்திருக்கிறது. வாழ்த்துக்கள்.

—திரை—

## காட்சி 3

களநிலை — திருவரங்கம் வீதியில் ஒருபுறம். அடியவர் அவருக்கு அடியவர் அடியவரான விப்ரநாராயணன் மழித்துச் சுழித்த அழகில் குடுமி டன்னிரு திருமண், காதில் கடுக்கன், மணி மாலைகள்கழுத்துடன் அசைய அரங்கனுக்கு தனை ஈர்ந்து அவனையே தான் பெற்ற மயக்கில் பாடிக்கொண்டிருக்கிறார், அமைதியில் ஆழ்ந்த மக்களிடையே பரவசம்

பாடல் — நாமவளியின் சாயல் — மோகனப் பண்

விப் : நாராயணா லெட்சுமி நாராயணா!
நாராயணா ஸ்ரீமன் நாராயணா!

அடி : நாராயணா லெட்சுமி நாராயணா!
நாராயணா ஸ்ரீமன் நாராயணா!

விப் : நாராயணா எனும் நாமம் அது
நல்லவர் உள்ளத்தின் நாதம்
தீராத வினைகளைத் தீர்க்கும் தெய்வ
திகழ் தன்னில் கொண்டு சேர்க்கும்!

அடி : நாராயணா லெட்சுமி நாராயணா
நாராயணா ஸ்ரீமன் நாராயணா

விப் : சொல்லச் சொல்ல சுவை கூடும் சித்த
சுத்தியினால் பக்தி கூடும்
நல்லன நம்மைநாடும் நாடும்
வீடும் வீடும் நயந்து கொண்டாடும்

அடி : நாராயணா லெட்சுமி நாராயணா
நாராயணா ஸ்ரீமன் நாராயணா

விப் : கல்லைக் கனிவிக்கும் திருநாமம் பரந்த
கடலைக் கடைந்தவனின் திருநாமம்
எல்லை யில்லாத ஆநந்தம் தருகின்ற லட்சுமி
நாதனின் நாமம் திருநாமம்

அடி : நாராயணு லெட்சுமி நாராயணு
நாராயணு ஸ்ரீமன் நாராயணு

(பாட்டு முடிய ஒரு சிற்றுரை நிகழ்த்துகிறுர் விபரர்)

அரங்களின் அடிபணியும் அன்பர்களே! அமைதி என்பது விலை கொடுத்து பெறமுடியாத ஒரு அவசியமாகும். மனித வாழ்வின் கடைகாலான அதைப் பெறுவதற்கு தொண்டு ஒன்றே துணைபுரியும்.

வேதம் சிந்திய சித்தாந்த சாரங்களின் பிழிவு, அதனை வேர்ந்து நீர்த்துப் போய்விடாமல் காத்து வழிப்படுத்தி வடிகட்டி வடிகட்டி இன்று நாம் அருந்தும் தெய்விகப் போகமாகத் தந்திருக்கின்றனர் நம் பெரியோர், நம் பெரியோர்களைப் போன்று வாழ்வின் நெறிமுறைகளைப் பகுத்தவர், உரைத்தவர் யார் என்ற கேள்விக்கு பதில் கூறுவது அரிது.

மீண்டும் சொல்லுகிறேன்—பிறப்பினுல் ஆன பயன் அமைதி அந்த ராஜபாட்டையில் இட்டுச் செல்லும் பணி விளக்கு நம் பெரியோர்களின் கோட்பாடு அதன் வழிச் செல்வோம் மாயவாதிகளை வெல்வோம்.

நண்பர்களே! அலையும் உள்ளத்தை அடக்கி ஆள்வதே ஆன்மீகம் ஆநந்தம்!

இதைக் கூற வந்த தென் புலத்து வல்லோன் மாறன் உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும் உள்ளி எடுத்து இறை உள்ளில் ஒருங்கே என்னுன" சொல்லின் துள்ளலைப் பாருங்கள்! உள்ளம் உரை செயல் மூன்றும் தானே மனித வாழ்வின் தொகுப்பு, தொடர், இதில் எது வேண்டுமோ அதை எடுத்து மற்றவற்றை ஒப்பிட்டு அதனையும் இறைவனுக்கு வார்க்கச் சொல்கிறுன், நம் ஆழ்வான் என்பவன் இப்படி நம் சமயச் சார்பெல்லாம் தழுவி நிற்பது இறையருளை எங்கே எங்கே சொல்லுங்கள் "நாராயணு லட்சுமி நாராயணு!"

ஒரு : ஸ்வாமி இதனால் என் போன்ற உழைப்போர்க்கு என்ன பலன்?

விப் : நண்பனே உழைப்பு என்பது பொது—இப்போழ்து நாம் பாடிக் கொண்டும் பேசிக் கொண்டும இருக்கிறோமே இதுவும் உழைப்புத்தான் என்றாலும் உடலால்உழைக்கும் வளம் பெருகவே என் போன்றோர் உள்ளத்தால் உழைக் கிறோம்;

தலைவனொருவன் சார்ந்தோர் பாடும் புகழுக்காக பாடு பவனைச் சார்ந்தவர்களையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் அவசியமே.

அதே போறத்தான் நாங்களும் நீங்களும் எங்கள் பிரதிபலிப்பு நீங்கள் என்றால், உங்கள் உழைப்பு நாங்கள் என்றும் முடிவு செய்யலாம்.

பலனை எதிரிட்டு செயலிலோ மற்ற உழைப்பிலோ ஈடுபடுவது சரியல்ல. ஆனாலும் அதன் மூலம் நம்மை ஊக்குவிப்பது நம்பிக்கை என்ற பலம் தான். ஆதயே நாம் சமயத்திடமும் இறைவனிடம் கொள்ள வேண்டும் அந்த நம்பிக்கையின் அடையாளமே தொண்டு! இறைவனின் திருநாமம் உரைப்பதுவும் தொண்டு தான் எங்கே சொல்லுங்கள் "நாராயணா லட்சுமி நாராயணா" (இப்படிச் சொல்லிக் கொண்டே பாடிக் கொண்டே அந்தக் கூட்டம் விப்ரரின் பின் செல்கிறது)

—திரை—

## காட்சி 4

களநிலை—உறையூர் சோழ அரசன் பேரவை சிருங்கார ஓலக்கம்—அரசன் மந்திரி புலவர் குழாம் சேவகர்கள் இன்னும் பெருமக்கள் பலர்.

ஓ வாசி: மாராத அன்புடனே மக்களைக் காத்துவரும் சோழப் பேரரசின் தொல் புகழ் மாண் புயர சொல்லிடுவேன் நல்வாழ்த்து

புல 1 : எழுந்து வணங்கி—கோழியர் குலத்துதித்த கோவே நீ இந்த ஆழிசூழ்புவியதனை அழகுறவே மாட்சி கொள்ள ஆழிவலவன் அரங்கத்தான் தாளிணையைச் சூழ்ந்திருந்து தொழுதிடுவன் யான்!

**புல 2 :** கோ என்றீர் பின்னும் நோக்கின்றேன் கோர்வையுள செம்பியர் குலத்துத்த செம்மலே! உன்னை சீர் அறத்தில் செய் திறத்தில், உள் கசிந்துருகுகின்ற பேரன்பில் பகைவரெல்லாம் சொந்தமென வந்துன்னைச் சூழா ரெனில் சொல்.

**புல 3:** கோ குருளைக்காகத்தன் கோகுருணைகதகத்தன்னைக்கடிந்த கோக்குலத்தின் கோவே உனை கோற்கும் பல்லாண்டு வாழ்த்தும் பார்புரக்கும் சேவகமும் என்றுமென்றும் இருந்திடுக நேர்

**புல, 4** மக்களல்ல மாக்களல்ல மரஞ்செடி கொடிகளல்ல பூண்டல்ல புல்லல்ல புலமைசேரா எதுவும் அல்ல சோழ மாராசன் தொட்டுருகின்ற ஆட்சியிலுல பண்ணையால மலைக் கின்ற பாப் போற எழுச்சியுறும புலமைதன்னை புலமை பெற்ற பூபாலன் வாழ்ந்திடுக!

(வலமான வாழ்த்திடையே மன்னனவன் மூழ்கி நிற்க பாடலுடன் ஒரு ஆடல்)

### காமபோதி இராகம்

**பல்லவி:** தாவி உலகளந்த தாமரையாள் கேள்வனையே
கூவித் தொழுகின்ற குயிலாள அவையை தொழுதேன்—தாவி

**அ. ப. ;** தேவ தேவி எனுமிந்த சித்திரத்தைப் பார் அரசே
அற்புதம் அனைத்தையும நர்த்தனத்தில்
சொல்லிடுவாள — தாவி

**சரணம்** காவிரிக்கும் எழில் கதிர்விரிக்கும ஒளி
போய் விரிக்கும புகழ், புதிதோ சோழருக்கு
ஆவ்ரித்த குறைக் கறந்த சோழர் [குலம]
பூவிரித் தென்கலையை போற்றிடல ஆகாதோ — தாவி

[பாட்டு முடிகிறது அரசனை வணங்குகிறாள் ஆடலரசி]

[அவையில் ஒரு நெகிழ்வு நிழலாட]

**அரசன் :** "இச் சொற் சரத்தைத் தொடுத்தது யார் பெண்ணே"

**தேவ :** அடியாள் தான் அரசே

**அர :** எழுதும் பழக்கமும் ஏந்திழைக்கும் உண்டு போலும். அற்புதம் அனைத்தையும் நர்த்தனத்தில் சொல்லிடுவேன் என்றவளே! செம்பியன் குலத்துச் சீர்மை தெரிந்தது

உன் ஆட்டத்தில். பெண்ணே உன்னைப் போற்றுவதோடு அல்ல, வணங்கவும் செய்கிறேன். என்குலத்தை வழிபட்ட மாண்புக்கு!

தேவி : அரசே—

அர : தயக்கமென்ன பெண்ணே, சட்டென்று சொல் உன் விருப்பமென்ன, கண் சிமிட்டும் போழ்தினிலே சோழர் காவியத்தை விரித்தவளே! என்ன வேண்டும் சொல் பட்டமா பதவியா பரிசா?

தேவி : கேளாமலே கிடைக்கும் கீழ்த்தரங்கள் இவை!

அர : [சிறிது அதிர்ந்து] பெண்ணே, என்ன சொல்கிறாய்?

தேவி : அரசே தாஸி வேஸி என்றழைக்கப்படும் நாங்களும் ஒருவனுடன் ஒருத்தியாக வாழும் மாண்பு வேண்டும். அதிலும் நான் முந்த வேண்டும் அதற்கான முறைகளை இன்றே இப்போழுதே செய்யுங்கள் அரசே

அர : செய்ய வேண்டிய முறைகளில் சிறந்ததைச் சொன்னாய் தாயே! சிரம் தாழ்த்துகிறேன் உன் சீலத்திற்கு

[வெளியில் ஆரவாரம் அனைவர் கவனமும் அங்கு, செல்ல சேவகன் ஓடி வந்து]

ஒன்றுமில்லை அரசே! மண்டங்குடி அந்தணரொருவர் மத போதகம் [பிரசாரம்] செய்து கொண்டு செல்கிறார்.

அர : அமைச்சரே வாருங்கள் போய் பார்ப்போம் (வெளியில் மக்கள் கூடமொன்று நம் விப்ர நாராயணரைத் தொடர்ந்து செல்கிறது பாடிக் கொண்டே] பாட்டு

மன்னனென முறை செய்து காப்பான்
மக்களெனக்கூடி நிதம் மகிழ்வான்
தென்னன் தமிழ்ச் சுவையைத் தருவான்
சித்தமிசை நின்றொளிர்ந்து வளர்வான்

நாராயணா நாராயணா லட்சுமி
நாராயணா நமோ நாராயணா!

அர : நல்லது! அமைச்சரே பாடலும் இசையும் பரவசமூட்டு கிறது. அந்தணர் செல்லும் வழியும் நல்லதாக இருக் கட்டும். இவரது சமயப்பணி தொடர்ந்திட துணை செய்யுங் கள் பார்ப்போம் இவரையும் (பெருமூச்சு)

—திரை—

## காட்சி 5

களநிலை—தென்பிலிற்றும் செழுங்கா ரங்கேச நந்தவனம் பக்கத்திலே கொணர்ந்து பல்லக்கை இறக்கிய பணியாளர்கள் தேவ தேவி—தமக்கை விப்ர நாராயணா.

ப.தூ : உம் இறங்குங்கள் அம்மா இங்குதான் கொண்டுவிடச் சொன்னார்கள்.

தேவி : நல்லது ஐயா மிகவும் நன்றி

தமக் : தேவி நம்மை சரியான இடத்தில் தான் கொண்டு விட்டிருக்கிறார்கள்.

தேவி : நானும் அப்படித்தான் எண்ணுகிறேன் அக்கா மலர்களின் மணமும் வருடுகின்ற தென்றலும் நம்மை என்னவோ செய்கிறது இல்லையா! கார் இருக்க சீர் இருக்க நம் கண்களை அல்லவா கொள்ளை கொள்கிறது அழகோ அழகு! இன்பத்தின் அடித் தளத்தை இப்படி யார் உருவாக்கியது அக்கா.

தமக் : சொல்கிறேன் அதற்குமுன் நீ உன்னை சிறிது கட்டுப் படுத்திக் கொள்

தேவி : சொல்லுகிறேன் எனக் கூறி சிறை வைக்கிறாயே என்னை நன்றாக இருக்கிறது போ நீயும் உன் நிதானமும்

தமக் : அதோ வருகிறார் பார் விப்ர நாராயணர்

தேவி : அரண்மனையின் மாடத்திலிருந்து அரசருடன் பார்த்தோமே அந்த இளங்காளையா? அரசர் கூட இவரது பணிகளுக்கு பரவசமுற்றாரே! அந்த அந்தணரா! வா வணங்குவோம்.

தமக் : நில்லு தேவி (கையைப் பிடித்திருந்து) இப்படி வா அங்கு சென்று பேசுவோம். அவரை உனக்குத் தெரியாது பெண்கள் என்றாலே பின் வாங்கும் பெருந்தகை.

தேவி : இன்னும் இருக்கிறதா அக்கா சீக்கிரம் சொல் என் உள்ளம் அவரோடு பேசத் துடிக்கிறது.

தமக் : வேண்டாம் சொல்வதைக் கேள் அவமானப்பட்டு அலையப் போகிறாய்.

**தேவி :** அவமானத்தை எதிர்பார்க்கவில்லை அக்கா, அந்த அந்தணரிடம் ஆவலை எதிர்பார்க்கிறேன். மழிந்தசிகையும் மலர்ந்த திருமுகத்தில் மாலவனின் திருமுடியும் செஞ் சுடரும் (தெற்றி நாமம்) தாவடமும் தோளும் தட மார்பும் பூணூலும் தழுவாதா! என்னை வந்து என்று தகிக்கிறேன். அவர் ஒன்றும் அலி இல்லையே மாலின் பால் மையல் கொண்ட மறையாளன் என் மடிவீழ பாடம் ஒன்றுமில்லையா நம் பரம்பரையில்? மங்கையர்க்குத் தெரியாத மதுர வித்தை எங்கு உள்ளது அக்கா

**தமக் :** அட பைத்தியக்காரி தேள் கொட்டிய குரங்கின் கதை யாச்சு உன்நிலை.

**தேவி :** ஆமாம் அந்நிலைக்கு நான் பெருமைப் படுகின்றேன் காசாசை பிடித்தலையும் வேசியர் குலத்தில் ஒரு விந்தை யாக வியப்பாக விளங்கப் போகின்றேன். காசுக்கு உடலை விற்று காலமெல்லாம் தொழு நோயாளியாய் இருப்பதை விட அந்த மறையாளர் திருமார்பில் வசிக்கின்ற அரங்கனுக்கு சிறிதேனும் பணி செய்து சிறக்க விரும்புகின்றேன். நீ போ அக்கா இந்தா நான் வேஷமிடும் ஆடையும் அணிகலனும் எடுத்துச் செல் உனக்கு என்மீது அன்பும் நம்பிக்கையும் இருந்தால் தாங்கள் இருவரும் வரும் நாளில் ஆரத்தி சுற்ற ஆயத்தமாயிரு போ.

**தமக் :** நன்றுத்தான் பேசுகிறாய் தேவி நான் வருகிறேன் (போய் விடுகிறாள் அங்கிருந்து)

**தேவி :** (தனக்குள்) அப்பாட கயிறு ஒன்றை அறுத்துவிட்டேன் இனி அந்த அந்தணன் கண்ணில் படும்படி ஏதேனும் காரியம் ஆற்ற வேண்டும் சும்மா ஒரு நாடகம் ஒத்திகை மண்ணைக் கொத்தி தண்ணீர் ஊற்றுவது போல் நடிக்கலாமா (இப்படி இவள் தந்நிலை மறந்து பேசிக் கொண்டிருக்கும் பொழுதே விப்ரர் அவளைப் பார்த்த அதிர்ச்சியுடன் அருகில் வருகிறார்

**விப் :** பெண்ணே நீ யார்

**தேவி :** ஒரு பெண் தான் அதைத்தான் தாங்களே கூறி விட்டீர்களே.

**விப் :** உன்னை யார் உள்ளே வர விட்டது.

**தேவி :** தேன் பிலிற்றும் மலர்களின் தெய்வீக நறுமணம்! இக்கா வில் கொழித்துக் கொப்பளிக்கும் குறைவலுப்பசுமைதனை

தாலாட்டி வளர்க்க தவழ்ந்து வரும் பூந்தென்றல் இளமையும் இன்பமும் ஏற்றமுடன் கொலுவிருக்கும் ஓலக்கம் ஆமாம், இந்த வளம் செறிந்த வனத்திற்கும் மறையாளராம் உமக்கும் என்ன சம்பந்தம்

விப் : பெண்ணே நன்றாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு ஏதேதோ உளராதே

தேவி : உண்மையைக் கேட்பதா உளறல் சரி தாங்கள் தான் சொல்லி விடுங்களேன் இந்த காவின் பால் தங்களுக்கு உள்ள உரிமையை சும்மாவாவது ஒரு பெண்ணிடம் வந்து அதட்டி அதிகாரம் செய்வது தர்மமா!

விப் : அதை அறிந்து கொண்ட பின்னர் நீ இங்கு அரைக் கணங் கூட நிற்கக் கூடாது. கேள், அரங்கனுக்கு என்றே படைக்கப்பட்ட இந்த ரம்ய நந்தவனம் அடியவனும் இந்த விப்ர நாராயணனுடையது.

தேவி : தாங்கள் தான் அந்த விப்ர நாராயணரா?

விப் : ஆமாம், தெரிந்து கொண்டாயல்லவா உடனே இங்கிருந்து போய்விடு

தேவி : உங்கள் துளவத் தொண்டில் யாரையும் அனுமதிக்க மாட்டீர்கள் போலும் பங்காளராக

விப் : பங்காளராகக் கூட அனுமதிக்க மாட்டேன் நீ இப்பொழுதே இந்த இடத்தை விட்டு அகலா விட்டால் இழுத்துக் கொண்டு போய் வெளியே தள்ளுவேன் ஒரு ஈ காக்கை கூட எட்டிப் பார்க்க முடியாத இந்த இளம் காவில் நீ எப்படி நுழைந்தாய்? உம்...

தேவி : ஒரு பெண் என்று கூடப் பாராமல் இப்படி உறுமுகிறீர்களே? [இப்படி இவள் சொல்லிக் கொண்டே வெளியேறுவதை இருவர் ஒளிந்திருந்து பார்த்து நகைக்கின்றனர்]

செய்வதறியாத தேவி நந்தவனத்திற்கு வெளியே இங்கும் அங்குமாக நடையாடுகிருள் அந்த இருவரில் ஒருவன் அவளிடம் வந்து "என்ன தங்கச்சி அக்காளிடம் போட்டியே சபதம் அது என்ன ஆச்சு என்று விளிக்கிருன்.

தேவி : (கடிந்து) உம், மண்ணாச்சு யாரைய்யா நீங்கள் உங்களுக்கு என்னிடம் என்ன வேலை

ஒரு 1 ஆங் அப்படிக் கேளு தங்கச்சி அதைச் சொல்லத்தான் நாங்க ரெண்டு பேரும் அரணமனை தொடங்கி இவ்வளவு தூரம் உங்க பின்னாலே ஒளிஞ்சி ஒளிச்சி வந்திண்டிருக்கோம்.

தேவி : என்ன ஒளிந்து ஒளிந்து வருகிறீர்களா ஏன் எதற்காக அப்படி?

அடுத்: அப்ப தானே உன் நடவடிக்கையைத் தெரிஞ்சுக்கமுடியும் ஆமாம் ஜெகஜாலம் செய்தாயே அந்தப்பார்ப்பான்கிட்ட என்ன சொல்றான் ஏதாவது குதிர்ந்ததா?

தேவி : உங்களுக்கேன் ஐயா அடுத்தவர் சமாச்சாரம் வம்பு பண்ணவா வந்தீர்கள் மரியாதையாகப் போய் விடுங்கள்.

ஒரு : (தேவியை கைபற்றி) அட சும்மா கிடதங்கச்சி துள்ளாதே உனக்கு அந்தப் பார்ப்பானை உண்மையிலே அடையணும்னு நாங்க சொல்வதைக் கேளு காதை இப்படிக் கொண்டா... (ஏதோ மெதுவாகச் சொல்லியப் படி) என்ன புரிஞ்சுதா? அப்புறம் பாரேன் உன் மடியிலே தான் அரங்கனே இருக்கார் என்பான் அந்தப்பார்ப்பான்

தேவி : (சிறிது யோசித்தபடி) நமக்கேன் இந்த நடைமுறை புலனாகாமற் போயிற்று, நல்லயோசனைதான் நாடகத்தை நாளைக்கே அரங்கேற்றுகிறேன் நன்றி சரி உங்களுக்கு ஏன் என் விஷயத்தில் இப்படி ஒரு அக்கறை யார் நீங்கள்

ஒரு : நாங்களா உன் பாட்டனின் பங்காளி ஏதோ பொட்டப் புள்ளே புருசனுக்கு அலையறயே என்று ஒரு யோசனையை சொன்னு எல்லாம் போகப் போகப் பாரு தெரியும்.

## காட்சி 6

களநிலை — காலை நேரக் கவின்மிகும் பொழுது திருவரங்கத்தம் மானை துயில் உணர்த்த கூடி இருக்கின்றனர் பக்தர்கள் கிளி மண்டபத்தில் ரங்கா ரங்கா என்று கிளிகள் மிழற்ற, சுருதிகூட்டி ஒரு பெரியவர் வீணையில் பிலஹரி ராகத்தை வாசிக்கிறார்.

மறையோடு இழைந்து நாதஸ்வரப் அமுதவாற்றை தோற்று வித்த அதில் அரங்கனுடன் எல்லோரும் குளிக்கின்றனர் நம் விப்ரரின் முறை, தாமியற்றி பண்படுத்திய திருப்பள்ளியெழுச்சி பாடலை பவுளி ராகததில் இசைக்கிறார்.

பசு ஒன்று வந்து நிற்க பரமனின் கதவு திறக்கப்படுகிறது. கற்பூர ஆர்த்தி, கூடியிருப்போரின் பரவசம் நாட்கள் காணும் நடப்பு இது-விப்ரர் தலையிலே தாங்கி வந்த பூக்கடை, குடலையை பட்டரிடம் தர அதை அணிந்த அரங்கன் இன்னும் பேரொளி யாய்த் திகழ அது கண்டு புளகத்தில் ஆழ்கிறார் விப்ரர், பூரிப்பால் நெகிழ்ந்த நெஞ்சில் நிழலாடுகிறான் அரங்கன்.

விப் : ஹே ப்ரபோ! ரங்கய்யா! அடியேன் வணங்குறேனப்பா! மறையார்ந்த பேரறத்தை வகையாக முறைப்படுத்தும் பேராளா! வையமளந்த மகிழ்வோ திகழ்வோ எனக் கிடக்கும் உன்னை மாறன் தமிழ் கொண்டு அர்ச்சிக் கின்றேன்! மாமலராள் மணவாளா! அடியவரின் அமுத வாறே என்றும் போல் இன்றும் யான் யாசிப்பது ஒன்று தான் ஐயனே உன் கட்டளையால் காலம் கடுகி விரைய லாம் அதில் என் கைங்கர்யம் நின்று நிறைவு பெற அருள் எதன் பொருட்டும் என் கைங்கர்யம் சிதைவுபடக்கூடாது தேவா! இறையைத் தொழுது கொண்டிருக்கும் வீணை வாசித்த பெரியவர்

பெரி : விப்ர நாராயணரே! உமக்குப் பிறகு இந்தத் துளவத் தொண்டு தொடருமா? அதற்கான முறை என்ன செய் திருக்கிறீர் சும்மா இதையே பெருமாளிடம் ப்ரார்த்தித்த வண்ணமிருக்கிறீர்

விப் : அடியேன் இருக்கும் வரை அழகாகச் செய்வேன் ஸ்வாமி!

அவர் : அரங்கனும் கோவிலும் உமக்கு பிறகும் இருக்கும் நித்ய வஸ்து, நிலையான பேரருள்

விப் : அழியாத உண்மை ஸ்வாமி! அடியேனுக்குப் பிறகு கோவிலார் கொள்ளாரோ ரங்கேச நந்தவனத்தை கைங்கர்யத்தை,

அவர் : கொள்வார்கள் நந்தவனத்தை ஆனால் உம்மை போற் பார்த்துப் பார்த்து அரங்கனை அளவெடுத்து மாலை கட்டும் மாண்பு யாருக்கு வரும்! பேசாமல் திருமணம் செய்து கொண்டு அழகிய மணவாளன் கைங்கர்யத்திற்கு ஒரு நல்ல பரம்பரையை வாரிசை உண்டு பண்ணுமே? உமக்கு என்ன குறை

விப் : தன்னிசையாக நடக்கும் கைங்கர்யம்! திருமணம் எதற்கு ஸ்வாமி! அரங்கனின் அருள்மணத்தால் ஆகாததும உண்டோ?

**அவர் :** எங்காவது தடுக்கி விழுந்து தத்தளிக்கப் போகிறீர் ஜாக்கிறதை, நம் சப்ரதாயத்தில் மோட்ச சாதனத்தின் முதற்படியே இல்லறம் தான் இது பற்றி உமக்கு தெரியா விட்டால் யாரிடமாவது கேட்டு தெளிவு பெறும்

**விப் :** ஏன் ஸ்வாமி அப்படி ஒரு வார்த்தை நம் சடகோபரில்லையா! மோட்ச உலகத்தில் மூலை முடுக்குகளை எல்லாம் அளந்து பார்த்தது போல் அறுதயிட்டுக் கூறி படி எடுத்தும் வைத்துள்ளாரே!

**அவர் :** (சிறிது வேடிக்கை விசனமுடன்) அவர் உம்மைப் போல் நந்தவனத்தைக் கட்டி அழவில்லை அந்த நாராயணனையே கட்டி அழுதார்! அழகிய மணவாளனை, அரங்கனை அவர் கண்ணெதிரே கண்டார், நீர் தெய்வமாகக் காண்கிறீர். அவர் தன்னை ஜடமாக ஆக்கி இறைவனோடு இரண்டறக் கலந்தவர். ஐடப் பொருளை செயலறுவது என்று பொருள் அவர் அறுதயிட்டதை படித்துப்பாரும்.

"கூடச் சென்றேன் இனியென் கொடுக்கேன் என்று கதறுகிறாரே புரியவில்லையா! தனக்கென ஏதுமில்லாத தன்மை "பேர்ரன் பேரேன் என்று என் நெஞ்சு நிறையப் புகுந்தான்" என்று தூய வஸ்துவை தன் வயப்படுத்தியவர் உம்மைப் போல் பூக்கூடையும் புண்டரீகமும தரித்து கைங்கர்ய ஆசையை வெளிக் காட்டவில்லை

போக்கொழிந்து புளிய மரத்தடிக்கு தண்டம் வசூலிக்க வந்த புரவலர்களைப் போல; எம்பெருமான் பலவடிவெடுத்து என்னைப் பாடு என்னைப்பாடு என்று வேண்டினான் நம்மாழ்வாரிடம். இங்கு நீர் வேண்டுகிறீர். ஆழ்வார் தன்னை பராங்குச நாயகி ஆக்கிக் கொண்டார் வைகுண்டத்தில் மாலை அடைவதற்கு எந்த நாயகியாகவும் உம்மால் ஆக முடியாது முதலில் உமக்கு ஒரு நாயகியைப் பாரும் கைங்கர்யம் என்பது வேறு இரண்டறக் கலப்பது என்பது வேறு

**விப் :** [தந் நிலையடைந்து] ஸ்வாமி வீணை வாசிப்பதே போல் இருக்கிறது தங்கள் பேச்சும் பொருளும் ஆனாலும் அடியேன்...

**அவர் :** புஷ்ப கைங்கர்யமே பெரிதென்பீர் போய் வாரும்

—திரை—

களத்திலே—கோவிலை வலம் வந்து கொண்டிருக்கும் விப்பரை தென்திருச்சுற்றில் ஒரு கூட்டமும் பெண்ணின் பேச்சும் வரவேற்கிறது சிறிது எட்டிப் பார்த்து விட்டு ஒரு புறமாய் நிற்கிருர்.

**தேவி :** பெரியோர்களே! ஆதலால் அடியேன் சொல்லுகிறேன் நாரணன் சப்தமே எங்கும் ஒலிக்க வேண்டிய ஒரே சப்தம் அதை நெறிப் படுத்தி விளக்கும் விப்ர நாராயணர் போன்ற தன்மையும் தகவும் மிக்கவர்களை நாம் பின் பற்றுவதே நாட்டிற்கும் வீட்டிற்கும் நல்லது நேற்ருே இன்ருே இறக்குமதியாகி ஏதேதோ கூறித்திரியும் பிற கோட்டுபாடுகளை நம்பி வாழ்வை பணயம் வைக்காதீர்கள்! வைணவம் அது ஒன்றே நம் வாழ்வில் ஒளிகாட்டும் மணி விளக்கு அது காட்டும் நல்வழியிற் சென்று அமைதியும் ஆநந்தமும் பெறுவோம் வைணவம் வாழ்க [இந்த வாழ்த்தொலியை கூட்டத்தில் சிலர் முழங்குதல்]

**ஒரு :** எழுந்து இப்படி எல்லாரும் நாங்கதான் பெரியவங்க நாங்கதான் பெரியவங்க அப்படின்னு, சொன்ஞ நாங்க தான் யாரை நம்புவது.

**தேவி :** எங்களை நம்புங்கள் இந்த நாட்டின் மக்களான உங்களை நம்புங்கள் ஏன், இவ்வளவு பெரிய கோவில் மீது உங்கள் நம்பிக்கை செல்லவில்லையா? அங்கு சயனித்து இந்த நாட்டின் சாந்தி அமைதி ஆநந்தம் இவைகளின் சான்றாக கண்வளருகின்றானே பெரிய பெருமான் அழகியமணவாளன் அவனை நம்புங்கள்ஏன் நம்பெரியவர்கள் மீதும் உங்களுக்கென்று வாழ்நெறிகளை வசதி வாய்ப்புகளை கண்ணுக்கெதிராக்காட்டி வைத்திருக்கும் உங்கள் பெரியோரை நீங்கள் நம்புங்கள் அப்போழுது தான் நீங்கள் பெரியவர்கள் நாளைய உங்கள் வழி வம்சத்திற்கு காட்ட வேண்டிய கருவூலம் அதுவே! வந்தாரை வரவேற்று விருந்து வையுங்கள் வசப்பட்டு விடாதீர்கள் அருமையும் பெருமையும் எல்லோரிடத்உண்டு. நாம் நம் நிலையில் நின்று சிறிது நகர்ந்தாலும்அடிமைகள் என்று அடையாளம் குத்தப் படுவோம் பிறசமயத்தவரின் வேட்டைக் காடாக நாட்டை ஆக்கிவிடாதீர்கள். நண்பர்களே!

**ஒருவன்:** அருகில் அமர்ந்துள்ள விப்ரரிடம்—ஏன் சாமி யாரு இந்த பெண்பிள்ளை ரொம்ப நேரமா பேசுது ஆனலும் எங்கள் நினைப்புக்கு பதில் இல்லை உம் உழைப்பு அதன் பலன் இது பற்றி ஒருவராவது பேச மாட்டேன் என்கிருங்களே!

[அப்போது சிறு சல சலப்பு]
''இப்படித்தானப்பா போட்டு குழப்பறானுங்க''

''உருப்படியா ஏதுமில்லே''
அது போழ்து விப்ரர் எழுந்து தேவ தேவியின் பக்கம் வருகிறார் அவள் வணங்குகிறாள்.

விப் : என் அரிய உடன் பிறப்புகளே! அமைதியாக இருங்கள் வணங்குகிறேன். உழைப்பையும் பலனையும் எண்ணிக் கொண்டிருக்கும் உங்களிடையே சமயத்தைப் பற்றி பேசுவதே தவறு. நீங்கள் வருவதும் தவறு

உழைப்பு என்று ஒன்றைச் சொல்வது சமயம்
பலன் என்பது வாணிபம்
உழைபுக்குப் பலன் உழைப்புத்தான்

உழைப்பு உடைமையைத் தனதாக்கிக் கொள்கிறது அதே போல் உடமையும் உழைப்பவனுக்கு உற்சாகத்தைக் கொடுத்து ஊக்குவித்து இன்னும் பல கற்றுத் தத்து ஏன் உமைத்தமே கொள்ளச் செய்கிறது.

இன்று தங்கத்தை உருக்கத் தெரிந்த ஒரு தட்டான் நாளை ஒரு கை வளயலைச் செய்வான் பிறகு ஆரங்களை அணிகலனைச் செய்வான் நிறையச் செய்து கலைஞன் என நிமிர்வான்

அதன் மூலம் அவன் அடைந்த பலன் என்ன செயல் என்ற பெருமை ஒன்று தான் செயலும் அதில் தெரியும் உருவமுமே சிறப்பு பலன்

நண்பர்களே உங்கள் எதிர்பார்ப்பு ஊழியம் ஊதியம் என்பது அதற்கு வணிகர்களும் தனவந்தர்களும் ஏன் நீங்களும் தான் கூட வேண்டும்.

ஊழியம் என்பது அடிமைத்தனம்
ஊதியம் என்பது எதிர்பார்ப்பு ஏமாற்றம் இயலாமை
வாழ் நெறிகளை வகுத்துத் தருவது சமயம்
வாழ்வின் தேவைகளைத் தருவது வாணிபம்
வாணிபம் என்பது வளரும் தேயும்!

சமயம் என்பது நல்ல சமயங்களை உருவாக்கும் பொறுப்பில் உள்ளது. கலை பண்பாடு நம் அமைதி ஆற்றல் அறம் இவைகளை காத்து வளர்க்க மட்டும் வேண்டிய ஒரு அமைப்பு.

இதற்கு நாட்டுப் பற்று என்னும் வேள்வித் தீயை நெஞ்சிலே வளர்த்துக் கொண்டு உழைக்க வேண்டும். ஆம் இதுவும் ஒரு பேருழைப்புத்தான் நாடி நரம்புகளும் ரத்தநாளமும் மூளையும் எங்கெல்லாம் செயல் படுகிறதோ அங்கெல்லாம் உழைப்பைக் காணலாம்.

அன்பு அருள் பண்பு பரிவு இவைகள் தாய் என்றால் அறிவும் பகிர்வும் தகப்பன் முன்ன அவை சமயம் என்றால் பின்னவை வாணிபம். அதுவே ஊதியத்தின் பாற்பட்ட உழைப்பு! தொழில்!

எனக்கு முன் பேசிய மாதரசி சமயத்தைப் பற்றி அதன் அவசியத்தைப் பற்றி பொற்பந்தலிட்டு அதில் உங்களை புகவைத்து அனைவருள்ளத்திலும் ஒளி சமயவொளி வையவல வாழ்வு எனும் மணிவிளக்கை ஏற்றி உள்ளாள் அதை எரிய விடுங்கள்.

அடியேனும் உங்கள் எதிர் பார்ப்பான உழைப்பு பலன் என்பவற்றிற்கு சிறிதேனும் பதில் தந்ததாக எண்ணுகிறேன் விடைதாருங்கள் மீண்டும் சந்திப்போம்.

கூட்டம் கலைகிறது தேவியிடம் முன்பு பேசிய அந்த இரண்டு முரடர்களும் முன் வந்து

"கொஞ்ச இருங்க சாமி வண்டியிலேபோகலாம் என்றுமாட்டு வண்டியைக் கொணர்ந்து" எங்க சாமி நந்தவனம் தானே டேய் சாமியையும் இந்த அம்மாவையும் எங்கே போகணுமோ அங்க விட்டு வாங்கடா என்று பணிக்கிறான் வண்டி நகருகிறது.

—திரை—

துணைக்களம்—தேவியிடம் பேசிய இரண்டு முரடர்கள்

ஒரு : ஏன்ண்ணே, என்னென்னவோ ஜாலிப்பு வேலை எல்லாம் செய்யறையே, இப்போ அவங்க ரெண்டு பேரையும் வண்டி கொண்டு வந்து ஏற்றிட்டயே இதனாலெல்லாம் நமக்கு என்ன லாயம் அந்தப் பொண்ணு நம்ம கண்டுக் கவே இல்லையே.

அடுத் : கண்டுக்காமே போனா அவ கழுத்தைத் திருப்பிட மாட்டேன். என்ன லாபம்ன்னு கேட்டே அவங்க ரெண்டு பேரும் ஒரே வண்டியிலே போகிறதே நமக்கு லாபம்தான் சரி வா நந்தவனத்திலே போய் என்ன நடக்குதுனு பார்ப்போம்,

### நந்தவனம்—விப்ரர் தேவி

**விப் :** பெண்ணே வைணவத்தின் பால் நீ கொண்ட பக்திக்கும் பற்றுக்கும் என் பாராட்டு. நீ இனி இங்கிருந்து போகலாம்.

**தேவி :** எங்கு ஸ்வாமி போவது பாழும்! இரைற்றுக்கா பாய்ந் தோடும் காவேரிக்கா நிசி நெருக்கும் வேளை-பசி கூடத் தெரியாமற் உங்கள் பாதம் பற்றி வந்த என்னை பெண் ணென்று கூடப் பாராமல் போக சொல்கிறீர்களே! இது தான் நீங்கள் கடைப்பிடிக்கும் வைணவ மாண்போ!

**விப் :** நிறுத்து பெண்ணே, உன் பேச்சின் சுவையறிய உன்னை நான் இங்கு அழைத்து வரவில்லை. தவிரவும் ஒரு பொதுக் கருத்தை போதகம் செய்யும் நம்மிடையே பிறர் பேதம் காணக் கூடாது என்று தான் உன்னுடன் வண்டியிலும் வந்தேன். தனியாகக் கட்டுப்பாடான வாழ்க்கையில் காலம் தள்ளும் எனக்கு பிறர் ஒருவர் என்னுடன் இருப்ப தாக எண்ணுவதே சுமையாகத் தெரிகிறது அதிலும் நீ பெண் அப்பப்பா தயவு செய்து .........

**தேவி :** இங்கிருந்து போய் விடு என்கிறீர்கள். அப்படித்தானே! அதைத் தான் நீங்கள் சொல்லுங்கள் ஸ்வாமி தனியாகத் தவித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணை நட்ட நடு நிசியில் எங்கு போகச் சொல்கிறது உங்கள் வைணவம்! சொல்லுங்கள் (பதட்டமடைகிறள்)

**விப் :** குழப்பமடையாதே பெண்ணே எப்போழ்தும் எங்கும் யாரையும் அந்த அரங்கன் கைவிட மாட்டான் வைணவத் தின் பால் நீ கொண்ட நம்பிக்கை வாழ்வதற்காக உன்னை இன்றிரவு இந்த நந்தவனத்தில் தங்க அனுமதிக்கிறேன். அந்த மூல்லை புதரிடையே முடங்கிக் கொள் நீ விடும் மூச்சுக் கூட என் காதில் விழக்கூடாது.

**தேவி :** வணங்குகிறேன் ஸ்வாமி (போகிறள்)

—திரை—

*களநிலை—சிறிது நேரம் சென்றிருக்கும் அங்கொரு பல்லக்கும் இரண்டு மூன்று குதிரை வீரர்களும் வருகின்றனர். விப்ரரைக் கண்டு வணங்குகின்றனர் தேவியும் சிறிது பதட்டத்துடன் அங்கு வருகிறாள்.*

**வீரன் :** அந்தணாளரே நாளைக்கு நம் அரசபெருமான் செங்கோல் பெற்ற நாளை சிறப்பாகக் கொண்டாட இருக்கிறார் அதில் தாங்களும் கலந்து கொள்ள வேண்டும் என்பது அரசரின் அவா.

**விப் :** மிக்க மகிழ்ச்சி, அதற்கு ஏன் இந்த நடுநிசி அரவம்.

**வீரன் ;** மன்னிக்க வேண்டும் மறையவரே! நாளைய விழா காவிரி அன்னைக்கும் களிப்பூட்டியது போற் ஆற்றில் வெள்ளம் சிறிது சுற்றி வந்து பயணம்

**விப் :** அடடா தெரியாமல் கேட்டு விட்டேன் பாவம்களைப்பாய் இருப்பீர்கள் அதோ அந்த மல்லிகை மாடத்தில் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். விடிந்ததும் புறப்படலாம்.

**வீரன் :** (தேவியைப் பார்த்து) அம்மணி நீங்கள் கரம்பனூர் தாஸி தானே!

**விப் :** ஐயோ அரங்கா! அடியேனை இப்படியொரு எரிமலையின் வாய்ப்பட வைத்தாயே என்ன அபசாரம் செய்தேன்.

**வீரன் :** நீங்கள் நினைப்பது போல் அல்ல இவ் அம்மையார் உயர்ந் தவராகக் கருதப்பட வேண்டியவர். அன்று அரச அவையில் ஆட வந்த இவர் அரசனின் பரிசுப்பொருளை பரிகசித்து தன் குலத்தின் இழிவு அகற்றுவதே எனக்காகும் பரிசு அதற்கென முறை யொன்று காணல் வேண்டும் என முழங்கினார் அரசர் அதிசயத்துப் போய் ஆவன செய் கிறேன் என்றார்.

**விப் :** அப்படியா நல்லது. வீரரே இந்தப் பெண் அரண்மனைக்கு அறிமுகம் ஆனவள் என்று சொல்லுங்கள். கேட்க பெருமையாக இருக்கிறது. சரி நீங்கள் போய் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள் நாளையப் பொழுது நாட்டிற் காகப் புலரட்டும் (திரும்பி தேவியைப் பார்க்கிறார். கம்பீரமான நாணத்துடன் தேவி மௌன வணக்கம் செய்கிறாள்)

—திரை—

## காட்சி 7

களநிலை—சுருண்டு எழுந்த குழந்தை சுற்றிலும் பார்ப்பதே போல வைகறைப் போழ்து வனப்பினைச் சொரிய—உறையூரின் மாடக்கொடி மதின் மத்தியிலே புலிக் கொடியின் ஆரோகணக் கோலம் வீசிப் படர்ந்து விரட்டிக் கொண்டிருந்தது சிறுமை என்னும் பகையை,

எதிர்பார்த்த சேமான் வந்துவிட்டாற் போன்ற ஒரு நிறைவில் நிசப்தம் அரசவையை அலங்கரிக்க அமைச்சர் எழுந்து அனைவரையும் வணங்கி அரசனை அவன் ஆணையைப் பெற முயலுகிறார்.

அமை: அரசே,

அர : கூறுங்கள் அமைச்சரே, என் பொருட்டு இந்த எளியேன் செங்கோல் பெற்ற சிறப்பான இந்நாளைப் பற்றி கூறுங்கள், புலிக் கொடியின் அசைவிலே இச்சிறியேனின் பணி தெரிகிறதா என்று வந்திருக்கும் எதிரி, மாற்றாரிடமும் கேளுங்கள் இது ஒலக்கம் அல்ல அமைச்சரே உந்துகின்ற எண்ணங்கள் ஊற்றாகப் பெருக்கெடுத்து ஒரு நல்ல அரசை நாட்ட வேண்டிய கருத்தரங்கம். சமயச் சான்றோரும் நலம் சார்ந்திருக்கும் ஆன்றோரும் இந்த அரசில் விஜய ஆலய சோழன் முதல் குலோத்துங்கன் வரை கட்டிக் காத்த சோழியர் குலத்தின் அன்பும் அறமும் பண்பும் பரிவும் தெரிகிறதா என்பதை நயம்பட உரைக்க வேண்டிய ஒரு பேரரங்கம்.

மீசையிலே கை போட்டு வீரநடை போட்டு வேங்கையென வரும் வீரத்தமிழனைப் பாரடா என்று என் குல ஏந்தல்களை ஏற்றியவர்கள் போற்றியவர்கள் இன்று இந்தச் சிறுவனைப் பற்றி செய்கின்ற செய்தியை தெரிந்து கொள்ளத் துடிக்கும் எனக்கான தேர்வரங்கம்

ஒளவை: எழுந்து செம்பியன் குலத்தோன்றலே! அமைதி அமைதி பெறுக நின்சீர் பெருக இன்னும் வாழ்த்துகிறேன் இங்கு உன் செங்கோல் திருவிழா வுக்கென வந்திருக்கும் அனைவரும் உன் மாட்சி காண பெருமக்களே தீவிர தாழ்ச்சியைக் கண்டவர்கள் அல்லர். சோழர் குலக் காவிலே சூழ்ந்து விளையாடும் தென்றல் நீ இளமையே

என்றும் அதன் களநிலே வாழ்வு ஒன்றே அங்கு வளர வரும் உன் தன்னிரக்கம் தகமையின் சான்று மன்று! இது போன்ற ஒரு விழாவும் அவையும் எங்ஙனம் இருக்குமோ என்பது ஐயமே! ஆதலால் உன் தன்னுபவை விடுத்து எங்களுடன் கலந்து இவ்விழாவினை முறைப் படுத்து.

அர : (அமைதியடைந்து) இச்சிறியேன் மீது மாறா அன்பு கொண்ட மறவர் குல மாணிக்கங்களே உங்கள் அனைவரையும் வரவேற்று வணங்குகிறேன்.

இக் கலையாவும் சீர் அவையில் ஆடலையும் பாடலையும் தவிர்த்து சில நோக்கர்களின் கருத்தாய விரும்புகிறேன். அந்த வகையில் இந்த அவைக்கு முதலாவதாக வருகை தரும் மறைவேதும் இல்லாத மறையாளர் விப்ர நாராயணரை அழைத்து மனத்தனவிலான அர்க்யம் வார்த்து என ஐயப்பாடுகளை அதன் காரண காரியங்களை பகிர்ந்து கொள்ள அழைக்கிறேன்.

விப் : பெரியோர்கட்கும் கலையும் கவினும் போட்டியிடும் இம் மனத்திற்கும் இம்மன்றத்திற்கும் அடியேனின் தெண்டன் களை சமர்ப்பித்து அரசருக்கு நன்று கூறுகிறேன்

ஓ வித்; நன்றியேன் கூறுகிறீர் வேதியரே?

விப் : வாய்ப்பினைத் தந்த வளமைக்கு

முதல் : நன்று, மனிதனுக்கு வேண்டியது?

விப் : தீராத நாட்டுப் பற்று! தேசாவேச ஓசையின் நிகழ்வு!

அடுத்: இதற்கொரு களம் காட்ட முடியுமா!

விப் : நல்ல வேடிக்கை சற்று முன் தானே பாத்தீர்கள் நாட்டுப் பற்று என்னும் களத்திலே வீழ்த்த காவலனை.

அமை: (ஆர்வமுடன்) இருக்கட்டும் இன்னும் சொல்லுங்கள்

விப் : போரின் வெற்றியை மட்டும் நாட்டுப் பற்று என்று கணக் கிடும் நன்மையின் பால் உடன்பாடு இல்லாதவன் நான்.

அமை: நல்லது புதிதாகச் சொல்லுங்கள்.

விப் : புறச் சமயங்களின் புறப்பாட்டை அந்த அந்த இடத் திலேயே ஏன் வந்த இடத்திலேயே கொண்டு திறுத்தி

தண்ட செய்ய வேண்டும் என்று என் போன்றோரின் துடிப்பும் துள்ளலும் நாட்டுப் பற்று எனும்எளிமையாம்!
[சபையின் ஆரவாரம் சலசலப்பு]

அர : சலசலப்பு வேண்டாம் அமைதியாய் இருங்கள்

தேவி : மன்னிக்க வேண்டும் அரசே, கானல் நீராகாது என்கிறார் விப்ரர் இதில் தவறென்ன அரசே

அர : நல்லது தேவி உன் முறை வரும் போழ்து நீ சொல்

ஒரு : நல்லவை எங்ஙனம் இருக்கலாம் எடுத்துக் கொள்வதில் என்ன தவறு

விப் : இணைத்துக் கொள்கிறோமே அது தான் தவறு

ஒரு : [பொறுமி] அரசே அதிகம் பேசுகிறார் இவர், இந்த உலகத்தில் இவர் ஒருவரே கொலுவிருக்க ஆசை!

விப் : பூத்துக் குலுங்கும் செழும் தருக்களிலே காயும் கனியும் தான் தொங்கும், கல்லையா கட்டி தொங்கவிடமுடியும்.

ஒ சம: அரசே அவையைக் கூட்டி எங்களை அவமானப் படுத்தல என்ன நியாயமோ இனியும் இந்த அந்தணர் பேசினால் நாங்கள் வெளியேறுவோம்.

அர : சுத்தானந்தரே சும்மா இரும் அவர் சொல்வது எதும் எனக்கு ஒருமைப்பாடோ உடன்பாடோ அல்ல, முடிவும அல்ல, நீர் கூறும விப்ரரே உங்கள இல்லை நம சமயதின் இறைநிலையை இவர்கட்கு எபபடி உணர்த்துவீர்கள்.

விப் : தயிரைப் பெறுவதற்கு தயிரையே ஊற்றுதல் போல் இறையைக் காண்பதற்கும் அறிவதற்கும அவன் அருளே வேணடும். முருகிபெழும் அன்பின் துணை கொண்டு வேண்டி வேண்டி அதனைப் பெற வேண்டும்.

அமை: இந்த அன்பையும் அருளையும் கடைகாலாகக் கொண்டு தான் எல்லாச் சமயமும் தன பயணத்தை தொடஙகு கிறது தயிரைப் பெறுவதற்கு தயிரை ஊறறுதல போல என்றபடி ஏதேனும் ஒரு கருத்தை இங்கு விரியுமே

விப் : ஆயிரம் கூறிச் சென்றனர் நம் ஆன்றோர்! பாலில் நெய் யாய், விறகில் தீயாய், வினையின் செயலாய் எத்தனையோ ஆனாலும் இறைவனைப் பற்றிய ஒரு உயிர்ப்பினை கூறு கிறேன் அமைச்சரே தேற்று அரங்கனின் நந்தவனத்திற்கு

நீங்கள் அனுப்பிய பல்லக்கும் வீரர்களும் வருவதற்கு சற்று முன்பு உங்களால் தேவி தேவி என்றழைக்கப்படும் இதோ இந்தப் பெண் பாயும் ஆற்றையும் பாழும் கிணற்றையும் தேடிக் கொண்டிருந்தாள், இது பொழுது உங்கட்கு ஏற்கனவே அறிமுகமானவளாகி, எனக்கென வந்த பல்லக்கிலே ஆரோகணித்து இங்கு வந்து எனக் கொகு கேள்வியாகி இங்கு ஒளிருகிருள்.

நான் பிரமிப்பில்தான் இதைக் கூறுகிறேன். எப்படி வந்ததுஇந்த சன்னத்து என்று யோசிக்கிறேன்.

அர : சொல்லுங்கள் விப்ரரே சுவையாக இருக்கிறது.

விப் : அரசே சனாதன தர்மத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய ஒவ்வொரு குடிமகனும் நீங்கள்உள்பட, செய்யவேண்டிய தொண்டினை நான்கு நாட்களாக அவள் செய்துவருகிருள் ஐயமற ஒளிரும் அரங்கனின் புகழை அனைவரிடமும் பாட்டாக, பண்ணுக, சொல்லாக பரப்புகிருள். பரப்பச் சொல்கிருள் அதன் விறு அவளுக்கு ஒரு பேறு ஆகி நம்மிடையே நடையாடச் செய்திருக்கிறது. இது வினையின் விளைவு மட்டும் அல்ல, வேண்டி அடைகின்ற பேறும் ஆகும்.

அமை: அருமையான விளக்கம் விப்ரரே அணிந்தே நடந்து ஒரு செய்கையில் உண்மையில் நீர் இறையின் இன்னருளைக் காட்டியது பெருமைதான்

அர : வைணவத்தின் மாண்பு இறை நிலைக்கு இடும் அணி யென்ன!

விப் : பரம்—வியூகம்—விபவம்—அந்தர்யாமித்வம் அர்ச்சை.

ஒரு : பொருள் கூற வேண்டுகிறேன்.

விப் : பரம், இறைவனின் நிலையான இருப்பிடம் அரசனின் ஒலக்கம் சிம்மாசனம் போல்,

வியூகம்—ஒரு அமைப்பு அரசனின் மந்திர ஆலோசனை சபை,

விபவம்—மகிமையைக் கூறுதல். அவதாரங்கள் பல எடுத்து மக்களை அணுகி துயர்களைதல் மாறு வேடங்கள் மூலம் மன்னன் பணி தொடருவது போல.

அந்தர்யாமித்லம்—காணுகின்ற பொருள்களில் எல்லாம் கலந்து காப்பது—அரசாணை எங்கும் நீக்கமற நிறைந்திருப்பது போல்,

அர்ச்சை இது தான் பெரும் சர்ச்சைக்குள்ளானது இன்று நாத்திக வாதம் பேசுவோருக்கு நல்லதொரு வடிகால் ஆனாலும் வளர்ந்து கொண்டே வரும் ஒரு வாய்ப்பு இது. ஆமாம், இறைவனை அனுகி அம்மையாய் அப்பனாய் நண்பனாய், நம்மைப் போலவே அவனையும் நினைந்து, குளிப்பாட்டி உடுத்தி அணிந்து அழகுபார்த்து அறுசுவை உணவளித்து பார்த்துக் களித்து, வாழ்வின் பாரங்களை இறக்கி வைக்கும் மையம், இந்த பேராற்றல் கொண்ட வாய்ப்பு, இது மன்னனிடம் நாம் கொண்ட அன்பை, பற்றுதலை, நன்றியை காட்டுபவன ஆகும்.

**அர :** உட்பட சிலர் நன்று நன்று விப்ரரே வென்றீர், வாழ்த்துக்கள் அதில் நடுநாயகமான ஒன்றை கூறுமே.

**விப் :** அரசே இன்று இந்த ஏழைக்கு ஏன் தேர்வும் திகைக்க வைத்தலும்.

**அமை:** நாங்கள் திகைக்கிறோம் விப்ரரே இத்தனை நாள் உமது வித்தையின் விக்கிரப்பில் வீழாமல் போனோமே என்று நீர் கூறும். இறைவன் அணித்தாக இருந்து காப்பதை.

**விப் :** ஏன் எல்லோருக்கும் தெரியுமே நரசிம்மாவதாரம் பற்றி

**ஒகு4** எழுந்து— நிறுத்தும் நரசிம்மாவதாரம் உம் சமயத்தின் ஒரு சாபத்திடு கோட்பாடல்ல.

**விப் :** சரி, இப்படி ஒரு சாபத்திடு உங்கள் சமயத்தில் வேண்டாம். ஏதேனும் ஒரு சமயத்தின் இருந்தால் சொல்லுங்களேன்.

**தேவி:** இருந்தால் அவர்கள் ஏன் இங்கு வருகிறார்கள்,

**ஓசம:** அரசே எங்கள் சமயம் இது போன்ற அரங்குகளில் பெண்களை பார்வையாளராகக் கூட அனுமதிப்பதில்லை,

**தேவி:** அருமை தெரியாதவர்கள் அப்படித்தான் செய்வார்கள்; என்ன செய்வது எங்கள் சமயம் நல்ல வார்த்தை பேச வேண்டும் என்பதற்காக நாவிலும, எப்போழ்தும் இதயத் துடிப்பு இருக்க வேண்டும் என்பதற்காக தன் மார்பிலும், எதிலும் பெண்ணின் பங்கு இருக்க வேண்டும் என்பதற்காக பாதி உடலையும் நீதியாகச் செய் வை யிர்றோ! நாங்கள் பு ம் பார்க்க முடியுமா!

அர : இது போழ்து உன் குறுக்கீடு அவசியமா தேவி சிறிது பொறுமை பொறு. நாங்கள் இப்போழ்து விப்ரரின் வானவெளிப் பயணத்திற்கு ஆயத்தமாகிக் கொண்டிருக் கிறோம்! ஒரு தெய்வீகத் திகழ்வு தேன்மழையைபொழியப் போகிறது. இப்போழ்து எங்கள் குலதெய்வம் காவிரி யாறு பொன்னித்தாய் அகில சந்தனத்தை அள்ளிக் கொணர்ந்து நம்மையெல்லாம் தழுவப் போகிறுள்! விப்ரரே ஏனித்த செயலிழப்பு!

விப் : ஆச்சரியமாக இருக்கிறது வளவா. நீ என்னை அழைத்து அர்க்யம் வார்த்தது. துள்ளி வரும் உன் சொல்லழகிற்கு நான் தோற்றேன். என் உள்ளம் என்னை எச்சரிக்கிறது நீ ஒரு மாணுக்கன்தான் என்று.

அரசே நரசிம்மாவதாரக் குறித்து என்னிலும் மிக்கோர் பொழிவதே சிறப்பு, நலம். அந்த அவதாரம் பற்றி எண்ணும் போழ்தே தணிவும் கனிவும் கொண்ட ஒரு பயங்கரம் சூழ்ந்து நம்மை எச்சரிக்கவில்லையா! ஆட் கொள்ளட்டும் அவன் அருள்!

இறைவனைத் தொழுவதற்கும் சில பொழுதுகளை அடைவாகக் (அனுபவம்) கொண்டனர் பெரியோர் சவலைக் குழந்தைகள் சதா தாயைப் படுத்துமா போல எடுத்ததற்கெல்லாம் இறைவனைத் தேடல் அவனது நலம் குறைப்பதாகும் என்பது எளியேனின் எண்ணம்.

"ஸர்வபூத நிலாயேவா ஸி" என்பது இறைவனை முழுமையுறக் காணும் ஒரு வடமொழிச் சொல்.

இதனை மெய்பிக்க வந்த இறைவன் எங்கள் மால் அனைத்து உயிர்களையும் தன்னுள் அடக்கித் தரித்தவன் சடம், முடம் என்றில்லாமல் கீழ்மேல் காணுமல் அனைத்து இடத்திலும் தன்னை அடைத்துக் கொண்டு ஒரு கணத் திற்காக காத்திருந்தானே அதுவே சிம்மாவதாரத்தின் சிறப்பு.

உயிர்களை அவன் நேசிக்கும் மாண்பு!

உயிர்கள அவன் மேல் கொண்ட நம்பிக்கையின் நிறைவு!

அதிலும் ஒரு சிறுவனின் நம்பிக்கைக்காக தன்னையே ஒரு கடைக்காலாக அத்திவாரமாக ஆக்கிக் கொண்டிருக்கிறான்.

இதனை அருள் என்கோ! அன்பென்கோ! அணித்திருந்து காக்கும் மெய்யென்கோ! என்கோ நீ கூறும் அறம் என்கோ! என்னென்கோ!

அடியவரைக் காக்க அவன் வந்த வழக்கம் கொண்ட வடிவமும் அடடா!

மறைகாக்க மீனன் கடவாய!

வரை காக்க ஆமையானான் அதன் ஓடு குறையா வலிதென்று.

மண்ணவனைச் சிறை மீட்க பன்றியே ஆனான் தேடுதற்கும், பிறை போன்ற தன் செவ்விய பற்களால் உருண்டையான மண் மகளை தாங்குதற்கும் பொருட்டாக.

இதையே மாறன் சடகோபன் மகிழ்ந்துரைப்பான். ''நீல வரை இரண்டு பிறை கவ்வி நிகர்ந்த தொப்ப'' என்று

இப்போழ்து செங்கட் சீயம் செவ்வாய் கொப்பளிக்க பிடரி புடைத்து எழுகிறது.

[அவையில் அரசன் உட்பட அனைவரும் எழுகின்றனர்-பயமும் பக்தியும் மிக்கூற]

தன் கோர வல்உகிர் கொண்டு அடியவர்களைத் துன்புறுத்தும் தீமைகளைத் தேடுகிறது.

தூணைத் துணையாக சிலிர்த்து எழுந்து கர்ஜிக்கும் அந்த பேரிசையில் பிடிபடாமல் திசை திகைக்க கடல்கலங்க மண்ணும் தன் வயமிழக்க ஏதோ ஈதோ என பிற உயிர்கள் பிடரிபட அணுக்கர்களை இன்னும் அனைத்து மகிழ ஆவலுற்றது அச்சிங்கம்.

எங்கே எங்கே என்று தேடியது தன் இரையை அணுக்கர்களின் பகைவை,

பீதாம்பரம் தவழ்ந்து தழையும் தன் திருமார்பகத்தை இன்னும் விரித்துக் கூற விச்வரூபமே எடுத்தான் என் ஐயன்.

ஒரு பெரும் யாக குண்டத்திலிருந்து வரும் தீப் பிழம்பொன்று ஆசையும் ஓசையும் மிக அலைவது போல் அவன் அதிர்ந்தான்.

தீ தீ தீ எங்கணும் சூழ ஒரு திகழ்வுத்தீ ஜ்வாலையை மாலை யாக்கி சொல்லொணு கதிர் கூட்டங்களை திருமுகமாக்கி சாடி ஆடிய தீ தீமையே உருவான தீமையைப் பற்றியது!

அரக்கர் குலக்காவலன் ஆடித்தான் போனன் [illegible] இந்த அவதார மாண்பு கண்டு.

சேவிக்க எண்ணினான் ஆனல் அகந்தை ஆட்கொண்டது.

போய் ஒளிந்து புறங்காட்ட நேரமில்லை நிலைவுமில்லை. அரக்கர் குலக்காவலனை அச்சம் தீண்டியது.

மிச்சமாயிருந்த மேனியையும் இழுத்து கிடத்தினான். கோளரி யாய்வந்த கோவிந்தன் தன் மடியிலே

ஆஹா! எத்தகைய பெரும் பேறு சார்ந்த தவம் எல்லாம் தானாக வந்தது போல் இறைவனின் திருமடியில் ஹிரண்யன். எதிரியை எதிர்பார்த்தவன்.

பல் முளைத்த நாள் முதலாய் சொல் முளைத்ததல்லவா ஹரி ஹரி என்று தனயனுக்கு.

அந்த செய்தவம், தனயனால் தந்தைக்கு ஏற்பட்ட உன்னதம் உயர்வு.

கை கூப்பி நிற்கிறான் காவலனின் குருளை.

அஞ்சற்க அன்ப உன் அப்பனின் அடிமனத்திலாவது ஹரியைப் பற்றிய அடையாளம் தெரிகிறதா என்று தடவிப் பார்க்கிறேன் என்றது அச்சிங்கம், சிறுவன் தேம்பலுற்றான்.

தாவடமும் பூவடமும் தவழுகின்ற திருமார்பில் தாமரை யாளைக் காணாமல் தவித்தான்.

பாவடத்தைப் புனைந்து சிங்கப் பாதத்தில் சேர்த்தான்.

பூப் பொதிந்த புன்னகையாள் போனதெங்கண் என்று புலம்பினான். பொன்பெயரோன் தன் புதல்வன்.

அமைதி சூழ வேண்டுமென்று அன்னையை தியானித்தான்.

செந்தாமரையாளை சிங்கத்தை சிநேகிக்க ப்ரார்த்தித்தான்!

இதற்கு மேலும் கதை வளர்க்க நான் இவர்ச்சவரயனில்லை, எல்லோருக்கும் தெரிந்ததுதான். எளியேனை விட்டு விடுங்கள். (கை குவித்தார் விப்ரர்)

இந்த இடத்தில் "தேவி குறுக்கிட்டு" மீதியை நான் கூறவா ஸ்வாமி

[illegible] : நீயா தேவி! (வியப்புடன் அவளை நோக்கி)

தேவி : ஆம் அரசே அந்தணர் தந்த மறைகளின் வாய்மையை சேர்த்து வைத்திருக்கிறேன்,

[illegible] : உன் ஆர்வம் கண்டு மகிழ்கிறேன் தாயே, எங்கே உன் ஆசானின் பெருமைகளை அவை நிறையப் பேச ஆணையிடுகிறேன்,

தேவி : நன்றி மன்னவா! (அவையை வணங்கி)

பொன் பொழிந்த சோலையிலே பூத்தமலர்களிடை வின் நிறைத்த கதிர் கூட்டம் வீசிய பேரொளி போல் என் திசையும் செம்மை எரிமலையின் குழம்பு.

குருதிக் குளத்தினிலே கோளரியின் நீராட்டம்.

பொன் பெயரோன் ஆகத்தைப் புரட்டி எடுத்த பின்னும் நரசிங்காவதாரத்தின் நாடகம் ஓயவில்லை.

பொருமலும் உறுமலும் அச்சத்தை வளர்த்தது அமைதியை அழைத்தது.

நடுங்கிக் கொண்டிருந்தான் வருங்கால அசுரகுலக் காவலன் பாலகன்.

"குழந்தாய் ஏனிந்த பயம் இன்னுமா நீ என்னைத் தெரிந்து கொள்ளவில்லை

கோளரி நேசக் கரம் நீட்டியது.

"ஸ்வாமி என் தந்தையை நார்நாராகக் கிழித்த தங்களின் நகங்களிலே இன்னும் குருதிகூடக்காயவில்லையே அதற்குள் என் பால் கரம் நீட்டுகிறீர்களே!"

நீ விரும்பி தொழுதழைத்துவன் வந்திருக்கிறேன். நாராயணா நாராயணா என்று ஓயாமல் ஓலமிட்டாயே வா சிறிது அணைத்துக் கொள்.

இப்படி கோர நரசிங்கமாக வந்து கூத்தாடவா அழைத்தேன், வேண்டினேன்.

வேண்டியது உன் அப்பன் பிரமனிடம் பெற்றவரம் சத்தியம் காக்க வந்திருக்குறேனடா வா வந்து என்னைத் தழுவி சாந்தப்படுத்து.

புரியும்படி சொல்லுங்கள் ஸ்வாமி

குழந்தாய் உன்னை உன் அப்பனின் கொடூர் தண்டனை களிலிருந்து எத்தனை முறை காத்திருக்கிறேன் அதன் காரணன் யார் என்று கூட உன் அப்பன் புரிந்து கொள்ளவில்லை நீயுமா அப்படி.

"அடியேன் என் தந்தையிடம் பெற்றதெல்லாம் தண்டனையும் தவிப்பும் தான் சிறிது அருள் கூர்ந்து பிரமனின் வரம் பற்றி பேசுங்கள் ஐயனே

"காலை இன்றி மாலை இன்றி அங்குமின்றி இங்கும் இன்றி அரக்கனின்றி மனிதனின்றி தேவனின்றி ஒரு மிருக மின்றி ஆயுதமின்றி சாடிதனின்றி ஒரு சாவு என்னை அணையும் போழ்துளமுடிவுரை எழுதப்பட்டு அறியபட வேண்டும் என்று பிரமனிடம் வரம் வேண்டிப் பெற்றான் அசுரர் குலக்காவலன். ஹிரண்யன் இப்போழ்து புரிந்ததா மகனே"

என்று வருந்தி உரைத்த நரசிங்கம்.

"பாவம், எந்த ஒரு நிலைக்கும் ஒரு முடிவு உண்டு என்பதை மறந்து விட்டான் உன் அப்பன் பகையை தூண் போல வளர்த்துக் கொண்ட அவன் எனது இருப் பிடமும் அதுவா என்று ஏளனம் இளக்காரம் எக்காளமும் செய்தான்.

என் இருப்பிடத்தை குறிப்பிடமாக்க உன் பிறவி செவ்வாய் யாது மொழியுமோ என்று சத்தியம் காக்கும் தவத்திலிருந்தேன்! மாதவம்!

அனைத்திலும் அனைத்துமானேன் நீ குறிப்பிட்ட அரண்மனை தூணுமானேன் சிறிது துயருமானேன் உன் பக்தியைப் பருகியதால்.

அசுரர் குலக் கொழுந்தே இன்னும் விளக்கம் வேண்டுமா, அச்சம் ஒழிந்ததெனை அருகினில் வாயேன் உன்னை உச்சி முகர்ந்து பார் அறியச் செய்த பக்திக்கு மெச்சி பட்டாபிஷேகம் செய்கிறேன்.

நெகிழ்வும் மகிழ்வும் முகழ இறைவனடி வீழ்ந்து தழுவிக் கொள்கிறான் அசுரர் குருளை.

நலம் பொழிந்து எனை நாளும் காத்த நாராயணன் எனும் நாமமே அடியேன் வேண்டுவது என்று விதிக்க

தான் இலக்குமி நரசிம்மமாக, தேவரீரை தொழ ஆசைப் படுகிறேன் என்றான்.

நீதான் அடியேன் என்று கர்ஜித்தது சிங்கம்

அம்மவோ! என நினைந்தான் ஆழ்ந்தான் கரை தான் அன்பினிலே மிதந்தானே குருனை.

குழந்தாய் பிரகலாதா என்றபடி அருமையுற்ற அழைத்துக் கொண்டே வக்கரம் கொண்ட நாயகனின் மடியமர்ந்தாள் செந்திரு.

நாற்புறமும் பார்த்தாள் அந்த நாயகி

நன்றாக இருக்கிறது நரசிம்மாவதார நாடகம் என்று நையாண்டி செய்து நகைத்தார்கள்.

புண்பட்ட இடமெல்லாம் அன்னையின் கண்பட்ட உடனே கவினுக காட்சி தந்தது.

வெந்தவர்கள் வந்தார்கள வீழ்ந்தவர்கள் எழுந்தார் கள் விண்ணவர்கள் தொழுதார்கள் வீணையிலே இசைத் தார்கள்.

பொன்னிக் கரை இரண்டும் பூச்சொரிந்து பொலிவது போல் மன்னன் பிரகலாதன் மனத்திலே பேரமைதி

வாழ்த்தக் கரம் குவித்தான
வானமே முழங்கிற்று
நாமும் கதைமுடித்தோம
நன்றி எல்லாம் மன்னனுக்கு
என்னையும் விட்டுவிட இறைஞ்சுகிறேன்
பேரவையை (கரம் குவித்தல்)

ஒரு : எப்படி விடமுடியும் விப்ரரே மன்னர் செங்கோல் பெற்று சிம்மாசனம் ஏறிய இந்த நாளில் ஒரு சிங்கத்தையே காட்டி எங்கள சிந்தையெல்லாம் பறித்தீர்கள் சில்லிட்டு விட்டது நாடிநரம்புகள் அதற்கு ஏதேனும் இசை வைத்யம் செய்தால தான் செயல்படும்போலும்.

மற்ற : அதற்கென்ன, அரங்கனை துயிலுணர்ந்த பள்ளியெழுச்சி பாடியிருக்கிறார் விப்ரர் அதை நாமும் தான் கேட்போமே

ஒ.பு.ச. இவ்வளவு நேரம் சொல்லால் அசத்தியவர் இசையால் எழுப்பட்டுமே!

விப் : (சிறிது உணர்ச்சியுடன்) யாரோ வினை விதைக்கிறார்கள் வேந்தே! இந்த விளையாட்டை இத்துடன் நிறுத்த சொல்லுங்கள்.

அர : நான் கூட உமது இசை கேட்க ஆசைப்படுகிறேன்.

விப் : அடியேனுக்கு பண்ணுடன் பாடிபழக்கம் இல்லை தவிர பள்ளி எழுச்சி பாடல்களை அரங்கன முன் மட்டும் பாட வேண்டும் என்று அறுதியிட்டுள்ளேன் பொறையருள்க மன்னா!

அர : நல்லது அந்தணரே! இன்றைய விழாவில் இசையின் அவசியத்தை உணர்ந்தவர்கள பலா இருக்கிறார்கள் அவையில. அவர்கள ஏமாறக்கூடாது தேவ தேவி நீதான் பாடி நிறைவு செய்யேன. என் பிறந்தநாளை கவுத கேட்ட நெஞ்சம் கானத்தில் மிதக்கட்டும் எங்கே பாடு.

[தேவி எழுந்து வந்து மன்னனையும் அவையையும் வணங்கி குழல முடிவுடன் தன்னை ஆயத்தமாக்கிக் கொண்டு பாடுகிறாள]

இராகம் மோகனம்

பல் : கார் புரளும் திருமேனி கண்ணனவன் குழலிசையில்-பார் கிறங்கி போமவதென்ன பைங்கிளியே!-கார

அ. ப : சீர்புரளும் திருவரங்கம் செழிப்பில் வரும் காவேரி பேரானவ கேட்க அதை பேசுதல்லவ கூடங்கிவ.டே—கார்

சர : சிறுமையழிய திறலோங்க செகமெங்கும-வறுமையொழிய அவன் வாழ்த்துகிறான-குழலல,

கலையும் நயமும் எங்கும் களிநடம் புரிந்திட-காட்டுகிறான் ஞானம் மீட்டுகிறான் குழலை—கார்

வாட்டுகிறான் வாழ்வில் வரும் துயர் இடும்பைகளை ஓட்டுகிறான அடியார் உரு பிணி பசி மூப்பை ஆட்டுகிறான் உலகை அலகிலா விளையாட்டால் கேட்டிடுவோம் குழலி சையை கெஞ்சிடுவோம் புவிவாழ்!—கார்

கொஞ்சிடும் அஞ்சுகம்
குலவிடும்வேளை அவன் குழலின் தனிபாட்டே
மஞ்சமர் மலைகளின் வளங்கெழு
பசுமைகள் அவள் வடித்ததோர் இசைக்கூற்றே

பந்தை அமர்குழலிகள் பாடிடும்
மழலை அவள் பகுத்தநல் உயிருந்றே
விஞ்சிடும் அழகால் விளைந்திடும்
மென்னமகள் அவள் விளையாட்டுப் பாட்டே! —கார்

அமை : பெருமக்களே கரவொளி நிறைந்தெங்கும் கவின் விரிக்க கண்டீர்கள்-இங்கு இது போற் கூட்டங்கள் நிறைய நடப் பதுண்டு பகைவர் செருக்கடக்கவும் பணிந்தோரைக் காப் பதற்குமே பயன்பட்ட கூட்டமது.

பக்தர்களின் கூட்டம் இன்று தான் இங்கு நடந்தது. அதுவும் ஒரு சிறப்பு நரசிம்மாவதார நாடகம். பேச முடியாப் பெருமிதம், தேவியை விப்ரரை எப்படி பாராட்டுவது என்றே தெரியவில்லை. அவையை அசத்தி விட்டார்கள்.

மந் : அரசே! விழாவின் விருந்தாளிகள் சிறப்புவிருந்தாளிகள்... (என்று மென்மையிறக் கூற)

அர : [கை தட்டுகிறான் பரிசுப் பொருள் வருகிறது மறையவரே உமக்கு என வாழ்த்துக்கள். மறையில் பொருளை இந்த மறையின் பொருளை இந்த மன்றறியச் செய்தமைக்கு நன்றி தொடரட்டும் உமது சமயப்பணி தேவிக்கும் என் வாழ்த்துக்கள்,

—திரை—

## காட்சி 8

களநிலை—பிறர் பணிகளுக்கு உதவும் இருவர் அதற்கொத்த உருவம்—கச்சு கையில் பாகை யிலச அறிவது அறிந்த ஒரு வேக விதய நடை இப்படி வருகின்றனர்.

ஒரு : என்ன பேதனரே [பெயர்] கதை வேறு பக்கமால்லா போகுது என்ன பண்ணறது நாம,

அடுத் : போய் இழுத்துப் பிடிச்சு நம்ம பக்கமா கூட்டியாறது.

மூதல் : அட அதுக்கில்லே அண்ணே இந்தக் கரம்பனூர் தேவடியா போற போக்கப் பார்த்தா ஒண்ணும் புரியலையே—அந்தப் பார்ப்பான் அதான் விப்ரர் மதன காமராஜன் கதையை [illegible] சபையிலே ரகசியமாவ[illegible]றயல்லா எடு[illegible]

துட்டாரு அவரு சொன்ன ஜோர்லே நான்கூட ஆடிப் போயிட்டேன் அண்ணே.

அடுத்: இருக்கட்டுமே அதனாலே நமக்கு என்ன அவங்க வேலையை அவங்க பார்க்கறாங்க.

முதல்: எது அவங்க வேலை தேவடியா தேவ தேவிக்கு செங்கோல் விழாவிலே சிறப்பிடம் [எரிச்சலாக] கேள்வி பதில்

அடுத்: [யோசனையுடன்] ஆமாம் இப்படியே போனால் கூட நமக்கு நல்லது தான் வேலை கலபவாக முடியும்,

முதல்: அது தானில்லை நமக்கு கையூட்டுத் தரும், அது தான் அந்தச் சாமியாருங்க என்ன செய்யச் சொன்னானுங்க.

அடுத்: விப்ரரையும் தேவ தேவியையும் ரதிமன்மதோற்சவத்திலே தள்ள வஞ்சக வடிகால் என்ன உண்டோ அந்தனையும் பண்ணச் சொன்னுங்க.

முதல்: முடிஞ்சுதா முடியலையே ... [விரக்தியுடன்]

அடுத்: ஒரு வகையில் பார்த்தா இரண்டு பேரும் சேர்ந்துதானே சமயப்பணி செய்யறாங்க அதுவே நம்ம கணக்குக்கு வராதா?

முதல் எப்படி, எப்படி வரும் புறச்சமயச் சாமியாருங்க அவங்களுக்கு உதவுவதற்க்காக நமக்கு அப்பப்போ ஏதோ கூலி தர்றாங்க; இவங்க ரெண்டு பேரும் என்னடான்னா அந்தச் சாமியார்களை பேச்சாலேயே மூட்டை கட்ட வச்சுறுவானுங்க போல தெரியுது. அப்புறம் நாம அவங்களைச் சேர்க்கறது போயி பிரிக்கறதுக்கும் மருந்து போடச் சொல்வானுங்க சாமியாருங்க உம்ம்......

அடுத்: ஆமாம் பிரச்சனையாத்தான் போச்சு... இன்னிக்குக் கூட கீழ் வடைய வளைஞ்சான் வீதியிலே பேசறாங்க எல்லாரும் நாமும் போய்த்தான் ஆகணும் அப்பதான் நமக்கும் எதாவது வழி புலனாகும்.

முதல்: உம் என்ன பேச்சோ, கூட்டமோ எதோ உழைச்சம் உண்டாம் என்றில்லாமே யாருக்கு ஆகவோ யார் யாருக் தோவு

அடுத்: அது தான் ஏன் என்ன என்று தெரியலே.

முதல் : அதைத் தெரிந்து கொள்ளத்தான் இந்தக் கூட்டம், ஆட்டம் எல்லாம். இன்னும் இதை யாரும் கண்டிலன் விண்டிலன் பண்டுமிலன் இன்னுமிலன் (நகைப்புடன்)

அடுத் : ஏய் இந்த ஜாதி வார்த்தை எல்லாம் நமக்கு வேண்டாம் அந்தச் சாமியாருங்க கொடுத்த காசுக்கு உருப்படியா உழைக்கலாம் வா, இல்லேன்னு கண்ணே நோண்டி எடுத்திடுவானுங்க.

—போகின்றனர்—

## காட்சி 9

களநிலை—ஒரு பெரிய வீதி அடைய வளைந்சான் எனப்படுவது ஆங்கோர் அரங்கு ஆர்வலரும் தேர்வலரும் பேர்வலரும் சீர்வலரும் தார்வலராய் நிறைந்திருக்க ஊர். வல்லார் ஒருவர் உவந்தெழுந்து உரைப்பலுற்றார் "கார் வழியும் மேனி கண்ணனை என் எம் பெருமான் சார்புறையும் உம்மையெல்லாம் தாள் பணிந்து வருக என்றேன் வணக்கம்" என்றார் உடன் கூர் மிளிரும் மீசை குங்குமப் பொட்டாளர் யார் முகமும் பாராமல் அறையலுற்றார் அட்டவணை.

"மண்டங்குடியான் மறையாளன் பொறையாளன் இறையாளன் மாற்றார் வல் வினைக்கோர் சிறையாளன் இன்று இம் மாமன்றம் ஏற்று உலக்கும் பேராளன் ஆற்றுவதெது என்றால் ஆன்ம விசாரம்—ஆழ்வார்கள் எங்கள் புறசமயத் தலையிட்டால் புறப்படும் சீர்கேடு—எதிர்காலம் என்பன.

ஈதில் வாதில்லை, வசையில்லை, வழக்குமில்லை.

இருப்போர் இருந்து எழிவாயந்து சிறந்திடுக என்றார்.

முறுக்கு மீசைக்காரர் மண்டாசைச் சரி செய்து அவைத் தலைவர் உரைக்கு ஆயுத்தம் தானானார்.

"ஏற்ற உடன் பிறப்புக்கு இணையான சோதரிகாள்! நீர் வாழ இன்று நினைக்கின்றேன் நெடுமாலை.

விப்ரரை அழைக்கின்றேன் விருந்து வைக்க உமக்கெல்லாம், என்றார் தலைவர், எழுந்தார் விப்பர நாராயணர்.

விப் : வாய்ப்பு ஈந்த தகைமைக்கு வணங்குகிறேன் பெரியோரை நட்புடனே எனை மதித்தீர், நானும் வாழ்த்திடுக.

ஆன்மீகம் குறித்து முதலில் பேச வேண்டும் என்பது அட்டவணையின் முதற்கட்டளை!

ஆன்மீகம் என்பது புற வாழ்க்கையை நெறிப் படுத்தும் ஒரு கல்வி.

அதன் முதற்படி ஆத்ம விசாரம் என்பது நம்மை நாமே ஆய்ந்து தேர்வுறுதல் அதற்கும் ஒரு பேராசான் துணை அவசியம் அவனிடமும் அவனுடைய நடைமுறை களை நுணுகி ஆராய்ந்து நமக்கு ஏற்ப வாழ் முறைகளை வகுக்க வேண்டும்.

எல்லாம் ஆகக் காணும் இறையவனை நம்முன் நிறு நிறுத்தி ஒளியேற்றி உவந்து உருகி நாமா அவனு என்றில் லாது கசிந்து கரைந்து இன்னும் இன்னும் என்னனி அத் தூய ஒளி ஆழ்ந்து தூய்மை பெற்று, அன்பு அன்பில் கலத் தல் அப் பேரொளி காட்டும் வாழ் ஒளியே.

ஆத்ம விசாரத்தின் அழைப்பு.

இறைவன் பரமாத்மா பேருயிர்.

நாம் ஜீவாத்மா, சிற்றுயிர் அவனது அடிமை எங்கே இருந்து கொண்டு பஞ்சபூதங்களை இயக்கியபடி அண்டசா அண்டங்களை நினைப்பாலே நெறிப்படுத்திக் கொண் டிருக்கும் ஆண்டவனுக்கு துணை போவதே நம் தொழில். அதற்கே உடல் தந்திருக்கிறான்.

ஜீவாத்மா பரமாத்மாவின் ஏவலாள்.

ஜீவாத்மாவிற்கோ உடல் பணியாளன். ஆம் நம் சிறப்பிற்கும செழிப்பிற்கும் உடல் தானே உதவுகிறது.

உடல் ஒரு உடுப்புத்தானே தவிர உயிராகாது.

ஒரு உயிர் மண்ணில் தான் பிறக்க வேண்டும் அப்படி பிறக்கும் போழ்து அந்த மண்ணின் வாசனையை அள்ளிக் கொள்கிறது. அதுவே அதன் வாழ்வழியின் குண விசேஷ மாகிறது.

இதையே ''பிரகிருதி'' சுபாவம் மண்ணின் மணம் என்பர் பெரியோர்.

இதன் வழி குணநலன்களைப் பெற்ற நம் ஜீவாத்மா நல்லதும் கெட்டதும் புரிந்து தன் பயணத்தை நீட்டும்

இறது காலக்கெடு காண அதன் பயணத்தாற் [புவியின் வாழ்வும் உண்டு, அழிவும் உண்டு. இதுவே குணவ்சேஷம் என்பர்.

குணத்திலும் மூன்று வகை கண்டார்கள் நம் பெரியவர்கள். உன்னதும் மத்திமம் அதமம் என்று இதையே "த்ரிகுணதம ப்ரபாவம்" என்ற நல்லோர் உயிர்கள் எக்குணத்தில் நின்று எவ்வெப்பொழுது செயற் படுகிறதோ அதுவே நாட்டு நடப்பாகும் என்றனர்.

அது மனிதனோ மிருகமோ தாவரமோ எதுவாயினும் சரி.

இந்தக் குணமே மனம் ஆகிறது போலும்!

ஒருவனை குணம் உள்ளவன் என்னும் மனம் உள்ளவன் என்றும் சொல்லுகிறோம் அல்லவா.

ஆக பரமாத்மா ஜீவாத்மா தத்துவங்கள் செயலைக் கொண்டே தீர்மானிக்கப் படுகிறது.

கண்ணிற் படும் செயற்பாடுகளே சத்தியமாகிறது சிலபொழுது.

அதனை ஆய்ந்து பார்த்த அறிவு கூறும் பொழுதுதான் அறம் முறைப் படுகிறது.

அதனாலன் கண்ணன் செய் செய் செய் என்று செயற்பாட்டின் திறம் உரைத்தான் தானே செய்கிறேன் என்றும் இறந்தான்.

ஆக செயற்பாடுகளின் சிறப்பே திகழ்வே ஆன்மீகம் ஆத்ம விசாரம்.

ஆம்! பேருயிராய் பரம ஆத்மாவாயிருக்கும் எல்லாம் வல்ல நம் அரங்கனுன் ஜீவாத்மாவாய் சிற்றுயிராய் இருக்கும் நாம் அவன் காட்டிய வழி நின்று துணை புரிவதேயாம். துணையெனின் அடிமை அடிமை என்பது ஏவுமுன் செயற்படுதல்.

ஆழ்வார்கள்! ஒரு வியப்பான சொற்றொடர் தேய்வா திகழ்வா தெரிவா?

அந்த சொற்றொடரில் கடந்த காலம் தெரிகிறதா நிகழ்காலம் தெரிகிறதா இல்லை எதிர்காலம் தான் தெரிகிறதா?

ஒரு நிலை கருதி ஆயத்தமாக இருப்பவர்களை அழைப்பது போலிருக்கிறது இக் கூட்டுச்சொல்.

ஆமாம் உயிர்களின் நலங்கருதி இறையருட்கடலில் வீழ்ந்து ஆழ்ந்து அளைந்து கிளரொளி இளமை என்னும் உயிர்பபுகளை அள்ளிக் கொணர்ந்து தருபவர்கள்போலும் இவர்கள.

ஆழ்வார்கள் நம்மை ஆள்வார்களா! இல்லை நாம் அவருள ஆழ வேண்டுமா!

நாம் தான், அவர்களது தெய்வீகத் திகழ்வில் தேன் பிலிறறும் தமிழில சீர்த் தொளிரும கருத்துக்களில் நமக் காக நாம் என்ற பொது எணணத்துடன் ஆழ வேண்டும்

இறைவனது வழிபாட்டிற்கு கமல மலர்களான கயம் சென்ற கஜேந்திர ஆழ்வானை ஒரு கயமை கதுவ அவன் அதுபோழ்து" உயிர் காக்கும் உறவோன் வருக! திறல் உரவோன் வருக! உரியோன் வருக! உயர்ந்தோன் வருக" என்று அர்ச்சித்து அலறு கையில் வந்தவன் அரங்கன் காத்தவன் அரங்கன்'

இறைவன் விரைந்து தன் உடைமையை எப்பொழுதும் காத்து ஆள்வான் இதுவே மெய் என்பது போல் அதோ நம் அரசபிரானும மாற்று உடையில் இருப்பதை பாருங்கள்.

அரசே இதென்ன வேடிக்கை ஆசனமிட்டு அமர்ந்து அடியாயனின் பேச்சை அங்கீகரிக்கக் கூடாதா வாருங்கள். ஈண்டு வந்துமர்ந்து கொள்ளுங்கள் தாய் முகம் அறியாச் சேய் உண்டா அரசே!

அரங்: அரங்கனை எந்த திருக்கோலத்தில் சேவித்தாலும் அரங்கனே, அரங்கனே, அரங்கனே என்னுமாப்போல் தங்களின் தவள வெண்முறுவலை நான் மறப்பதே இல்லை ப்ரபோ, அமைச்சே உமமையுந்தான்.

[அவையில் சலசலப்பு எல்லோரும் முன்னல் வந்து அமர்ந்து கொள்ளும் அரசனையும் அமைச்சரையும் வணங்குகின்றனர் புன்னகையும் பூரிப்பும் செய்யப் பேரவையில் நிகழ்வு தொடர்கிறது]

தெண்டம் சமர்பிக்கிறேன் மன்னவா

அர : ஆழ்வார்களைத் தொடருங்கள் அத்தணரே அடியேன் தொடர்ந்து அறிந்து அனுபவித்த ஏழு ஆழ்வர்களுமே

நாட்டுநலம், மக்கள் நலம் காண இறைவனிடம் போட்டி யிட்டவர்கள்தாம் முதலாழ்வார்கள் மூவருமேஇறைவனை மிக எளிதாக்குகின்றனர்.

வையந்த களியா—வையத்தை அகலாகவார் கடலை நெய்யாக இன்புருகுசிந்தையை இடுதிரியாக்கி இறைவனை கண்டு தொழும் முதல்வர் நமககுப ஒரு பாடமாகிறார்.

இரண்டாவதாக வந்தவர் இன்னும் எளிதாக அன்பையும் ஆர்வத்தையும் தூய சிந்தையையும் முன் வைத்து ஞானச் சுடர்விளககினால் நமக்கெல்லாம் விளக்குகிறார்.

அதன் பேரொளியில் இறைவனை தேவியுடன் தேவனை கண்டு களித்த அடுததவர் அவன் தான் மூலம் நாராணன் பொன்னாழிக்கை அம்மானை புரி சங்குடன் கண்டமையால் பூர்க்கின்றார், திருக்கண்டேன் எனத் தொடங்கி,

அடுத்தாவதாக ஒரு ஆழ்வார் வேதம் சிறந்தவித்தகர் கள் ஆய்ந்த தேர்ந்த திருமழிசையிலே பிறக்கிறார், இல்லை பிறப்பிக்கப்படுகிறார். அவர் பல சமயம் பார்த்து பின் தெளிந்து பாற்கடல் வாசனே பரமன என்று அறுதியிட்டு நீங்களும் சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து என பிரிந்து உரைகன்றார்,

அடுத்து நம் ஆழ்வார் நான்கு மறையினையும் நாற்ற மிழுக்கு ஈடு செய்ததால் நம ஆழ்வார் ஆகிறார் இந்தப் பட்டத்தை அரங்கான அருளுகிறார்.

இறைவனை 'உயர் வர உயர் நறம் உடையவன் எவன் அவன்' என விளித்து அடியார்க்கு அறிமுகப் படுத்தியவர்

சதுர்மறையின் தத்துவங்களை தனதாக்கி தமிழுக்குத் தந்தவன்,

இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்கு நாயகி நாயகபாவத்தை தேர்ந்த குறுக்குவழியாளன் குருகூரில் பிறந்தவன்.

உடலால் வாழ்வதை உதறித் தள்ளிய உத்தம சடகோபன்.

இவனை மாறன் என்பார் வகுளன் என்பார் மாற்றானையும் வசம் கொள்வதால் பராங்குசன் என்பார்.

இவன் தந்த தமிழில் பொதுமையுண்டு புதுமையுண்டு பூத்துக் குலுங்குகின்ற கவிகளுண்டு கருத்துண்டு கனிவும் உண்டு,

மதுரம் உண்டு உதிரம் உண்டு மதிசார்ந்த மாற்றம் உண்டு.

இவை எல்லாவற்றிலுமே அவன் கண்ட மயர்வற மதிநலமுண்டு.

அனைத்துமே உயிர்களின் உயர்வுக்கு என்று அவனே கூறுகின்ற பண்புண்டு பாசமுண்டு அன்பும் உண்டு அருளும் உண்டு,

அதனாற்றான் ''அருள் கொண்டு ஆயிரம் இன்தமிழ் பாடினான்'' என்று மதுரகவி என்றோர் மறையாளன் மாறனின் மலர பற்றி உய்ந்தான்,

அவனையும் ஒரு ஆழ்வாராக எண்ணப்பட்டு போற்றப் படுகிறான் என்றால் புண்ணியத்தின் நன்நயத்தை என்னென்பது, ஆழ்வார்களுள்ளேயே ஆழ்ந்து ஆழ்ந்து ஆணி முத்தொன்றை கண்டு எடுத்தவர் மதுரகவி ஆழ்வார் ஆகிறார்-

அடுத்தொருவர் குலசேகரன் என்பார். இவர் ஆழ்வார் களின் குலத்திற்கு நலம் சேகரிப்பதே போன்று அடியவர்கட்காக அரசும் துறந்து குடப் பாம்பையும் தன்பணுக்கிக் கொள்கிறார்,

ஸ்ரீ ராம சரிதத்தை செவிமடுத்து செவிமடுத்து சிந்தை யிலே தேக்கி அத்தகைய அருளாளனை காக்கும் வர்ய்ப்புக் கும் காத்திருக்கிறார். அப்படி ஒரு இறையாண்மை. அரசரல்லவா!

இப்போழ்து எட்டாவதாக என்னுள்ளம் கவர்ந்து பணி கொண்டு நல்லதொரு பணியும் தந்த விட்ணுசித்தன்.

அவரது அரும் பெரும் துளவத் தொண்டே என்னையும் ஊக்குவித்து ரங்கேச நந்தவனம் அமைக்கத் தூண்டியது. பெருமை மிகும் பணி பெருமானின் கைங்கர்யம் அரசரும் அறிந்து உவக்கும் அறிமுகம். அடியேனின்

வாழ்வுக்கு அரண்தான் என்றாலும் விட்ணு சித்த வேதியன் போல் அடியேனுக்கும் அரங்கன் சேவை சாதிக்க வேண்டும் என்ற பேரவா பிடித்தாட்டுகிறது.

பாண்டியன் பேரவையில் பர நிர்த்தாரணம்— இறைவன், உலக இயக்கத்தின் தலைவன் நாரணனே இலக்குமி நாயகனே என அடையாளம் காட்டிவிட்டு வேந்தும் விருதுகூற பட்டன் வேழமீது வருகையிலே வானில் வாத்ஸல்யமுடன் வந்து வாழ்த்தினானே என் ஐயன் அப்போழ்து பட்டன் பாடினானே பல்லாண்டு! அப்படி அடியேனுக்கும் ஒரு வாய்ப்பு! அரங்கன் தேவி யுடன் வருகை தந்து அருளுவதெப்போ! (விப்ரர் விகசித்து விம்புகிறார் இறை அருளுக்கு ஏங்கி அனைவரும் நெகிழ்ந்துருக அரசன் எழுகின்றான்)

அர : விசனம் வேண்டாம் விப்ரரே! உமது மாலைக் கைங்கர் யத்தில் மயங்கி மாலும் தேவியுடன் ஒரு நாள் உம்முன் தோன்றத்தான் போகிறான். எம் சோழர்குலச் சொல் எதுவும் தோற்றதில்லை இப்படி வாரும்,

அவையோர்களே! இப்படி தொண்டர்களைப்பற்றி தாமும் பூந் தொண்டிற்கே என்று தம்மை ஆக்கிக் கொண்ட, நாமெல்லாம் அறியும் இப்பெருமானை நம்மையெல்லாம் கவர்ந்த இவரை தொண்டருக்கு அடிப்பொடி என அறைந்து அழைத்து பெருமை கொள்வோம். இவரும் அவ் ஆழ்வார்கள் போல், நல்லோர் புடைசூழ நாரணனைக் கண்டது போற் நமக்கும் ஒரு இன்பப் பேறு நல்க வேண்டுவோம்,

வாழ்க விப்ரநாராயணர்...வாழ்க

வாழ்க தொண்டரடிப் பொடித் தூயவர் வாழ்க

(அரசர் வெளியேற முயலவும் மற்றவர்கள் ஆழ்வார் தொண்டரடிப்பொடி உள்பட வந்து வழியனுப்பு கின்றனர்).

(திரும்ப அவரவரது இருக்கையை இருப்பை தொடருகின்றனர்)

விப் : புறசமயப் புறப்பாடு என்பது எந்தவொரு நாட்டிற்குமே கேள்விக்குறியாக அமைந்த களம்தான்.

ஆனாலும் அவசியமோ அறிமுகமோ இல்லாமல் யாரும் எதுவும் இருக்க முடியாது.

நாம் ஒருவரை அறிந்துகொள்ள முயலும் தருணத்தில்தான் நம்மையும் ஒருவர் அறியும் வாய்ப்பினைப் பெறுகிறோம் இது நியதி.

மறந்தும் புறந்தொழா மாந்தர் என்பர் எங்கள் பெரியோர்.

அந்நிலை நின்று தொண்டு புரிபவன் அடியேன் புறச் சமயப் புறப்பாட்டால் இறை நிலை மட்டும் அல்ல எல்லாத்துறையுமே மயங்குதலுண்டு வழக்கொழிதலுண்டு.

மொழி மாற்றம் தொழில் மாற்றம் மூளைவேர்கள் தடுமாற்றம் உடை மாற்றம் உணவு மாற்றம் உண்பவர்க்கு ஏமாற்றம்,

ஆன்று அவிந்தடங்கிய தமிழக மன்பதையில் மண மாற்றம் மனமாற்றம் மருளூட்டும் பேயாட்டம்.

சில போழ்து சீலமழிக்கும் வெறியாட்டம் ஏற்பட்டு விடுகிறது.

எது சொல்லுகிறார்கள் எதைச் செய்கிறோம் என அறியாமற் மக்கள் புண்படுகிறார்கள். புண்படுத்தப் படுகிறார்கள், ஏமாந்து செய்வதறியாமல் திகைத்து தேம்பி செயலிழக்கிறார்கள்.

பண்பழிந்த செயலினால் பகை எழுமோ என்ற அச்சம் பிடித்தாட்டுகிறது.

நம்மை நாம் இழுப்பதினால் தம்மீது திணிக்கப்படும் சுமை தூக்க முடியாமற் போகிறது.

வாழ்வு என்பது வகுத்துக் கொள்வதால் மட்டும் வருவதில்லை. இது கண்டு உவந்த உண்மை.

எங்கோ இருந்து ஒருவன் தருவதாலுந்தான் பெற வேண்டியுள்ளது.

அதனடிப்படையில் அமைவோர் நாம். நாம் உண்டு நம் செயலுண்டு நல்லது கெட்டதற்கு நாரான நாயகி

உண்டு என்றிருக்கும் நமக்கு புறச் சமயம் புதிர் போன்றதே.

எந்த சமயத்தில் எத்துணை ஏற்றம் இருப்பினும் சரி அதை அடுத்தவருக்கு அலங்கரித்து காட்டுதல் என்பது தற்பெருமை என்பதாம். தருக்கின்பாற்பட்டதாம்,

எப்படிப் பார்த்தாலும் அடித்தவரின் இடையீட்டை ஆதிக்கமாக விடக்கூடாது! அதுவே அடிமையாக்கிவிடும்

அதேபோற் அடுத்தவர்களும் தடுப்பவர்களில்லையே என்று ஏமாந்து கண்பட்ட இடத்திலெல்லாம் கால் பாவக்கூடாது.

புறச்சமயத்தை புரிந்து கொள்ள அவர்கள் உதவ வேண்டுமே தவிர புகுத்த முயலக்கூடாது

அறிய உதாரணம் நம் சடகோபன் தந்தது.

உயர்வற உயர்நலம் உடையவன் எவன் அவன் என்று காட்டியதோடு நில்லாமல் "அவர் அவர் தமதமது அறிவறி வகைவகை "அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்" எனவும் மொழிந்து

அவரவர் இறையவர் குறைவிலர்" எனவும் கூறியது மேலுக்கும் மேம்பட்ட சான்று

அதோடு அமைதி பெறாத அந்த அமுத மொழியோன் "அவரவர் விதி வழி அடையநின்றனரே என்றும் அறுதி யிடுகின்றான்.

பொதுமை பொதிந்துள்ள இப்புதுமையை புறச் சமயம்ஏற்றால் இனிது இருவருக்கும் எனக்கூறி எதிர்காலம் காணச் செல்கிறேன்.

நடந்ததைக் கூறுவது வரலாறு

நடப்பதைக் கூறுவது கண்கூடு

நாளையைக் கூறுவது—ஏன் நாளை அடுத்த கணத்தை கணிப்பது ஏமாளித்தனம் என்பது,

இதற்கு என ஒரு சாத்திரம் வகுத்த மேலோர்கள் பக்கம் சென்று நான் நிமித்தான் ஆக விரும்பவில்லை,

அவர்கள் குறிப்பிட்ட நாளைக்குத்தான் அமாவாசை பௌர்ணமி வருகிறது என்றாலும் அவர்களே சொன்ன அயனம் அதுதான் உத்திராயணம் தெட்சணாயணம் இராமாயணம என்னும் வழி காட்டும் மரபை பின்பற்றி சில கூறி சொல்லியுறுகிறேன்.

இன்று நம்மிடையே கூலிக்கே மாரடிப்போர் பெருகி விட்டனர். இதற்கு புறச் சமயம் புறப்பாடும் ஒரு காரணம். கோபப்படாதீர்கள் நண்பர்களே, ஒன்றினை இழக்க ஒருவனுக்கு நான்கினைச் செய்ய வேண்டும். அதுவே நியதி அதற்குரிய வாய்ப்பும் வசதி வருவாயும் பெற்று வந்தவர்கள் நீங்கள்.

கூலிக்கு மாரடிக்கும் குணம் மிகுதலால் மனிதன் வேறுபட வேறுபட ஒன்றினை செய்து புதுமையெனக் கூறி மக்களைப் புரட்டிக் கொண்டிருப்பான்,

ஐம்பூத குணங்கட்கும் அப்பால் ஒரு புதுமை [illegible]

எப்படி முயன்றாலும் இருக்கமுடியாது.

இப்போது நாம் பயன் கொள்ளும் பூலகத்திலே பாட்டு வ[illegible]லே எத்தனை [illegible]த்றம் நாம் [illegible].

இப்படி வேறுபட வேறுபட ஒன்றினைக் காணும் போழ்துவியப்பு வளரும் விரிவு பெருகும் விரைவும் கூடும்

இங்ஙனே வளரும் தொழிலில் தன்னுறிக்கம் தரகு போட்டியிடும்.

அப்போழ்தும் மக்களுக்கான பங்கும் பயனும் குறை வாகவே இருக்கும்.

தாலியிலும் தடயத்திலும் இருத்திய தங்கத்தை வெளியிலும் இட்டு வித்தை காட்டவும் விஞ்ஞானம் என்பர். வானவர் நாங்கள் என்று மக்களிடை மகிழுவர்.

புதிய கெல்லி எலி பிடிக்கும் மகத்துவமே பெரிது என்பவர்

ஆண் என்பர் பெண் என்பர் யார் என்பர் ஒருவர் அன்பர்.

ஒருவர் என்ற காரணத்தால் நமக்கும் ஒன்றே போது என்பர்.

நாட்டிற்கும் நலத்திற்கும் நாராசப் பொறி காண்பர் உழைப்போடு உழைப்பாக ஒருங்கிணைந்த மனித மனம் உழையாமற் வாழுமோர் உத்தாரம் காணும்.

பொறியின் துணை கொண்டு பூரிப்பில் ஆழ்ந்தவர்கள் உழைப்பின் உண்மை கண்டு உணருவார் நன்மை, தீமை.

அப்போழ்து தந்திலகாணும் தத்துவமே மிகுந்து எழும் ஒரு கை ஓசைக்கு ஒலி உண்டா வலி உண்டா!

உயிர் கூட உடலில் உராயும் போழ்துதான் நடமாட்டம் காண்கிறது. இது தான் பொறியின் புறப் பாடு ஆழ்வார்கள் 'ஆழ்ந்தார்கள் அவ்வளவுதான் நாளைய மனிதன் அகன்று திரிந்து விரிந்து விண்ணிலே விளையாடுவான்.

நமக்கு பிடிக்கிறதோ இல்லையோ இன்றைய புறச்சமய வாதிகள் புதிது புதிதாக பல இங்கிதங்கள் செய்கின்றனர் அதனாற்றானே அரச அவையில் கூட இடம் பிடிக்கிறார்கள் இது ஒரு சான்று.

இப்படி ஒரு கணக்கில் பார்த்தால் நமக்கு நீ அன்மை நாடுகளின் சேர்க்கை நம்மை மக்களை ஆநந்தத்தில் தள்ளும் ஆச்சரியப்பட வைக்கும்,

புலன்களை இறங்க வைக்கும் பொறிகள் புவியை ஆளும் தன்னை அதற்கே அடகு வைக்கும் மனிதன் திணருவான் திகைப்பான்.

அள்ளிப் போட்டுச் சொல்லுகின்ற கணக்கும் உண்டு அளந்து போட்டுச் சொல்லும் கணக்கும் உண்டு. இது ஆக்கும் பொழுதே சொல்லப்படும் கணக்கு.

அமாவாசையும் பௌர்ணமியும் நம்மவர் கணக்கு.

உலகம் உள்ளவரை மாறாது.

இதே போல் அடுத்தவனும் அண்டங்களின்சுழற்சியை அடையாளம் காட்டலாம் அல்லவா!

அப்படி பூத்துக் குலுங்கப் போவது தான்எதிர்காலம்

சங்கமத்தின் சாகசங்கள் ஜாலம் செய்யும் வான வில்லின் வண்ணத்தை அள்ளி ஆடைகள் செய்யக்கூட ஆசைப்படுவான்.

அதே வேளை, தேவைகளின் அளவறிந்து செயற்படும் திறன் அறிவான்.

ஏன் என்ருல் இவன் பூரணத்தின் பொலிவைக்காண முயலாமல் வலுவைக் காண முயல்வதே.

அது பெற்ருேர்களை ஆய்வதற்கு சமம்.

அந்தரங்கம் அரங்கேறுவது எப்போழ்துமே ஆபத்து தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டவன் அமைதிக்கு ஆலவட்டம் வீசி அழகு காண்பாளுயின் மகிழ்வு பொங்கும் மனித வாழ்வில்.

தேடுதல் என்பது தேவையைப் பொறுத்ததே ஆனலும் அளவு என ஒன்றிருப்பதையும் அறியவேண்டும்

அலைந்து வலிந்து அடைவதைக் காட்டிலும் அடைந் ததை பிறர்க்களித்து ஆநந்தமுறும் போழ்து மனித இனமூ மாட்சியுறும்.

பொறிகள் மனிதனிட்ட தறிகள்

புலன்கள் இறைவனீந்த நலன்கள்

முன்னது வீழும் பின்னது வாழும்

எதிர்காலம் எதைத் தேர்தெடுத்தாலும் அரங்கன் அருள்புரிக, அதில் அறம் இருந்தால்.

நேற்றும் இன்றும் நமக்காக நாளை என்பது வாழ் வாங்கு வாழ்ந்து நம்மை உலகுக்கு அறிமுகப்படுத்தப் போகும் மரபிற்காக

அந்த உன்னதம் இந்த மண்ணின் எதிர்காலம்

அதற்கு அன்பொளிரும் அறம் ஒன்றே ஆணி வேராக வேண்டும்.

எதையடைந்தால் மனிதன் அமைதியுறுவானே அது அது அவனுக்கு கிடைக்கட்டும்.

ஏன் என்ருல் நாட்டுப் பற்றுள்ளோர் அனைவரும் நினைப்பது இறையருளை!

(என்று கரம் குவித்து அமைகிறார் விப்ரர்)

கரவொலிக்கிடையே தலைவர் எழுந்து நண்பர்களே திருவரங்கத்தில் மட்டும் அல்ல இத்தேர்வரங்கம் நாட்டின் மூலைமுடுக்குகளில் கூட அவசியமாகி விட்டது, இவ் அரங்கங்கள் நாட்டு நலம் விரும்பும் அனைவருமே புறச் சமயப் புறப்பாட்டை வியந்து பார்க்கின்றனர், இது ஒரு வேலையாகி விட்டது மக்கட்கு இது தவிர்க்க முடியாத தாகி விட்டது இன்று எந்நிலையிலும் தந்நிலையழியா மக்களாக நீங்கள் இருக்க வேண்டும் என்று விடை கூறி விடைபெறுகிறோம் வணக்கம்!

திரை

உ. க.: விப்ரரின் பேச்சை அளவிட்டுக் கொண்டு செல்கின்றனர் இரண்டு மதியார்ந்த இளைஞர்கள்.

ஒரு: [எண்ணமாழ்ந்தபடி] விப்ரரின் பேச்சில் விரிவு இருந்தது தெளிவுதான் சிந்திக்க வேண்டியுள்ளது.

அடுத்: [வெடுக்கென்று] எதனைச் சொல்கிறாய் நண்பா.

முதல்: எதிர்காலம் பற்றி' !பொறிகளைப் பற்றி.

அடுத்: [சிறிது சிரித்துக் கொண்டபடி] முதலிலேயே அடுத்த கணத்தைப் பற்றி ஆராய்வது கூட ஏமாளித்தனம் என்று சொல்லிவிட்டுத் தானே பேச்சையே ஆரம்பித்தார் அவரது திறமைக்கு ஒரு தேர்வு வைத்தது போலிருந்தது அந்நிகழ்வு எதிர்காலம் என்பது எத்தனை நூற்றாண்டோ காலமோ அதனை இதைவிட யாரும் அறுதியிட்டு பேச முடியாது அடைவு அனுமானம் இவைகளைக் கொண்டு கால அளவு கணக்கிடுவது சுலபமல்ல.

காலில் முள் குத்தியதும் மூளை வேலை செய்கிறது ஐயோ என்கிறது இது தான் விசையின் விளக்கம்.

இதைத்தான் அவர் வேறுபட்ட இருநிலை உராய்வு உயிர்ப்பு அதன் விளைவு என்றார்.

மனம் என்ற விசையினால் ஐம்பொறிகள் உடனே இயங்குகிறது. இங்கு மனம் ஒரு விசை அதை போடுவது இயக்குவது உயிர், மனிதன். இதனையே அவர் நானட

விந்தை விண்விளையாட்டு விஞ்ஞானம் என்றெல்லாம் சொல்லிச் சென்றார்.

முதல்: சில போழ்து விசனம் கலந்த குரலில் பேசினார்.

அடுத்: ஆமாம் நண்பா! அதுவும் எதிர்காலநிலை சங்கமங்களுல். பொறிகளின் ஆதிக்கத்தால் வரும் நிலையழிவு அமைதி இன்மை குறித்து கூறினார். அப் பெருமகனார் இறுதியாகக் கூறியது என்ன "எதை அடைந்தால் மனிதன் அமைதியுறு வானோ" அது அவனுக்கு கிடைக்கட்டும் என்றார்.

அலுக்கும் வரை அமைதியைக் கண்டு பிடிக்கும் வரை மனிதன் ஓயமாட்டான் என்றார்.

இதையாரு சிந்தித்தாலும் முடிவு ஒன்றாகத் தானிருக்கும்.

இந்தத் திருநாட்டின் திகழ்வு மறையார்ந்த வாழ்வு மணமார்ந்த அன்பு அறம் திறம் எங்கே தந்நிலைஅழிந்து படுமோ என்பது அவர் கவலை.

முதல்: எனக்கூட அது புரிந்தது நண்பா, சரி நாம் பேசிக் கொண்டே ரங்கேச நந்தவனம் வரை வந்து விட்டோம் அதோ பார் [திகைத்து] இரண்டு முரடர்கள் அவர்கட்கு அங்கென்ன வேலை வா போய் பார்போம் (மறைகின்றனர் [அப்போழ்து] [தேவ தேவியும் விப்ரரும் சிறிது உத்சாக முடன் வருகின்றனர்)

தேவி: அதோ பாருங்கள் வான்முட்டும் மேகக் கூட்டங்கள் உங்கள் ரசிகர்களை போல் முண்டியடித்துக் கொண்டு இனி உங்கள் பேச்சைப் போல் மழை கொட்டு கொட்டு என்று கொட்டப் போகிறது. இடையில் நான்தான் மாட்டிக் கொள்ளப் போகிறேன் எங்கே தங்குவது என்று தெரியாமல்

விப்ரர்: ஆமாம் நீ அதற்கு முன் உன் இருப்பிடம் செல்வது நல்லது.

தேவி: அடியாளுக்கு ஏது இருப்பிடம் ஸ்வாமி எல்லாம் உங்கள் திருவடி தானே.

விப்ரர்: போதும் தேவி இந்தப் புலம்பல் என்ன நடந்து விடுமோ என்று நானே பயந்து கொண்டு இருக்கிறேன் [கலக்கத துடன்]

தேவி : பயமா தங்கட்கா இரும்பைக் கரும்பாக்கி வாழும் தங்கட்கு இந்த ஏழைப் பெண்ணிடமா பயம்.

விப்ரர்: [கடுமை கூட] ஆமாம் தேவி! உன் வாக்கை அதன் வன்மையைக் கண்டு வியந்த மனம் இப்போழுதெல்லாம் வடிவை வனப்பை காண முயலுகிறது.

தேவி : ஸ்வாமி நம்மைப பற்றி நாட்டோர்கள் உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

விப்ரர்: அதனாற்றான் சொல்கிறேன் போ என்று.

[அப்போழ்து மழையும் காற்றும் இடியும் மின்னலும் ஒரு உன்னதத்தை உருவாக்க முயலுதல் போல் ஒன்றை ஒன்று விஞ்சுகிறது. கண்மூடித் திறக்கும் நிலையில் ஒரு ஜலப் ப்ரளயம் சூழ தடுமாற்றம்]

தேவி : இப்போழ்து நான் எங்கு செல்வது சொல்லுங்கள் ஸ்வாமி! ஐயோ தெய்வமே பெண்கள் என்பவர் பீடுபழியவா பிறக்கின்றோம். அடிமைப்படுத்த வந்த நான் அடிமையாகித் தவிக்கின்றேனே ஸ்வாமி குறை யின்றிப் பிறந்தவள் நான் ஸ்வாமி மாளிகையும் வாசமும் மஞ்சமும் மகளிரும் என் பணிக்கென்று ஏற்ற முடன் காத்திருக்க தங்களிடம் எதனை நாடிவந்து நான் இந்தப்பாடு படுகின்றேன்.

தேவரீரை அடிமை கொள்ள நினைத்தேன் தவறுதான்

இப்போழ்து உங்கட்கு, உங்கள் தேசுக்கு தெய்வீகத் திகழ்வுக்கு அரங்கனின அருளுக்கு அடிமை செய்ய என்னை அர்பணித்தேன் ஸ்வாமி போ என்று சொல்லி புறம் தள்ளாதீர் அதுவும் இந்தக் கொட்டும் மழையில் எனக்கு போக்கியம் எது ஸ்வாமி போகாதீர்கள் ஸ்வாமி. சிறிது நில்லுங்கள். இந்த ஏழைக்கு இரங்குங்கள்!

[''விப்ரர் தேவியைப் பார்த்துக்கொண்டே பின் செல்ல அவரை தேவி தொடர இந்நிலையில் விப்ரரை அடுத்து மேலிருந்து ஒரு பெரிய மரக்கிளை கீழே விழுகிறது. அதன் மேல் அவர் விழுந்துவிடுகிறார். வந்து கொண்டே இருந்த தேவியும் விப்ரரின்மேல் இயல்பாக விழுந்து விடுகிறாள்]

[இதேவேளை மரக்கிளையைக் கீழே தள்ளிய முரடர்களில் ஒருவன் கீழே குதித்து பார்வைக்கு அஞ்சி ஓட மற்றவனும் ஓடுகிறான்]

[அவர்களைக் கண்காணிக்க முற்பட்ட இளைஞர் இருவரும் அவர்களைத் துரத்துகின்றனர்]

[கள நிலை இப்படி இருக்க ஒரு காவியம் உருவாகிறது.

[உணர்வுகளின் தடுமாற்றத்தால் உந்தப்பட்ட விப்ரரும் தேவியும் தற்நிலையழிந்து கொடியும் கொம்பும் ஆகின்றனர்.]

விப் : தேவி ஈதென்ன பேரின்ப நிலை நமக்கு கற்பகக் காவின் அற்புதத்தை காட்டுபவர்கள் யார் மெய்யழிய விழும் உன் மென் நோக்கு இந்த பாபியை ஏன் இத்தனை நாள் தீண்டவில்லை.

தேவி : ஸ்வாமி அதையேதான் அடியாளும் எண்ணுகிறேன். நமக்கு என்று சொன்னீர்களே! அது ஒன்று போதும். என் வள்ளலாகிவிட்ட வள்ளலே என் தாய் ரங்க நாச்சியார் அடியாளுக்குபிச்சை போட்டுவிட்டாள். இதோ பாருங்கள் ஸ்வாமி என் புளகம் பூரித்துத் ததும்புவதை.

விப் ; இந்த ரங்கேச நந்தவனம் விண்ணின் நட்சத்திரங்களை தனதாகக் கொண்டு மின்னுவது போலிருக்கிறதல்லவா தேவி (தழுவுகிறார்கள்)

தேவி : சொல்லுங்கள் ஸ்வாமி! அடியாளின் உயிர் உங்கள் உடமை, சொல்லுங்கள்.

விப் : ஸ்ரீரங்க நாச்சியும் அரங்கனும் நம் இருவரின் கைங்கர்யத்திற்கும் ஆசைப்படுகிறார்கள் போலும்.

தேவி : ஆமாம் ஸ்வாமி ஐயமில்லா உண்மை. அதேபோல் இந்த தாஸியின் தாஸத்வம் ஒரு ஒப்பற்ற புருடக்கு தார வார்க்கப்படுகிறது! ஏன், வார்க்கப்பட்டு விட்டது என்று சொல்லலாமா ஸ்வாமி.

விப் : கண்டிப்பாக ஸ்வப்பனமல்ல இந்த தொடுகடல் சங்கமம் தூய்மைத் தொடர்பு விப்ரனின் துளவத் தொண்டிற்கு

அதன் தொடர்புக்கு ஒரு ஆவணக் காப்பு. இறையருளின் இன்னிசை எழுவாகை கதிரே போற் என் உள்ளத்து உறையும் அரங்களின் கட்டளை இதுதான்போலும்! வா தேவி இன்னும் என் அருகில் வா நம் அன்பின் நெருக்கத்தால் இன்னும் இந்த நந்தவனத்தில் புதிய மலர்கள் பூத்துக் குலுங்கட்டும்! அந்த அரவிணையான நஞ்சணிந்த மஞ்சத்தைவிட்டு இந்த மலர் படுக்கையிலே புரண்டு உலகாளட்டும்! தேற என் ரங்கத்தாயே! ஒரு முரட்டுப் பிள்ளைக்கும் துணை சேர்க்க ஆசைப்படும் தாய் போல் அடியேனை ஆட் கொண்டாயா அம்மா! எதிர் காலம் எங்களை ஏசாமல் பார்த்துக்கொள் தாயே!

**தேவி :** ஐயனே நம் மனப் புயல் ஓய்ந்தது போல் மழையும் ஓய்ந்து சூழ அமைதி தோய்ந்தது. அருமை அழைக்கிறது. வாருங்கள்! ஈர ஆடையை மாற்றிக் கொள்வோம்!

திரை

## காட்சி 10

களத்தில்—திருக்கரம்பனூர் தேவ தேவியின் திருமாளிகை ஆசார வாயில்-

விப்ரருக்கும் தேவ தேவிக்கும் வரவேற்பு
தோழிகள்—மற்றையோர்

பாட்டு—பியாகடை ராகம் பாடுவது தோழியர்

**பல்லவி:** வரவேற்பு இங்கோர் வரவேற்பு மன்மத மண்டப
வாசலிலே ஒரு வரவேற்பு

**அநு ப.:** எங்கள் குலக் கொழுந்து
எழிலான கலையரசி
மங்களச் செல்வியின் ரங்க
மணவாள தாஸனுக்கு வரவேற்பு

**தொகையறா ராகம் ஆநந்த பைரவி**

யாரும் பார்த்து அதிரப்
பொறும் முன்னே ஆசார
வாசலிலே ஆரத்தி
கொட்டுங்கடி

[கீழ் வரும் அடிகளில் ராகங்களும் வரும் அதற்கேற்ப தோழி கள் பாடுதல் ஆடுதல்]

வாடி நீ வசந்தா வாசியடி வீணை
தோடி சுருட்டியுடன் சுப பந்துவராளி
கானடா கல்யாணி காம்போதி
இவையுடனே ஆடி அழைத்து வா
தர்பாருக்கு

மிருதங்கம் கொண்டு வா மிருநாளினி
சற்றே சாபுவுடன்
ததிங்கிணத்தோம் தட்டு
ஆதி தாளத்திலே அடாணு
பல்லவிக்கு அபிநயம் பிடியடி
அழகு சுந்தரி

பைரவியை வாசியடி பைரவி
பிடிவில் பாங்குடனே பிருக்காக்கள்
உதிரட்டுமே
கடிகம் கார்வை இவை
இழைந்தோடே கரகரப்பிரியாவை
கேட்கட்டுமே

நாத சுரத்திலெல்லா சங்கதிகள்
நாட்டையா குறிஞ்சியா
நாட்டைக் குறிஞ்சி
ஆலாவனை பண்ணு இக்தோளத்தை
அதிலேயே பாடுங்கடி அம்மானையை

கூடுங்கடி வந்து கொட்டுங்கடி
கும்மி பண்ணு எல்லாம் தட்டுங்கடி
ஆடுங்கடி ஆநந்தத்தில் அடைந்த
செல்வம் நிலை பெறவே

கஸ்தூரி மஞ்சள் இழையுங்கடி
தேவி கன்னத்திலோரம் தடவுங்கடி
மிக்கூறும் மையலில் மூழ்கிய அந்தணர்
மேலும் மயங்கிக் கிறங்கட்டுமே

மல்லி மணமிகும் இருவாட்சி
மாதவி செண்பகம் மந்தாரை

அள்ளி வா இந்த மலரையெல்லாம்
எங்கள் அழகின் அரசிக்கு சூட்டிடுவோம்

மெல்ல அழைத்துப் போ பள்ளியறை
மேதகு அந்கணர் காத்திருப்பார்
சாரங்கி எடுத்திவள் சாரங்கா வாசிகக
சாந்தியும் மூர்த்தமும் [அவர்] தந்திடுவார்

[இப்படி கேலியும் கிண்ணாரமுமாய் அந்த நாயக நாயகியை யும் ஒரு அலங்கரித்த அறைக்குள் தள்ளிகின்றனர் மஞ்சத்தின் மீது கூடை மலர்களை அவர்கள் மீது கொட்டுகின்றனர் அர்த்தமற்ற சிரிப்பு ஆரவாரம் ஓய விப்ரரும் தேவியும் ஒருவராகின்றனர்].

[தேவி ஆட—விப்ரர் பாடுதல்]

கல்யாணி ராகம்—

மடமை நடமாடும் நடமயிலே உன்னை
மருவிட வரும் சுகம் தனி ஏகமே—மட
இளமயில் நீ ஆட என் உளம் உனை நாட அதை
இழுத்து நிறுத்த உந்தன் துணை தேடினேன்—மட

இடையாடும் பாங்கிலுந்தன் சடை ஆடுதா
சடை போடும் தானத்தில் நடை ஆடுதா
கடை போடும் விழி சொல்லும் கதை என்னடி
என் கருத்தழியச் செய்துருக்கும் நிலையேனடி—மட

மயக்கு மொழி மிழற்றும் இதழிரண்டும்
மலர் மகரந்தத் தேன் அள்ளித் தந்தாலென்ன
இயக்கம் எனக்கான ஏந்திழையே! நீதரும்
இன்பம் ஒன்றே எனையாளும் அறிகுவையே—மட

[இசையின் விசையால் உந்தப்பட்ட இருவரும் ஈர் உடல் ஓர் உயிர் ஆகுகின்றனர் மஞ்சம் தஞ்சமளிக்கிறது, வசந்தம் ஆலவட்டம் வீசுகிறது

என்றாலும் தேவியின் தாய் மட்டும் பொறுமிக் கொண்டிருக் கிறாள்]

—திரை—

களநிலை—ஒரு புறசமயத்தின் போதனை நடந்து கொண்டிருக்கிறது அதன் தொண்டர்கட்கு அரவமற்ற ஆலமரத்தடியில்

இரண்டு முரடர்களை பற்றி இழுத்து வந்த முன்பு பார்த்த இளைஞர் இருவரும் அவர்களை அந்த மரத்தடிக்கு கொணர்ந்து போதனை புரியும் சாமியர்கள் முன் தள்ளுகின்றனர்.

ஒரு: [கடுமை மேலிட] வணக்கம் பெரியோர்களே இந்த முரடர்களும் உங்கள் தொண்டர்கள் தானு?

பெரி; ஆமாம்! இரண்டு நாட்களாகக் காணவில்லையே...

இளை: அடு என்று தேடியிருப்பீர்கள் இன்று தான் உண்மையைச் சொன்னுர்கள்.

பெரி: இப்படி இழுத்து வரும்படி என்ன செய்து விட்டார்கள் யார் என்று தெரிந்துமா இப்படிச் செய்வது.

இளை: ஆமாம் அதனுல் தான் அப்படிச் செய்தோம் இவர்கள் என்ன செய்தகர்கள் என்று கேளுங்கள்.

பெரி: [முரடர்களைப் பார்க்க—அவர்கள் பயந்து போன்ற நடிப்புடன்] நீங்கதானே சொன்னீங்க விப்ர நாராயணரையும் தேவி அம்மாவை ஒண்ணு சேர்க்கணும் என்று ....

இளை; மரத்தை வெட்டி மண்டையிலா போடச் சொன்னீர்கள் நல்லவேளை மயிரிழையிலே அவர் தப்பினுர், அந்த அரங்கன் அருள்.

பெரி; ரொம்ப நல்லதாப் போச்சு நீங்க போங்க நான் இவர்களைக் கண்டிக்கிறேன்.

[இளைஞர்கள் போகின்றனர் மிடுக்குடன்] மற்றும் ஓர் களநிலை அரங்கன் கோவில் ப்ரகாரம் கோவில் பணியாளர்கள் பட்டர், மடப்பள்ளி ஆள்] ஒரு பெண்.

பட்டர்: என்ன மடப்பள்ளி மாமா நாலு நாளா இந்த விப்ர நாராயணரை கோவில் பக்கமே காணலையே. ஏதேதோ பேச்சுக்கள் அடிபடுதே வாஸ்தவம்தானு சும்மா மூஞ்சியை திருப்பாம சொல்லும். பாவம் மடப்பள்ளிகாரர் வெற்றிலை போடாம இருக்க முடியுமா நீர் ஏன் குறைஞ்சுண்டு முகத்தை திருப்பிக்கிறீர் உம் இப்ப விஷயத்துக்கு வாரும்

மடப்: வேடிக்கை என்ன இதிலே எல்லாருக்கும் உள்ளதுதான், இதோ பாரும் பட்டரே நீரும் சின்னப்பிள்ளைதான் விப்ர

நாராயணர் மட்டும் மரமா செடியா மரத்து போயிற அந்த தேவ தேவி மாதிரி ஒரு பொண்ணு கிடைச்சா அடடா கொடுத்து வைக்கனுங்காணும், கரம்பனூர் தாஸிகளுக்கே தனி அந்தஸ்து அழகு தெரியுமோ அவனவன் பை பையா பவுனை வச்சுண்டு உனக்கா எனக்கான்னு அலையற நேரத்திலே இந்த மாலைகட்ற மூஞ்சிக்கு அடிச்சது யோகம்!

பட் : உம்ம கேட்டதே தப்பாப் போச்சு பாவம் நீர் கரம்பனூர் பக்கம் மானசீகமா பயணம் போறாப்போலே இருக்கு' ம்ம்... என்ன செய்யறது எனக்குக்கூட நம்ப விப்ரனுக்கு இப்படி ஒரு அதிர்ஷ்டமான்னு இருக்கு.

மட : அதற்காக நீர் ஒண்ணும் மாஞ்சி போயிராதேயும் மாலை கட்டிக் கொணர்ந்ததற்கு அவருக்கு இந்த அதிர்ஷ டம்னு அதை வாங்கி தினம் அந்த அரங்கனுக்கு சூட்டினீரே உமக்கு ஒரு அதிர்ஷ்டம் வராமலா போகும் ஆங்... அதோ பாரும் உம்ம பூஞ்சிட்டு போவதை.

பட் ; எங்கே மோகனாவா (ஒரு பெண்ணைத் தொடரல்) மோகனா மோகனா கொஞ்சம் நில்லேன்.

மோ : (போயிக்கொண்டே) நிக்கறதாவது உட்காருவதாவது எனக்கு ஏகப்பட்டவேலை

பட் ; [வழி மறித்து மோகனா மோகனா உன்னையேனி தானு தாளா காணவே இல்லை.

மோ ; ஆமாம் வரலை இப்ப அதுக்கு என்ன செய்யணும் உனக் கென்ன நீ கோயில் காளை, திமுதிமுன்னு திரியறே எனக்கு இடுப்பு ஒடியுது. அந்தப் பாப்பன் விப்ரன் வந்தாலும் வந்தான் அம்மாயம்மா அந்த தேவி என்னவோ கன்னா வம் கட்டிக்கிட்டமாதிரி துள்ளுது மஞ்சள் அறைக்கிறதும் மாலிஷ் போடறதும் வெந்நீர் வைக்கறதும் விளாவிக் கொடுக்கறதும் உம் எப்ப முடியுமோ இந்த சல்லாபம் —உம்ம் (அலுத்துக் கொள்கிருள்]

பட் : மோகனா மோகனா...

மோ : என்னய்யா அடிக்கொருதரம் மோகனா,

பட் : [குழைந்து] நீ தான் தினம் தேவியை குளிப்பாட்றயா

மோ : ஏன் அந்த வேலையை நீ செய்யலாம்னு பார்க்கறீய்யா! விளக்குமாறு பிஞ்சிடும் இன்னும் ஒரு தரம் இப்படி தெளிஞ்சே ஆமாம்.

பட் : கோவிச்சுக்காதே மோகனு...நீ இப்படி தேவிக்குநெருங்கின கைங்கர்யம் பண்ணறதாலதான் சும்மக தளதளன்னு வெட்டி வச்ச பம்புளிமாஸ் பழம்மாதிரி மின்னறே அப்படின்னு சொல்லறேன்.

மோ : எதையாவது சொல்லு. ஆனு இப்ப ஒண்ணும்கிட்ட வந்து எதிர்பார்த்து மூச்சு விடாதே ஆமாம் விப்ரரின் கதை ஒரு வழியா ஆனுத்தான் நம்ம கதை பார்க்கணும்.

பட் : அது எப்போ ஒரு வழியாகுமோ! (பெருமூச்சு)

மோ : சீக்கிரம் ஆயிடும் தேவ தேவியும் விப்ரரும் குடும்பமே நடத்தி குழந்தை குட்டிகளேயே பெத்துக்கணுன்னு பார்த்து ஒத்தக் காலலநிக்கறுங்க, அதுக்கெல்லாம்அந்தப் பண பிசாசு அவங்க அம்மா விட்டு வைப்பாளா போருக் குறைக்கு இரண்டு முரடனுங்க அப்பப்ப வந்து போரு னுங்க. சவாரி வண்டிகள், பல்லக்கு, குதிரைக் கோமான்னு எவன் எவனே வந்து பார்த்துப் பார்த்து அம்மாக்காரிட்டே மிரட்டிட்டு பெரு மூச்சு விட்டுட்டுப் போருன். பாவம் பார்ப்பான் என்னடான்னு தாஸி வீடு சாசவதமன்னு நினைச்சு தன்னையே மறந்து கிடக்கான் என்ன ஆகுமோ ரங்கனுக்குத் தான் வெளிச்சம்

பட் : [பயந்து] மோகனு நீ சொல்வதைப் பார்த்நால் நம் விப்ரரின் கதி

மோ : அதோ கதிதான் போகப் போகப்பாரு நான் வரேன்! நான் கிணத்துத் தண்ணீ வெள்ளம் கொண்டுபோயிடாது சும்மா ஏங்கி அழியாதே என்ன வரட்டுமா [போகிருள்]

மற்ருேர் புறத்தில சிலர் கூடி பேசுகின்றனர்.

ஒரு : ஏன் ஸ்வாமி நம்ப விப்ர நாராயணரின் கதியைபார்த்திரா காசானஎச பிடித்தலேயும் வேசியின் வலேயில் போய் விழுந் தானே புத்தி இப்படியா போணும்

அடு : நீர்தான் சும்மா இருக்கிற சங்கை ஊதிக் கெடுத்தீர் இல்லறந்தான் மோட்ச சாதனம் என்று.

மூன் : [காதைப் பொத்திக் கொண்டு] ரங்க ரங்கா என்ன அபசாரமிது! வேசியின் மடியிலா மோட்சம் என்றேன். என்ன அபத்த வார்த்தை எப்படி அவனே மீட்கப் போகிரும்.

மற் : மீட்பதாவது ஒண்ணாவது வேதம் படித்தவன் வேசியின் அந்தத் தீர்த்தத்தைத் தொட்டாலே பாபம்-காற்று பட்டால் பாபம்.

அடு : சாதிப்ரஷ்டகம் செய்து தலையை வாங்க வேண்டும்யாரும் அவன் தொடர்பே வைத்துக் கொள்ளக் கூடாது ஜாக் கிரதை அரங்கன் கோவில் ஆசாரவாசல் இனி அவனை அனுமதிக்காது.

முன் : சே, கற்ற கல்வியும் பெற்ற மேதையும் கைங்கர்ய-பலனும் இனி மண்டங்குடியை வந்து அடைவது எப்போ?

மற் : மண்டங்குடியாவது மண்ணாவது வாருங்கள் அரசினிடம்-போய் சொல்லுவோம்.

சி.கு.: வேண்டாம் வேண்டாம் அரசர் அவ்விருவரையும் நாட்டை நல வழிப் படுத்துகிறார்கள் என்று பெரு மதிப்பு வைத்திருக்கிறார் சமயம் பார்த்திருக்கும் சமண சாக்கியர் கள் நமமைக் காறி உமிழ்வர்.

வாருங்கள், எப்போழ்தும் போல் தாயாரிடம் அந்த ஸ்ரீரங்க நாச்சியிடம் போய் அழுது தொழுது ப்ரார்த்திப்போம்.

ஆமாம் அவள் தான் விப்ரனைக் காப்பாற்றவேண்டும்

[அனைவரும் போதல்]

—திரை—

## காட்சி 11

களநிலை—விப்ரரும் தேவியும் மஞ்சத்தே கொஞ்சி இருக்க—தேவியின் தாய் வெளியே பொருமியபடி பயங்கரமான எண்ணங் களின் உருவாக நடையாடுகிறாள்.

தேவி : ஸ்வாமி அடியாளின் இந்தக் குடிசையும் உபசரிப்புகளும் தேவரீருக்கு அமைவாக உள்ளனவா. இந்தச் சிறுமியின் பேருக வந்த பெருமானே!

விப் : தேவி என் தலைப் பொக்கிஷமே! கொம்புத்தேனை இனிக் கிறதா என்று கேட்கிறாய் மாதவிக் கொடிப்பூவின்

இதழ் ஓரத்தின் வனப்பை எல்லாம் வாசியாக்கிக் கொண்டு நெளிந்து இழையும் இந்த உன் மதுர இதழ்கள் சிந்தும் அமிழ்தம் பருக அடியேன் அறமென்ன செய்தேனோ தெரியவில்லை, என்பரியே

தேவி : இன்னமுதே! காலத்தின் கட்டாயத்தால் ஒடுக்கப்பட்ட இனம் ஸ்வாமி நாங்கள், வேசியும் வேஷமும் ஒன்றென்பார்கள். காலம் தம் கதையைக் கூறும்போழ்து ஏற்றதாழ்வுகளின் இடையிடுதானே அதிகமிருக்கும்.

விப் : தேவி இதென்ன புதுக் கவலை

தேவி : பதட்டமடையாதீர்கள் ஸ்வாமி, பிழை செய்தே வாழும் எங்கள் மரபிற்கும் தேவரீரால் ஒரு நலம் சூழ்ந்ததே என எண்ணுகின்ற போழ்து இந்த வைர மணித தேரை வத்த தவநிதியை வைத்துக் காப்பது எங்கண் எங்கண் என்று இழிகிறேன், மனத்துள் அழுது தவிக்கிறேன். (மயங்கி விப்ரரின் மார்பில் அவடைக்கலம் புகுதல்)

விப் : (அவளை வருடியவாறு) எளியேனை அடிமையாக்கிய உன் கலைநவமும் அன்பும் பண்பும் இருக்கும்வரை நமக்கு ஏன் பெண்ணே இந்தக் கலவரம்

தேவி : நாம் இப்போழ்து சேற்றில் விழுந்து சிரிக்கிறோம் ஸ்வாமி.

விப் : என்ன சொல்கிறாய் பெண்ணே!

தேவி : ஒரு பேய் என் தாய் உருவில் ஆசையயல் ஆடிக்கொண்டிருக்கிறது.

[கதவு நட்டப்படுகிறது]

[தாமதமாகவே சென்று தாழ் நீக்குகிறாள் தேவி]

விப் : என்னடி இரவு பகல் சல்லாபம் ஆண்டியை வைத்துக் கொண்டு அரசாங்கமா நடத்துகிறாய்!

தேவி : அம்மா அம்மா சத்தம் போடாதே அம்மா

தாய் : மூடடி வாயை நீ அவனோடு கழித்த இத்தனை நாளை நீவட்டி பிடிக்கிறான் பாரு. அவனோடு கழித்தால் கூட ஏதேனும் பிரயோஜனம் இருக்கும்.

தேவி : அபசாராம் அம்மா அவரை அப்படியெல்லாம் பேசாதே.

தாய் : விடடி வழியை இப்போ உள்ளே போய் அந்த பார்ப்பானை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகிறேன்

தேவி : ஐயோ வேண்டாம் அம்மா! நீ என்னிடமே சொல்லு இப்போ அவர் என்ன செய்யனும்,

தாய் : உம் அப்படி வாவழிக்கு ஒண்ணு அந்த ஆள் மரியாதையா வெளியே போகனும்—

தேவி : [தேம்பி] இல்லேன்னு—...

தாய் : இந்த முறியிலே கை சாத்து போட்டுத் தரனும்...உம் சீக்கிரம்

தேவி : [முறியை வாங்கிப் பார்த்துப் பதறி] அம்மா! இது உனக்கு அடுக்காது அம்மா!

தாய் : நீ ஏண்டி அப்படியே அதிர்ந்து இடிஞ்சு போறே?

தேவி : அவர் உயிரைக் கேட்டாற் கூட தருவார் அம்மா

தாய் : அதைத்தான் நீ எடுத்துக் கொண்டு விட்டாயே யாருக்கு வேணும் ஆண்டியின் உயிர் போடி முதல்லே சொன்னதைச் செய்.

தேவி : இது மகா அபசாரம் அம்மா. விதியோடு விளையாடாதே ரங்கேச நந்தவனம் அவருடைய உடமைதான். என்றாலும் அது அரங்கனுக்கு அர்ப்பணித்தது அம்மா. அதில் அவர் கொட்டியிருக்கும் உழைப்பும் உயர்வும் அரங்கனின் சொந்தம் அம்மா அந்த ஒப்பு உயர்வு உன்னதத்தை உனக்கு எப்படியம்மா சாசனம் செய்து தர முடியும்.

தாய் : நீ தள்ளிப் போடி நான் கேட்கிறேன்.

தேவி : அம்மா! நான் உன் காலிலே விழறேன் அம்மா கொஞ்சம் தயவு செய் அம்மா!

தாய் : அருமையா நடிக்கிறயே என் மகளே. இந்த நடிப்பை எல்லாம் வாசல்ல காத்து கிடக்கான் பாரு சீமானும் கோமானும் அவனுங்க கிட்ட காட்டடி. பட்டணத்தையே சாசனம் பண்ணுவான்!

தேவி : நியாயம் என்று ஒன்றிருக்கிறதே அம்மா!

தாய் : உங்கிட்டயா, அந்தப் பார்ப்பான் கிட்டயா! எதுடி அம்மா நியாயம். நான் பெத்து வளர்த்து சீராட்டி பளிங்கு வாசல் பவளத் தோரணம் போல நிறுத்தி யிருக்கும் உன்னை அணு அணுவாக ஆண்டு அனுபவிக் கிறானே சத்திரத்து சோறு மாதிரி அதுவா? எது நியாயம்

தேவி : (துடித்து) அம்மா! அரசர் எனக்கிட்டகொடுத்த அத்தனை நிவந்தங்களையும் பரிசுகளையும் நீயே எடுத்துக் கொள் அவரை மட்டும் என்னோடு இருக்கவிடு

தாய் : சும்மா குதிக்காதடி என் மகளே நம்ம குலம் கோத்திரம் தெரிஞ்க்கோ! காலைப் பாாக்க கடிஞ்சு பொன்னு அரை யைப் பார்க்க ஆயிரம் பொன்னு ஆளை முழுசாப் பார்க் கணும்னு அச்சார மெலட்சம் பொண்ணுன்னு வாழ்றவ நாம! இப்படி இருக்க நீ எங்கிருந்தடி எனக்கு வந்து பிறந்தே! இதோ பாரு இப்ப நீ அனுபவிக்கிறயே மகா னுபவம் இதையெல்லாம் நானும் ஒரு காலத்திலே அனுபவிச்சு மயங்கிகிறங்கினவ தான். நாளும் பொழுதும் போச்சுன்னு நானெங்கே நீ எங்கேன்னு போயிடும் தெரிஞ்சுக்கோ சரி அதையெல்லாம் இப்போ நீ புரிஞ்சிக் கிராய் போல இல்லே முடிஞ்சா இந்த முறியிலே கை சாத்து வாங்கி வா இல்லே மூட்டையைக் கட்டச் சொல் ஏதாவது ஒன்று இப்பவே முடிவாகணும் அப்புறம் நீ தாராளமாக கதவை தாழ்போட்டுக்கலாம்.

தேவி : நீ இத்தனை மோசமா நடந்துப்பே என்று நான் நினைக்கலே அம்மா! (உள்ளே போனள்)

விப் : பதறி தேவி இது என்ன நீர் வாரும் விழியும் நெடுமூச்சும் ஏன் இந்த நிலையழிவு! சோகத்துக்கு காரணம் சொல்லு தேவி.

தேவி : ஸ்வாமி இத்தாருங்கள் இந்த முறியிலே தங்கள் முத்திரை வேண்டுமாம்.

விப் : தேவி என்ன வேடிக்கை இது.

தேவி : விபரீதம் ஸ்வாமி! சற்று முன் நாம் சேற்றில் புரண்டு சிரிப்பதாகச் சொல்லவில்லையா.

விப் : எங்கிருந்தாலும் சிரிப்பு சிரிப்புத் தான்! நான் நம்சிரிப்பில் நலம் ஒன்றைத் தான் காணுகிறேன். விரும்புகிறேன் கொண்டு வா முறியை எத்தனை முத்திரை வேண்டு மானாலும் பதிக்கிறேன். அதுதான் அவர்களின் அவசியம் என்றால் அரங்கனின் ஆணையும் அதுவாகத் தானிருக்கும் (ஒப்பமிடல்) விரைந்து வா என் விடிவே! வியப்பிலிருந்து. விடுபட ஏதேனும் விந்தையோ வித்தையோ செய்! அமுதைப் பொழிகின்ற அழகே! வா விரைந்து! உன்

அமுத முகம் பார்க்க நான் இங்கு வரவில்லை பெண்ணே! ஒளி காலும் சோலையெல்லாம் எனக்கு அரங்கனைத் தெரிந்தது ஒரு போழ்து அதை நீதனதாக்கிக் கொண்டாய் என தாதியே போய் வா சீக்கிரம் நாளைய உலகிற்கு நம்மையும் அடையாளம் காட்டுவோம் வா!

—திரை—

## காட்சி 12

களநிலை—அரச அவை பரபரப்பு சூழலின் சோகத்தை அதிகப் படுத்துகிறது. அரசன் அமைச்சன் சமண சாக்கியத் துறவி போதானந்தர் பேதானந்தர் மற்றும் பலர்

அர : நாளோலக்கத்தின் நடப்பு கூறப்படட்டும்

ஓ வா; வணங்கி அரசே அளவுக்கும் அதிகமான பொன் ஈந்து ரங்கேச நந்தவனத்தை தமது சமயத்தின் அவசியம் கருதி தாம் வாங்கியதாக துறவி தயாநந்தர் கூறுகிறா. அதை மதிப்பிட்டு பதிவு செய்து தர ஆவணத்தார் மறுக்கிறார் களாம்.

அர : இதென்ன கூற்று. பொன்செலுத்தப்பட்டுவிட்டதல்லவா?

தயா : பேரம் பேசும் பொழுதே பொன்னும் தந்து விட்டோம் ப்ரபு.

அர : பிறகு ஏனிந்த அவசியமற்ற குற்றச்சாட்டு.

அமை: பொறையருள்க வேந்தே, ஆவணத்தார் ஆய்ந்து மதிப் பிட்ட பின்னர் தான் மறுத்திருக்கிறார்கள்.

அர : அது ஏன்

அமை : அதனை தெளிவாக்கவே இந்த அவை கூடி இருக்கிறது.

ஒரு ஈ. : அரசே, குறிப்பிட்ட பொருளின் பேரம் முடிந்து பொன்னும் கொடுத்து விட்டபின் அதை பதிவு செய்வது தானே ஆவணத்தாரின் கடமை.

அமை : அரசே நான் தயாநந்தருடன் பேச அனுமதி வேண்டு கிறேன்.

அர , நல்லது அமைச்சரே! உமது பேச்சில் நலம் சூழட்டும்.

அமை : தயா நந்தரே இப்படி வருகிறீரா முதலில் இதற்கு பதில் கூறும குறிப்பிட்ட பொருளுக்கு குறிப்பிட்ட விலை இருக்கும் போழ்து அதிகப் படியாக பொன் ஈந்து அதை வாங்கும் அவசியம் என்ன வந்தது உங்கட்கு.

தயா : அதைத்தான் அமைச்சர் பிரான் தாங்களே அவசியம் கருதி என்று கூறி விட்டீர்களே. அத்துடன் (குழம்பிய மனத்துடன் தடுமாறி) அத்துடன் அவசரமும் சேர்ந்த தால்

அமை : அதிகப்படியான விலைக்கும் ஆயத்தமானீர்கள்! அப்படித் தானே ஆங்ஙனம் எங்கிருந்தோ வந்த நீங்கள் பொருளா தாரத்தில் நாட்டில் ஒரு புதுக் குழப்பத்தை ஏற்படுத் தினுல் நாளை நெறி முறைகளைப் பற்றிய நிலை என்ன!

ஒரு : (எழுந்து) அரசே அமைச்சர் தேவையில்லாமல் குழப்பு கிருர்.

அமை: இல்லை வேந்தே இந்த வழக்கின் வலுக்காண முயலுகிறேன் நீர் பதில் சொல்லும் தயா நந்தரே ஏன் அதிகப் பொன் கொடுத்தீர்கள்.

தயா : ரொம்ப நாட்களாக ஒரு பிரசாரக் கூடம் கட்ட எண்ணி இருந்தோம்.

அமை: அதற்கு சோழ மண்ணில் வேறு இடமா இல்லை ரங்கேச நந்தவனம் ரங்கனைச் சேர்ந்தது எனத் தெரிந்தும் எப்படி உங்கள் மனம் அதை வாங்கத் துணிந்தது.

தயா: (அரசனை பார்த்து) இதென்ன வேடிக்கை அரசே! முறி யிலே விப்ர நாராயணரின் கைெயழுத்தல்லவா இருக் கிறது இதோ பாருங்கள்.

(அரசன் அமைச்சரைப் பார்க்கிருன்)

அமை: எளியேனைப் பொறுத்தருளுங்கள் அரசே நான் இவர் களது திட்டத்தை கூறி விடுகிறேன்.

செம்பியன் குலத் தோன்றலே! வைணவத்தை வீழ்த்த வைணவமே ஆயுதமாகக் கிடைத்தது தான் இவர் கட்கு கொண்டாட்டம் மகிழ்ச்சி.

கொள்கை கோட்பாடு இல்லாத அமைப்புகள் நாட்டில் பரவுவதை கண்டு குமுறு எரிமலையான விப்ரர் இவர்கட்கேபர் கேள்விக குறியாக நின்ஞர்.

அவரது வீழ்ச்சி தேவ தேவியின மடியில் கிடைக்க இவர்கள் செய்த முயற்சி அந்நம யாருக்கும் தெரியாது என்று ஆடடம ஆடியவாகள அகப்பட்டபின விழிக கிறாகள். குப்பனேயும, சுப்பனேயும் கொணடு வாருங்கள காவலாா!

(இரு முரடர்களும் வந்து திரு திரு என விழித்து ஒருவரை ஒருவர் பாாத்து உடல் நடுங்கல்)

அமை ; கூலிக்கு மாரடிக்கும் கூட்டத்தில் இவர்களிருவரும் முதன்மையானவர்களை வேந்தே ஏன தயா நந்தரே இதறகு உம்மிடம மறுப்பு இல்லேயே!

தயா : (பயந்து) நான எதனேச் சொலவது அரசே?

அர : இந்த முரடர்கள உமது ஆட்கள தாமே

தயா : நேற்று வரை அப்படி தான் இருந்தார்கள் இன்று அமைசசா என்ன செயதாரோ தெரியவலலே.

அமை : குழம்பாதீர் தயாநந்தரே! கூலிப்பட்டாளம என்பது அப்படித்தானிருக்கும.

வேந்தே! இந்த முரடர்களே வீணுக விசாரிக்க விரும்ப வில்லே ஒரு சானறுக்காகத்தான அவர்ளே இழுதது வரச் செய்தேன அனுபபி விடாலாமா...

அர : செய்யுங்கள் அமைச்சரே! ஆனுல் ரங்கேசந்த வனம் பற்றி ஆய்வு செய்யுங்கள.

அமை : பெருமானே! இப்போதைய விப்ர நாராயணரின் நிலே மிகப் பரிதாபமானது அதுவே இவர்கட்கு கொம்புததேன கிடைத்த கதை எப்படி பார்ததாலும் ரங்கேச நந்தவனம் ஏலப் பொருளானது ஏற்புடையதல்ல.

ஒரு : பொன்னேக் கொடுத்து பொருளே வாங்கியவன் அதைப் பற்றிக் கேட்டால் அமைச்சர் ஏதே ஏதோ பேசிக் கொண்டிருக்கிறரே

அர : இதற்கு என்ன பதில் அமைச்சரே?

அமை: அரசே பேரம் பேசியவர்கள் விப்பரரிடம் பேசாயா பேசினுர்.

தயா : நன்றாக இருக்கிறது அமைச்சரின் வாதம் பேரம். பொருளுக்கே அன்றி தருபவருக்கோ எறிபவருக்கோ அல்ல.

அமை : தெரிந்துதான் பேசுகிறேன் விந்தகரே! ஒரு அறத்தை முறைப்படுத்தும்போழ்து சுற்றுச் சூழல் அதன் தோற்றம் தொடர்புகள் தோற்றுவிடலாகாது அல்லவா? கண்ணில் படுவதே மயக்கமாய்விடும் போழ்து காதில் பட்டதை முடிவு செய்வது கடினம். இவை தேர்ந்து அரசு முடிவு செய்ய வேண்டுகிறேன்.

அர : பெரியோர்களே? அமைச்சரின் வாதம் ஆதாரத்துடன் அழகாக இருந்தது. தீர்ப்பும் யாருக்கும பாதகம் இல்லாமல் இருக்க எண்ணி ரங்கேச நந்தவனத்தை அரசு உடமை கொள்கிறது. அதற்கான உரிய விலை தரப்படும். அதிர்ச்சி அடையாதீர் ஆநந்தர்களே! நீங்கள் அதிகப் பொன் கொடுத்தது உங்கள செருக்கும் தருக்கும் பங்கிட்டுக் கொள்கிறது. இனியாவது உங்கள் சமயப்பணி அறம் சார்ந்து இருக்கட்டும் அவை கலையலாம்.

ஓ. கா ; சோழகுலச் செம்மல்!

பலர் : வாழ்க! வாழ்க!

—திரை—

## காட்சி—13

களநிலை—தேவ தேவியின் திருமாளிகை பாத்திரம்—விப்ரர் நிலைகுலைந்து ஒருபுறம் கிடக்கிறார். உலகின் உயிர்ப்பு கருதி செந்திருவும் அரங்கனும் இரவு நேர மர்ம உலா வருகின்றனர்.

காலம்—பின்னிரவின் துவக்கம்

செங் : (விப்ரரின் நிலை கண்டிரங்கி) என்ன ஸ்வாமி யாரிவன் உருத் தெரியாமல் கிடக்கிறது.

அரங் : நமக்கு திருமாலை கைங்கர்யம் செய்து உகந்த விப்ர நாராயணன்.

செங் : (வியந்து) நமது வனமாலியா இப்படிக், கிடக்கிறான்.

அரங் : ஆமாம் தேவி தெரியவில்லை. நன்றாகப்பார்;

செங் : நாமும் நன்றாக இருக்கிறது. உங்கள் லோக பரிபாலனம். தன்னிச்சையாக தங்கள் தடமார்பில் தவழ்ந்து கொண்டிருந்தவனை இப்படி பூவுலகு அனுப்பி தண்டிக்க என் குற்றம் செய்தான் அவன்.

அரங் : தன்னையும் உனக்கு நிகராக நினைத்து ஏமாந்தான்.

செங் : அப்படி நினைத்ததில் என்ன தவறு ஸ்வாமி.

அரங் : நிலை மறந்தவன் இங்கும், பூவுலகிலும் தன் நிலை மறந்தான். அதற்கான தண்டனை அனுபவிக்கிறான்.

செங் : நல்ல விளக்கம் ஸ்வாமி! உங்களையே கதி என்பவர்களிடம் நீங்கள் பரிட்சை வைத்துப்பார்ப்பது என்பது உங்களுக்கு வேண்டுமானால் வெல்லம் சாப்பிடுவதுபோல் இருக்கலாம். எனக்குப் பிடிக்கவில்லை.

அரங் : நீ தாயல்லவா அதுதான் தகுதி பார்க்க துணிவு இல்லை.

செங் : நீங்கள் இப்படியெல்லாம் பேசுவீர்கள் என நினைத்து தான் நான் அப்போழ்தே எச்சரித்தேன்!

அரங் : எதை தேவி.

செங் : ஒன்றும் அறியாதுபோல் கேட்பதைப்பார்! வனமாலையை அனுப்பும் போழ்தே, அவன் போவதைப்போல் வர வேண்டும் என்று உங்களைப் ப்ரார்த்தித்தேனே அது கூடவா மறந்துவிட்டது.

அரங் : பொருத்தருள தேவி—லோக பரிபாலனம் என்பது சாமான்யமா?

செங் : போதும் நீங்களும் உங்கள் பரிபாலனமும், நான் கேட்கிறேன். வணிகமா செய்கிறீர்கள் உயிர்களின் செயலை அளப்பதற்கு

அரங் : என்ன செய்வது தேவி! செயற்பாட்டைக் கொண்டு உலகை அளந்து ஆளும் எமக்கு கருணை என்பது முக்கிய மகல பரியே! நீ உலகை ஒரு குடும்பமாகப் பார்க்கிறாய். அன்னை. அதுசரி, நான் அப்படிப் பார்த்தால் ஏமாந்து விடுவேன்.

செங் : நீங்கள் எப்படியும் போங்கள் [அலுத்து) முதலில் வனமாலையை நல்லபடியாக மீண்டும் அணிந்து அழகு பெறுங்கள்.

அரங் : எனியேனை பழிக்குள் தள்ளுவதே உன் தொழிலாகி விட்டது. நீ இப்போழ்துதானே அவனைப் பார்க்கிறாய் லட்சுமி கடாட்சம் ப்ரகாசிக்காமலா போகும். இனி அவன் நலமே பெறுவான்.

செங் : எங்கே பார்க்கலாம் நீங்கள் செய்யப்புகும் நலத்தை.

(இப்படி தேவி சொல்லிக் கொண்டிருக்கும்போழ்தே தேவன் ஒரு வைணவ இளைஞனாக உருத்தாங்கி கையில் ஒரு பொன் வட்டிலுடன் இளநகை ததும்ப காட்சி அளிக்கிறார்]

செத் : [நகைத்து] பேஷ் நன்றாயிருக்கிறது வேஷமும் வித்தையும் கையில் என்ன அது பொன்வட்டில் இன்னும் எத்தனை வேஷம் பாக்கியிருக்கிறதே!

அரங் : நம் சுத்தோதகப் பாத்திரம்.

செங் : ஐயையோ அதை வைத்துக் கொண்டு யாரை என்ன செய்யப் போகிறீர்கள்.

அரங் : பதறாதே தேவி.

செங் ! பதறாமல் எப்படி இருப்பது உங்கள் முன் குடுமிக்குள் அடையாளம்.

அரங் : இப்போழ்து நான், அதாவது அடியேன் விப்ரநாராயண தாசன். சிஷ்யன் தேவ தேவியின் தாய்க்கு என்னைப் புரிவதற்காக இந்த வேஷம்.

செங் : இதுலே ஒன்னும் குறைச்சலில்லே. தயவு செய்து உருப் படியாக ஒன்றைச் செய்யுங்கள் (தனக்குள்)

(அரங்கன் போய் கதவை தட்ட தேவதேவியின் தாய் திறக்கிறாள்—''இந்தப் பார்ப்பான் தொலையலையா இன்னம்'' என்றபடி]

அரங் : நான் விப்ர நாராயணனில்லே தாயே, அவருடைய சீடன். ரெங்கன் என்பார்கள். இந்த பொன் வட்டிலே தங்களிடம் சேர்த்து அனுமதி பெற்று வரச் சொன்னார்,

தாய் : என்ன பொன்வட்டிலா, எங்கே கொண்டா பார்ப்போம் (திருப்பி திருப்பி பார்த்து) அட திருமண் சங்கு சக்கரம் கூட பொறித்திருக்கிறதோ, அட ரொம்ப அழகாயிருக்கு இது எத்தனை வைத்திருக்குறாரோ அந்த மறையவர். ஆசார சீலர் அல்லவா? [மகிழ்ச்சி மிக] அந்தக் காலத்து

பெரியவர் வாங்கி வச்சது. ரங்கன் கோவில் தூண் மாதிரி கனம். வேலைப்பாடு...நீ.. நீர் போம் ஸ்வாமி அந்த பாகவதோத்தமரை உடனே வரச் சொல்லும் [பிறகு தனக்குள் நம்ப பொண்ணு ஒரு திரவியக்குவியலையேன்னு நேடிப் பிடிச்சிருக்கா அது தெரியாம அவசரப்பட்டுட் டோமே, கணக்குப் போட்டுப் பார்த்தா இந்த மாளிகை கொள்ளாத வெள்ளியும் தங்கமும் அந்த பார்ப்பானிடம் இருக்கும் போகலிருக்கே]

அரங் ; தாயே இந்த ஒரு வட்டிலைப் பார்த்தே திகைத்தது நின்று விட்டீர்களே. போங்கள் நீங்களே போய் அவரை அழைத்தால் இன்னும் ஏதேதோ கிடைக்கும் போங்கள்

[தேவதேவியின் தாய் விரைந்து விப்ரரை எழுப்பி இன்முகம் காட்டி மாளிகைக்குள் அழைத்துச் செல்ல, அரங்கனும் செந்திருவும் நகைத்தபடி மறைகின்றர்]

திரை

## காட்சி—14

[களநிலை—அரங்கன் கோவில்-ஆசாரவாயில் பாத்திரங்கள் ஊர் பொது மக்கள்,

அடுத்து என்ன நடக்குமோ என்ற ஆவல் அக்கறை கவலை இப்படி கேள்விக்குறியாக அனைவரும் காணப்படுகின்றனர்,

சூழ ஒரு பரபரப்பு சோகம் அவர்களைக் கவ்வ ஒருவரை ஒருவர் பீதியுடன் பார்க்கின்றனர்,

ஒருவர் ! என்ன அக்கிரமம் வட்டிலை, அதுவும் பொன் வட்டில் காணவில்லை என்று எளிதாகச் சொல்கிறீர்களே!

அடுத் ; யாரும் எதுவும் பேசி, அபிப்ராயம் கூறி அனுமானித்து

தவன் குழப்ப வேண்டாம் எல்லோரும் மன்னரிடம் போவோம் வாருங்கள்.

இன் ; ஆமாம் அதுதான் நல்லது வாருங்கள்

[எல்லோரும் வேகமாகப் போதல்]

ஏறத்தாழ அரண்மனையிலும் இதே நிலை வந்ததவர்கள் வியந்து ஒருபுறம் அமர்கின்றனர்.

உணர்வுப் பெருக்கால் அலையின் மத்தியில் அங்கிமிங்கும் நடைபோடுகிறான் அரசன்.

அமைச்சரும் பெருமக்களும் மன்னனையே பார்க்கின்றனர் நிலையழிந்து

ஒருபெரி (எழுந்து) போர் என்றால்கூட தாங்கள் இப்படி முனை பவர் முறிய சந்தித்தது இல்லையே,

**அரசன்:** [குமுறி] ஆம், போர் என்ன போர் சோழமன்னனின் வீர விளையாட்டு படைதிரளும் பகிரங்க முரசொலிக்கும் என் மனைவி வந்து வென்றுவா உயிரே வீழ்ச்சி இல்லா கொற்றவனே கொண்டு பகைவர்களின் தலையை பந்தாடுவோம் என்று திலகமிட்டு வாழ்த்தி வழி அனுப்பு வாளே! அது எங்கள் குல தத்துவத்தின் சாரமல்லவா! தலை குனிவு இல்லையே!

**பெரி:** ஏன் உன் உணர்வு பொங்கிச் சீறுகிறது. இப்படி ஒரு பொழுதும் கண்டதில்லையே! அமைதியுற செயல்பட செயல்பட வேண்டிய தருணமல்லவா இது,

**அர:** வல்லத்துக்கிழாரே! ஆம் உம் வயதில் இது போன்ற இழிவை இம்மா மன்றத்தில் சந்தித்துத்து தானிருக்க மாட்டீர்! என்ன செய்வது என் ஆட்சியில் நடந்து விட்டதே அமைச்சர் எங்கே ஒளிந்து கொண்டாரா!

**அமை:** இதோ முன்னால் நிற்கிறேன் மன்னவா!

**அர:** [பொறுமி] போம், நீர் போய் எங்கள் குலப் பேரரசி செம்பியன் மாதேவியின் செப்பேடுகளை எடுத்து வாரும்! குந்தவை தேவியார் கோவில்களில் ஏற்றி வைத்து குத்து விளக்குகளின் கணக்கைக் கொணர்ந்து தாரும்! எங்கள் குலப்பேரரசன் விஜயாலய சோழன் முதல் ராஜேந்திரன் குலோத்துங்கன் வரை வடித்து வைத்த கற்றளி நிலந்தங் கள் எத்தனை எத்தனை என்பதை அந்த புரத்தில் என் மாதேவியின் மடியிலே தவழும் மழலையிடப் கேட்டுவாரும் அமைச்சரே! அதை நன்றாக பார்த்து தெளிந்த பின்ன ராவது அமைதி என்னை ஆட்கொள்கிறதா பார்ப்போம்!

**அமை:** அரசே கொந்தளிக்கும் கடலாகி விட்டீர்களே! நானுந் தான் அரங்கன் கோவில் செய்தி அறிந்து செய்வதறியாது தவிக்கிறேன்! என்ன செய்ய அலையைப் பாருங்கள்.

அனைவரின் முகத்திலும் ஏதோ ஒன்றை, பெற முடியாத ஒன்றை பறி கொடுத்த நிலை.

அர : (சோகத்தின் உருவாக) அமைச்சரே இப்படி ஒரு இழிவு பழி என் காலத்தில் ஏற்பட நான் என்ன மா பாதகம் செய்தேன்! அரங்கா!

பெரி : சோதனை சூழும் போழ்து சோர்வது அழகல்ல உன்னை தனதாக்கி பெறற்கரிய பேறு அளிக்கத்தான் ரங்கன் கூத்துக் களம் அமைத்திருக்கிறான் வீணாக வருந்தாதே காவலரை அனுப்பி கோவில் பணியாளர்களை அழைத்து வந்து முறை செய்வோம்.

அர : வல்லத்துக்கிழாரே எந்த பணியாளரை அழைத்துஎப்படி முறைப் படுத்துவது ஒருவரா? இருவரா?

மறை கெழு முதியோர் வளர் தமிழ் உரைப்போர், அர்ச்சனை புரிவோன், ஆராதனை அணுக்கர், மடப்பள்ளி வாசி, வாகனம் சுமப்போர், கட்டியக் கெழுநர், கருவூலத் துயர் இப்படி கணக்கில்லர் பணியாளர் பெரிய கோவில் எனப்பெயர் கொண்ட அப்பெருமானின் இல்லம் இது வரை யாரையும் குற்றவாளியாகக் கண்டதில்லையே! என் ஆட்சியில்.

பெரி : விசனம் வேண்டாம் அரசே, விசாரணையில் உங்கள் வேதனைக்கு விளக்கம் கிடைக்கும். காவலரை அனுப்பி அர்ச்சக பரிகாரகரை அழைத்து வரச் சொல்லுங்கள். அவர்கள் தான் அணுக்கப் பணியாளர் அத்துடன் நேற்று காவல் புரிந்தவனையும் அழைத்து வரச் செய்யுங்கள்.

அர : அமைச்சரே இந்த அவையில் வல்லத்துக் கிழாரே மூதறிஞர் அவர் சொற்படி செய்வோம். குறிப்பிட்ட பணியாளர்களை அழைத்து வர நம் அன்பில் இளவலை அனுப்புங்கள்.

[குறிப்பிட்ட அந்த இளைஞன் எழுந்து அவையை வணங்கலும் அங்கொரு ஆரவாரக் கும்பல்நுழையவும் சரியாக இருக்கிறது]

வ.கு. : ஒருவன் வணக்கம் அரசே இதோ இந்த ராமபட்டர் என்ற இளைஞர் தான் நேற்றைய முறைகாரர் அரங்கனுக்கு நேற்று கடைசி காலம் பூஜை செய்து கதவு சாத்தியவரும் இவரே

பெரி : "அப்படியா [என்றபடி அருகில் பட்டர் அருகில் வந்து] என்ன பட்டரே அவர் கூறுவது சரிதானு உம் ஏன் [கடுமையாக] ஏன் விழிக்கிறீர் நடந்ததைக் கூறும் யார் இந்தப் பெண் உமக்கு என்ன முறை சொல்லும்.

அ பெ : ஐயா, ஐயா பெரியவரே அவரை ஒன்றும் செய்து விடாதீர்கள் நான் சொல்லுகிறேன்.

பெரி ; சொல்லு சீக்கிரம் உனக்கும் இவருக்கும் என்ன தொடர்பு பொன் வடிவில் எங்கே இருக்கிறது நீயார்?

பெண் : நான் காம்பனூர் தாஸி தேவியம்மா வீட்டிலே வேலை செய்யறேனுங்க. இவரு எனக்கு ரொம்ப பிரியமுங்க அப்பப்போ வந்து பார்ப்பேன் ...அப்புறம் அப்புறம்...

பெரி : அப்புறம் நீங்கள் எப்புறமாவது தொலையுங்கள் முதலில் வட்டிலைப் பற்றி சொல்லு, இல்லை ராஜதண்டனை பற்றி உனக்குத் தெரியுமா?

அ பெ. : ரொம்ப பயங்கரமா இருக்குங்க நானே சொல்லிடறேன் நானே அதை சொல்லறதுக்காகத் தான் கரம்பனூரி லிருந்து வந்தேன். நீங்கள் இந்த பட்டர் மேலே சந்தேகப் பட்டு ஏதாவது செய்துட்டா என்ன பண்ணறதுன்னு தான்காலையிலேயே ஓடி வந்தேனுங்க.

பெரி : சரி நீ ரொம்ப நல்ல பெண் தான். வீணுக அரசருக்கு வேலை கொடுக்காமல் என்னிடமே உண்மையைச் சொல்லி விடு

பெண் ; ஏன் அரசருக்கு தெரியப்படாதா?

பெரி : என்ன விளையாடுகிருய் யேய் யாரங்கே இவளை இழுத்துப் போய்

பெண் : ஐய்யய்யோ அந்த அசிங்கமெல்லாம் வேண்டாமுங்க சொல்லிடறேன். சொன்னு எங்க ரெண்டு பேரையும் விட்டிருவீங்களா.

பெரி : உனக்கு அரச தண்டனையை நினைவு படுத்துகிறேன் சொல்லு முதலில்.

பெண் : அந்த பொன் வட்டில் தேவியம்மா வீட்டிலே இருக்கு துங்க ஆனு அது தேவியம்மாவுக்கு தெரியாது பெரியம்மா இருக்குங்களே. அந்தப் பணத்தாசை பிசாசு

தேவி அம்மாவுடைய தாய் அது கைல வச்சுண்டு பைத்தியம் பிடிச்சாப்போல புலம்பிண்டே இருக்குதுங்க உண்மைதானுங்க. நாங்க போலாங்கலா. அதை விப்ர நாராயணன்தான் கொண்டு கொடுத்தாராம் அந்தப் பிசாசு சொல்கிறது. அதையும் சொல்லிட்டேன். பெரியவரே எங்களை போக விடுகிறீர்களா [இரங்கல்]

பெரி : பெண்ணே நீ பெரிய கைகாரியாக இருக்கலாம அது தாஸி வீட்டுக்கு அவசியம் வட்டில் வேண்டுமானுல் அங்கு இருக்கலாம். அதை விப்ரர் கொடுத்ததாகச் சொல்கிறுயே அங்கேதான் எங்கட்கு ஐயம எழுகிறது, யாரும் நம்ப மாட்டார்கள்.

ஏன், இந்தப் பட்டரே வட்டிலே உன்னிடம்கொடுத்து அதை இரவோடு இரவாக காம்பனூர் கொண்டு சென்று பின் புலனுக்கு அஞ்சி அங்கு ஒளித்து வைத்திருக் கிறுயோ என்னவோ சரி காவலர்களே விசாரணை முடியும் வரை இவர்களிருவரையும் சிறையில வையுங்கள் பிறகு பார்ப்போம.

[காவலன் இழுத்துச் செல்ல அவர்களிருவரும் அரசே அரசே என்று கூவியபடி செல்லல்]

இனி காம்பனூருக்கு ஆள் அனுப்புங்கள் அரசே உடனே பரியும் பல்லக்கும் விரையச் சொல்லுங்கள்,

அர , அமைச்சரே ஆவன செய்து நீங்களே காமபனூர் சென்று இருவரையும் அவசியம்போல் அழைத்து வாருங்கள,

அரசன் இதைககூறும் போழ்தே விரைந்துவந்த சேவகன் "வெற்றி சோழ குலத்துக்கே சொந்த மாகட்டும்" எனக் கூறியபடி வணங்கி "அரசே அண்மை யில உள்ள சிற்றூர்களில் வாழும் நம் மக்கள் தங்களைக் காண வந்துள்ளார்கள்" என்கவும.

அர : அப்படியா மகிழ்ச்சி அவர்களை உடனே உள்ளே அனுப்பு, அமைச்சரே, நீங்களும் சிறிது இருந்து அவர்களைப் பார்த்துச் செல்லலாமே, எதற்காக வத்திருக்கிறுர்களோ என்ன சொல்லப் போகிறுர்களோ அறிந்து சென்றுல் நல்லதல்லவா.

அமை : அப்படியே ஆகட்டும் அரசே, [வணங்கி]

மக்கள் வந்து கொண்டே—"வெற்றி வெற்றி வெற்றி! பல்லாண்டும் வெற்றி சோழ மண்டலத்தையே அலங் கரிக்க இறைவனை வேண்டுகிறேம்"

அர : நல்லது என் அன்பார்ந்த பெருமக்களே நன்றி நீங்கள் இந்த எளியேனை காண வந்தமைக்கு, உங்கள் நலங் கூறுங் கள் முதலில் சிற்றூரின் கண் சிறப்புகள் மலிந்துள்ளனவா ஆன்றோரும் சான்றோரும் அந்தண்மையும் காக்கப்படுகின் றனவா, பள்ளிகளில் நம் சிறுர்கள் அன்பாலும் பண் பாலும் ஈர்க்கப்பட்டு இறையருளைத் தெரிந்து ஒழுக்கமுற கல்வி பயிலுகிறார்களா! நான்கூட அந்தப்பக்கம் முறை காண வந்து வெகு நாட்களாய்விட்டது.

மக் : அதனாற்றான் நாங்களே வந்துவிட்டோம் மன்னா! தாங்கள் வருகை தராததால் சிற்றூர்கள் எல்லாம் வான் மறந்த பயிராக தாய் மறந்த சேயாக காட்சியளிக்கிறது. அரச அலுவலர்களின் ஆணவம் எங்களை அச்சமுறுத்து கிறது, எந்த முறைக்காகச் சென்றாலும் கையூட்டை எதிர்பார்க்கிறார்கள்!

அர : (வெகுண்டு) அமைச்சரே!

அமை : இன்னும் அவர்கள் ஏதோ கூற நினைக்கிறார்கள் அரசே,

அர : அச்சமின்றி கூறுங்கள் அனைத்தையும்.

மக் : ஆமாம் அரசே சொல்லத்தான் வந்திருக்கிறோம். பொறை யருள வேண்டும். எங்களை இரண்டாந்தர மக்களாக நினைக்கும் நகரத்தார்போல அவர்களும் "நாட்டுபுறத் தான்தானே, என்கின்றனர். கோவிலுக்கு என்று தரப் பட்ட நிலங்களிலிருந்து குத்தகை சரியாக வராததால் வழி பாட்டு நெறிகளை கடைப்பிடிக்க முடியவில்லை. தண்டோ ராப்போட்டு அரசு அறிவிக்கும் நலன்கள், சொல்லப் போனால் எங்கே யாருக்கு போகிறது என்று தெரிய வில்லை. பள்ளிகளில் ஏட்டுச் சுமை அதிகரிக்கும் அளவு எழுத்தறிவு கூடவில்லை. இதையெல்லாம் நாங்கள் சொல் வதற்கு மீண்டும் பொறையருள் வேண்டுகிறோம்.

அர : இவர்கள் தொகுதி உறுப்பினர் இன்று ஏன் அவைக்கு வர வில்லை.

ஒரு : (எழுந்து) இன்று மாமன்றம் கூடும் நாளில்லை, ஆதலால் பேச்சு, கூட்டம் என்று எங்காவது சென்றிருப்பார்.

மக் : (ஒருவர்) வேடிக்கையா வித்தையா என்று தெரியவில்லை. யார்யாரோ புறச் சமயிகள் என்று சொல்லிக்கொண்டு சாதாரண மக்களை காசாசை காட்டி வசப்படுத்துகிறார் கள், பயமாக இருக்கிறது. சமய நெறி கூறும் சான்றோர்

களை அனுப்புமாறு வேண்டுகிறோம். விப்ர நாராயணர் என்ற வேதியர் ரொம்ப விவரமுள்ளவராக இருக்கிறாராமே! நாங்கள் அவரைப் பார்க்க முடியுமா அரசே!

அர : அவரை நீங்கள் இப்போழ்து காண வேண்டாம். நானே அனுப்பி வைக்கிறேன். நீங்கள் செம்பியன் குலத்துக்கு செய்த நன்றி உங்கள் வருகை. நான் உடனே முறை காண முயலுகிறேன். சென்று வாருங்கள், அமைச்சரே பெருமைக்குரிய நமது இம்மக்கட்கு பகலுணவுக்கேற்ப ஆவன செய்யச் சொல்லுங்கள். அப்படியே உம்மையும் அனுமதிக்கிறேன் திருக்கரம்பனூார் சென்று வா;

திரை

## காட்சி 15

களநிலை—அரங்கன் கோவில் தெற்கு பிரகாரத்தில் உள்ள ஒரு மண்டபம் பாத்திரங்கள். முக்கியமானவர்கள் என்று இல்லாவிட்டாலும் விப்ரரின் பால் அன்பும் பற்றுதலும் கொண்ட கோவில் தொழிலாளத் தோழர்கள்.

(வந்து கொண்டிருக்கும் ஒரு பெரியவரைப் பார்த்து ஒருவன் பேசல்) என்ன ஸ்வாமி விப்ரரின் கதை எப்படியிருக்கு.

அவர் : கதையோ கன்றுவியோ என்ன இழவோ மனுஷன் அயோக்யத்தனம் பண்ணிட்டான், இனிமேல் அவன் எப்படித் தொலைஞ்சால் நமக்கு என்ன [வெறுப்புடன்]

அவன் நீர் தான் ஸ்வாமி அவருக்கு இல்லறத்தைப் பற்றி எடுத்துச் சொன்னது மோட்ச முக்திகளைப் பற்றி...

அவர் : ரெங்க ரெங்கா மகா அபசாரம். இது இளம்பிள்ளை கூடற பக்கம். வரவே கூடாது என்கிறது சரி. அபத்தக் களஞ்சியமா எதையாவது சொல்லி அசிங்கப்படுத்திடுவேன் மோட்சமும் முக்தியும் தாசியின் மடியிலா கிடைக்கும்னு சொன்னேன். நல்ல பேத்தல்டா அப்பா நான் வரேன். (நழுவுகிறார்]

ஒரு : மற்றொருவனைப் பார்த்து சரியான பார்ப்பான் ஐயா இந்த ஆளை நம்பவே கூடாது இல்லறம் அது இதுன்னு விப்ரனை கிளம்பி விட்டதே இவர் தான்.

ஒரு : இல்லறம்ன்னு என்னப்பா அது!

மற் : உம், இல் என்றால் வீடு அங்கே போனா பெரியவங்க அது வேணும் இது வேணும்னு சொல்றதோடு நில்லாமல் பொண்டாடிகிட்ட படுத்துக்க கூட ஏகாதசி அம்மா வாசைன்னு எதையாவது சொல்லி அனுக்கிறாங்களே அது அறம்.

அடுத் : பாவம்டா இவன் ரொம்ப நாளா தன்னைப் பற்றி யாரிட்டயாவது சொல்லணும்னு துடிச்சிண்டு இருந்திருக்கான் அதை நேரம் பார்த்து இங்க உளர்ரரான்.

இன் : டேய் அவன் நல்லவிளக்கம் சொல்லுறான்டா நல்லறம்ன்னு என்னுன்னு கேளேன்.

அவன் : அதுவா, குழைந்தை இப்படி பிரச்சனை இல்லாம உப்பு புளி கவலை இல்லாம கையில் கிடைச்சதை அங்க இங்க கொடுத்துட்டு வந்து அக்கடான்னு விழுந்துகிடக்கிறானே அவன் செய்யறது நல்லறம்.

மற்ற : அந்த அறம் பற்றி இந்த விப்ரனுக்கு ஏன்டா தெரியலை கோவில் பொன் வட்டிலை திருடிக் கொண்டு கொடுக்கிற அளவுக்கு ஒரு சுகானுபவமா!

ஒரு : அதை அவரை கேட்டால் தெரியும்.

அடுத் : சுகானுபவன்னு, ஈரவாடை தத்தியோன்னமா! பங்குனி உத்திர ப்ரசாதம்டா ஆசைக்கு அன்புக்கு அந்த ரங்கத்துக்கு.

முதல் : எந்த ரங்கத்துக்கு—

ஒரு : இவனைப் பாரடா அந்தப் பய ராமபட்டனுக்கு பார்த்த பெண்ணையே நினைச்சுண்டு பேசரான்

ஒரு : கிடக்கான் அவனை விடு நீ சொல்லு இப்ப என்ன சொன்னே ஆசைக்கு அன்புக்கு அந்தரங்கத்துக்கு—

அவன் : அதாண்டா, ஆசைக்குன்னு மடப்பள்ளியிலே தெரிஞ்சு தெரியாமல் சாப்பறமே அது, ஆத்துலே அம்மா பிரசாதம் நல்லா இருக்குடா இன்னும் கொஞ்சம் போட்டுக்கோ

என்கிறுளே அது அன்பு, யாருக்கும் தெரியாம ராத்திரிக் குன்னுலச்சிருந்து பொண்டாட்டியோட சாப்பிட ரோமே.

முதல் : அது அந்தரங்கமாகும். ஆக இல்லறமோ நல்லறமோ சுகானுபவம் என்பது பங்குனி உத்திரப்ரசாதம்

ஒரு : வந்து கொண்டே— அதுலே என்ன சந்தேகம் உங்கட்கு.

இன் : யாரு தவில்கார தங்கச்சாமியா சரியான நேரத்திலே வந்து சாபு தட்டுகிறீர் ஐயா, நாங்க விப்ரர் விஷயமா பேசிக் கொண்டிருக்கோம் அது என்னவோ மார்கழி மாசக் குளிரிலே வாசிக்கிற தவல் மாதிரி தாள அட்சரம் தெரியாம தடுமாறுது.

தவில் : தடுமாறினு வாரை இழுத்து பிடிக்க வேண்டியது தானே இந்த பொன் வட்டில் விஷயம் புதிராகத் தானிருக்கிறது இப்படியொரு குற்றத்தை விப்ரர் செய்திருக்கவே முடியாது அதற்கான தைரியமும் அவருக்கு கிடையாது நான் அவரோட பழகினவன் அடிச்சு சொல்லுறேன்.

மற்ற : ஆமாம் நீங்க தவில் காரர் எதையுமே அடிச்சுதான் சொல்வீர்கள் சரியாவும் இருக்கும்.

தவில் : சரி கிண்டல் இருக்கட்டும், இப்ப விப்ரரின் விஷயத்துக்கு வாங்க.

ஒரு : விஷயம் அரசுக்கு போய் அரசும் காம்பனூர் வரை போயிருக்கு. பொன் வட்டிலேப்பற்றிய புலன் துவங்கி யபேச்சு- அதை யாரு எப்படி எடுத்தார்கள் கொடுத் தார்கள் என்பதுதான் தெரியவில்லே.

இந்த ராமபட்டனே இழுத்துண்டு போஞர்கள்.

பாலம் இத்தனூண்டு பிள்ளே இவனுக்கு தாசியும் - ஆசையும் தேவைதாஞ?

அந்தப் பெண்ணோடு இடுப்பில் ஏறித்தான் இவன் அவன் முகத்தைப் பார்க்கணும் அவ்வளவு உயரம்

எதையோ கொடுக்கருன் அந்தப் பொண்ணும் இளிக் கிறது. சன்னதியிலேயே வெட்கங்கெட்ட பயல் பின்ஞலேயே ஓடருன் பல்லே காட்டிண்டு.

தெய்வம் விட்டதா பாரு சரியான தண்டனை,

இதுல பிற மதஸ்தர்கட்கு தொடர்பு உண்டாம்.

அவங்களை முதல்ல அவர்கள் இடத்துக்கு போகச் சொல்லணும். இல்லேன்னு நம்ப நாடு சம்ப்ரதாயம் ஆசாரம் இதுகளை தேடிப்பிடிக்க வேணடியதா போயிடும் அவசர அவசியமா செய்ய வேண்டிய காரியமிது.

இப்படி வேடிக்கையும் விபரமுமாகப் பேசிக் கொண்டிருக்கும் நண்பர்களை திரை விழுந்து மறைக்க.

நாம் அவசர அவசரமாக அரசவை செல்கிறோம்.

அரசனின் அமைதியான சினம் அமைச்சருடன் விப்ரரும் தேவ தேவியும் பரபரப்பாக நடுங்கியபடி வந்து வணங்கல் பொது மக்கள் நெருக்கி அடித்துக்கொண்டு சபை கொள்ளாமல் நிற்றல்.

அர : வாரும் விப்ரரே, நலமா!

விப் : பழி சுமந்து வந்திருக்கிறேன் வேந்தே; பரிகாசம் செய்யாதீர்கள்.

அர : மண்டங்குடி மறையவரே சோழகுலம் உமக்குச் செய்த துரோகம் என்ன.

விப் : ஐயோ! இப்படி எல்லாம் பேசுவதைவிட என்னைக் கொன்று விடுங்கள் அரசே! தண்டனைக்கல்ல, பழிக்குத் தான் அஞ்சுகிறேன்!

அர : அதுதான் என் நிலையும், சோழர் வரலாற்றில் துடைக்க முடியாத ஒரு களங்கம் அதன் நாயகர் நீர்.

விப் : போதும் அரசே வெந்து நொந்த மனம் வேல் பாய்ச்சாதீர்கள் அடியேனைப்பற்றி தாங்கள் அறியாததா;

அர : பொன் வட்டில். அதுவும் அரங்கனின் சுத்தோகப் பாத்திரம். உலகு புரந்த விடாய் தீர அவன் அருந்தி ஆநந்தமுற தூய நன்னீரை குறையாமல் தன்கைத்தே கொண்டது.

அமை : ஆம் அரசே

அர : ஆக இவர்களால் அரங்களின் தாகத்திற்கு கூட தண்ணீர் தர முடியாத பாவியாக்கப்பட்டேன் நான் அப்படித்தானே அந்தணரே எங்கே அந்த தாஸியர் குலக்கொழுந்து...

தேவி : இதோ இருக்கிறேன் மன்னா! தயவு செய்து சொல்லில் விடம் தடவிக் கொல்லாதீர்கள்.

அர : உரக்கப் பேசும் அளவிற்கு இந்த மா மன்றம் உங்களுக்கு உரிமை தந்திருக்கிறது. இல்லையா!

தேவி : ஐயமில்லை அரசே.

அர : அப்படி இருந்தும் ஒரு ஈனத்தனமான ஊனத்தை அரசின் மேல் சுமத்தி விட்டீர்களே. இது வந்த ஊனம் உங்கட்கா? எங்கட்கா? (பொதுமி விசனித்தல்)

தேவி : நிச்சயமாக எங்கட்கு தான் அரசே; சிறிது நிலைபழியாமல் கேளுங்கள். அமைச்சர் வந்து அழைக்கும் பொழுதுதான் எங்கட்கு பொன் வட்டிலை பற்றி தெரியும்!

அர : அதுவரை நீங்கள் ஒரு உல்லாசக் களத்தை அமைத்துக் கொண்டு விளையாடி இருக்கிறீர்கள் அப்படித் தானே.

தேவி : உண்மைதானரசே வெட்கத்தை விட்டு சொல்கிறேன் பெற்ற பேற்றை இழக்க முடியாத பேதமையிலிருந்தோம்

பெரி : முன் வந்து வேறு எதுவும் உங்கட்கு தெரியாது விப்ரரும் தேவியும் அவரை வணங்கி தெரியாது ஐயா

பெரி : வேந்தே இனி விசாரணை அவசியமில்லை. வட்டில் இருக்குமிடம் அமைச்சர் அறிந்து கொண்டார். அன்று அவையில் அந்த வேசிப் பெண் சொன்னதே மெய்யாகி விட்டது. அதை யார் கொண்டு கொடுத்தார்கள் அந்தக் குற்றவாளி யார் என்பதை அறியும் வரை இவர்கள் பாதாளச் சிறையில் இருக்கட்டும்.

அர : உண்மைதான் வல்லத்துக்கிழாரே ஆனால் தேவி அம்பு தான். அதை எய்த பொறுப்பிற்கு விப்ரர் தான் ஆளாகிறார். அதனால் அவரை மட்டும் அடைத்து வைப்போம். வீணாக ஏன் ஒரு பெண் பாவம். தவிரவும் அவசியமில்லாமல் குற்றம் சுமத்தி சோறு போட அரசாங்கம் தண்டச்சத்திரமா என்ன! இரண்டு நாள் கழித்து நாம் சந்திப்போம்.

[என்றபடி அரசன் செல்ல பொதுமக்கள் தெரிந்ததை பேசிக் கொண்டே கலைதல்]

—திரை—

## காட்சி 15

களதிலே இருண்ட பாதாளச் சிறை பயங்கரத்தின் ஒரு அடையாளம்.

பாத்திரம் விப்ரர்

விப் : சரியான தண்டனை காராக்கிரக வாசம் சிறிது கூட வெளிச்சம் தெரியவில்லையே! ஐயோ [சுவற்றில் முட்டிக் கொள்கிறார்]

[இப்போழ்து அவரது ஆன்மா பேசுகிறது]

ஆன் : வெளிச்சம் வேண்டாமென்று இருள் தேடி வீழ்ந்தவனே இன்னும் இரண்டு தரம் முட்டிக் கொள்.

விப் : யார் யாரது (அழுதபடி தடவிக் கொண்டே)

ஆன் : நிச்சயமாக தாஸி தேவ தேவி இல்லை,

விப் : பின் யார்...ஓ நீயா என்னை நீ கூடவா தெரிந்து கொள்ள வில்லை என் அகத்தே சதா எரிந்து கொண்டிருந்த விழிப்பே என்னை வழி நடத்தாமல் இத்துணை நாள் எங்கு சென்றிருந்தாய். சிறித் தெரித்து எழும் என்றதிலே உன்னால்தானே எனக்கு இந்த தண்டனை!

ஆன் : உம்,தண்டனை, மறை மறந்த உன்மயக்கத்துக்கு தண்டனை போதாது விப்ரா விதுரனின் ராஜா நீதி கற்றவனே! அதில் என்ன சொல்லியிருக்கிறது. எண்ணிப்பார் வேத மறிந்தவன் அதன் வழி நின்று வினை புரியானாயின் ஏர்காலி விட்டு உழும்படி செய்ய வேண்டும் என்று சொல்லி இருக் கிறது. அதெல்லாம் படித்த நினைவாவது இருக்கிறதா அந்தணரே பாவம் சோழன் நல்லவன் சும்மா விட்டு விட்டான்!

விப் : ஆத்மா என்று உளறிக் கொண்டு அடாதன கூறும் ஏ பேயே உன் கழுத்தை நெறித்தாலென்ன [அதே பாவத் துடன் வந்து கீழே விழுகிறார்] சொல் நீ இத்தனை நாள் எங்கு போயிருந்தாய்.

ஆன் : கேவலம் மின்னலென தோன்றி மறையும் சிற்றின் பத்திற் காக ஒரு தாஸியைப் போய் என் உயிரே உறவே என்றெல்லாம் அழைத்து மகிழ்ந்தாயே மறந்து விட்டதா நான் வலிய வந்து நின்ற போழ்து கூட நீ என்னை பார்க்க வில்லையே!

விப் ! உண்மை தான்... பார்க்கத்தானில்லை உன் குரல் கேட்கத் தான் மறுத்தேன்...இது தான் மதியழிக்கும் விதிபோலும் விதி இல்லை மதி இல்லை என்று ஆணவம் போகபவர்கள் கூட வீழ்வது இப்படித் தான் எங்கே என்மதிசார்ந்த மனச்சாட்சி வா போய் விடாதே இனியாவது என்னை நெறிப்படுத்து (தறுதல்)

ஆன் ! [ஏளனமாகச் சிரித்து] நாளைக்காக காத்திரு நண்பா!

—திரை—

## காட்சி 16

களறிலை—இரவு நடுநிசி சோழனின் அந்தப்புரம் சோழனும் அவனது சுந்தரியும் துயில் காணல்,

சோழன் புரண்டு படுக்க பகல் நிகழ்வுகள் ஆட் கொள்கிறது துயில் தூரப் போகிறது.

புரளல் புலம்பாலகிறது மெதுவாக தனக்குள்ளே அரற்றல்,

கனிவு கடுமை இந்த உணர்வுக்களிடையேஎழுந்து உட்கார்ந்து விடுகிறான்.

சூழ சூழ்ந்துள்ள பேரொளி கண்டு திகைக்கிறான்.

அரசியையும் எழுப்புகிறான்! ஒளியுனூடு அரங்கனும் அன்னை ரங்கநாயகித் தாயாரும் காட்சி தருகின்றனர்.

அரச தம்பதியினர் வியப்போடு கரம் குவித்து வணங்கு கின்றனர்.

இறை: செம்பியன் குலச்சீரே தெளிவு பெறு. நீ விப்ர நாராயணர் பால் கொண்டுள்ள அன்பால் அறம் செய்வதறியாது அவலப்படுவதை யாம் அறிவோம்.

அந்த பொன் வட்டிலை தேவ தேவியிடம் தந்தது யாமே.

அன்றொரு நாள் மன்றொன்றில் மாறு வேடத்தில் நீயும் அமைச்சும் அவனது சொற் பெருக்கை மாந்திய

போழ்து அவன் இறைவன் தமது உடமைகளை தாமே காப்பான் அரசனைப் போல்'' என்றமை நினைவிருக் கிறதா மகனே?

அர : அருளின் இலக்கணமே! கூறுங்கள்! யான் பெற்ற பேறு களைப் பொழுதேனும் தொடரட்டும்! செய்ய வாய் கொப் பளிக்க இந்த சிறியேனிடம் பேசுங்கள்! முறை கூறலந்த முதிலே! தவறேதும் நடந்து விடுமோ என்று தகித்து தவித்துக் கொண்டிருந்த எளியேனை முதலில் காப்பாற்றி விட்டாய் நன்றி இனி விப்ரரும் அவரது ஐயம் திரிபற்ற வாழ்வும் வேத விளக்க விலாசமும் மேன்மையுறச் செய்வேன்.

அரங் : சோழா வாழட்டும் உன் தொன்மையும் அறமும், [மறைதல்]

அர : [கேவி] பெரும! எங்கு சென்றீர் பிணக்குறும் வண்ணம் ஏதேனும் பேசி விட்டேனு! அதற்குள் மறைந்து விட்டீர் களே!

[நிலையடைந்து] சரி, செய்தவத்தின் மேன்மை இவ்வளவு தான் போலும்.

யாரங்கே [அருகிலுள்ள மணியை அடிக்கிறான்]
[காவலர் ஓடி வந்து] ஆணையிடுக அரசே!

அர : அமைச்சர் தளபதிகளை காராக்கிரகம் அழைத்து வாருங் கள் [சொல்லியபடி] மாதேவி வர நாமே சென்று விப்பரரை பார்ப்போம். அங்கும் ஏதேனும் விந்தை விளைந்திருக்கும் [இருவரும் விரைதல்]

அடுத்து உபகளம் காராகிரகம் படுத்து அயர்ந்து புரண்ட விப்ரர் கீழே விழுகிறார் சட்டென்று எழு கிறார் சூழப் பார்க்கிறார்.

விப் : வெட்கம், குழந்தையைப் போல் கீழே விழுந்திருக்கிறேன். உம் என்றோ விழுந்தாய் விட்டது இனி என்ன நாணம் மானம்! என்ன இது மலர் மஞ்சம். இத்தனை பொழுதும் இதிலா அயர்ந்தேன். அட! சொல்லத் தோணாத ஒரு சுகானுபவம் என்னைச் சூழ்கிறதே.

[சுற்றிப் பார்த்து] வியப்பையும் வித்தையையும் விரித் தவர் யார் இங்கு.

பாதாளச் சிறையிலே பளிங்கின் பேரொளி

அழகை எழிலை மகிழ்வை சூழ தோரணமாக்கி தொங்க விட்டவர்கள் யார்.

என்ன—காண்படும் இடமெல்லாம் மலர் விரிப்பு

ஐயோ. அதிர்வும் விதிர்வும் இந்தப் பாபியை ஏன் ஆட்சி செய்கிறது.

மலர்களின் மணமும் வண்ணமும் எனக்கு புளகம் தரும் போழ்தே பயமும் தருகிறதே.

ஐயனே! அரங்கா இது என்ன சோதனை!

உனக்கு மலரால் தொண்டு செய்த எளியேனுக்கு மலரால் தண்டனையா!

[முகம் மலர்ந்து] மலரால் மலரான் மா மலரான் தாமரையாள்! ஆம் தாமரையாள் தயவினை மறந்தேன்! இப்போழ்தே நினைந்தேன் இனி வினை இல்லை வெற்றி வெற்றி!அம்மா அரங்கத்து நாயகியே அடியேன் துயர் போதாதா! வாரும் வந்தென்னைக் காரும்!

[அரசனும் அரசியும் சிறைக்கு ஓடி வருதல்]

அர : விப்ர நாராயணரே! 'மண்டங்குடி தந்த மறையாளா! பொறையருள்க! எளியேனின் பிழைதெரியாமல்நடந்தது.

[கதறியபடி விப்ரரின் கால் பற்றுதல் ராணியுடன்]

விப் : கலலையோ, கதறவோ வேண்டாம் அரசே பாதாளச் சிறையை நன்ருகப் பாருங்கள்

மலர் தொண்டு செய்தவனுக்கு மலராலேபாதுகாப்பு அரங்கன் நம் எல்லோரையும் பழியின்றி காப்பாற்றி விட்டான்.

[தேவ தேவி அவள் தாய் அரசு சார்ந்த பெருமக்கள் அனைவரும் அங்கு கூடல்]

அர : ஆம் அந்தணரே! நேற்றிரவு கனவில் அரங்கன் தேவியுடன் வந்து உம்மை குற்றமற்றவன் என்ருன் இதோ என் மனையாள் சாட்சி.

அரசி : உண்மை தான் விப்ரரே உம்மால் எங்கட்கு ஒரு உயர்ந்த பேறு கிட்டியது.

விப் : என்ன சொல்கிறீகள் அரசே என் ஐயன் அரங்கன் உங்கள் கனவில் வந்தானு! ஐயோ என் உடல் எல்லாம் தேனூறு கிறதே! அருளாழிப் பேராளன் இந்த எளியேனை ஏன் புறம் போக வைத்தான்!

என் ஐயனின் வனப்பையெல்லாம் வாரி முகர்ந்த சோழ குலத் தோன்றலே!

உன் அறத்திற்கு என் தொண்டு தோற்றதா?

சுடரொளி பயிலும் என் சுவாமி தன் செந்நாமிழற்றி எளியேனை குற்றமற்றவன் என்று கூறினுரா.

அரசி ; அது மட்டுமல்ல-பொன் வட்டிலை தேவியின் தாயிடத்தில் கொடுத்தாரும் அவர் தானும்.

விப் : (அழுது அரற்றி) அப்படியா! அரசே! இப்படி நீங்கள் எல்லாம் என் அரங்கனைக் காண என்ன தவம் செய்தீர்கள் சொல்லுங்கள் அரசே! சொல்லுங்கள் அந்த அளப்பரும் சோதியைக் காண எளியேன் என்ன செய்ய வேண்டும்!

கால் பற்றி கதறுகிறேன் அரசே! என் அரங்கனைக் காண நீங்கள் செய்த பேறு முயற்சி பற்றி கூறுங்கள்.

எங்கே தேவ தேவியின் தாய்! அந்த அமுதவாற்றை அவன் எங்கே எப்படி கண்டாள்.

(தேவி தாயின் திருவடி பற்றி)

அம்மா தாயே! நீங்களாவது சொல்லுங்கள் தானுண்ட அமிழ்தை தர மறுக்கினுர் அரசர் நீங்களாவது எச்சிலை எறியுங்கள் என் மீது.

அந்த அமுதச் சிதறலாவது எனக்கு என் ஐயனைக் காட்டட்டும்.

அவர் என்ன கூறிக் கொண்டு தங்களிடம் வந்தார்.

தேவி : தாய் பயத்துடன் விப்ரரே இந்த நாடகத்தைப் பற்றி யெல்லாம் நான் என்ன கண்டேன். முன் குடுமியும் தலையுமா ஒரு பிள்ளையாண்டான் உன் சிஷ்யன் என்று சொல்லி இந்த வட்டிலை என்னிடம் தந்தான் எனக்கு வேறு எதுவும் தெரியாது.

விப் : என்ன முன் குடுமி பிள்ளையாண்டான் எனது சீடனு! அரங்கா! அடியேனை உனக்கு சீடனுக்கி அல்லவா இத்துணை நாளும் தொண்டு செய்து கொண்டிருந்தேன்! அபசாரம்!

நீ என்து சீடனி தாஸி விட்டிற்கு அனுப்புகிற நல்லஆசாரி இந்த விப்ரன்! நன்ருக இருக்கிறது பேராயிரம் கொண்டவனே! எளியேனுக்கு ஒரு பேறு நல்க என்ருது பிழை சுமத்துகிருயே! இது உனக்கே நன்ருக இருக்கிறதா

உனக்கான சிறு தொண்டில் மயங்கிய அடியேன் வண்ணங்களை மாற்றியமைத்து மாலைகட்டி உனக்கு அணிவிக்கச் செய்து பார்த்து மகிழ்ந்து பரவசமுற வேண்டும் என்று சில போழ்து இருமாந்ததுண்டு.

அந்த அகம் அழிய இப்படி ஒரு தண்டனை என்ருல் எளியேனுல் தாங்க முடியுமா? ஸ்வாமிவாரும் என் மாசு அற்ற வாரும்.

அரங்கத்து நாச்சியே, உன் ஆளனை அழைத்து வாரும் அம்மா என் தாயே! அரங்கா! ப்ரபு! விப்ரனை விழுங்கிய விதிகளை அவிழ விளக்கம் விடை தாரும் என் வள்ளலே!

(உணர்ச்சி வசப்பட்டு மூர்சையாகிருர்)

களரிலே—செய்வதறியாது அனைவரும் திகைக்கின்ற வேலை கார் வனத்தை பிளப்பது போன்று ஒரு மின்னல் பளிச்சிட கண்களை கசக்கியபடி எல்லோரும் பார்க்கின்றனர்

அரங்கன் தன் நாச்சியுடன் காட்சி தருகிருன்.

அரங் : விப்ரா எழுந்திரு உன் விசனத்திற்கு விடிவு வந்துவிட்டது என்னைப் பார்.

விப் : (துடித்து துள்ளி எழுந்து) ஐயனே அரங்கத்து மேவிய பேரொளியே எளியேனின் பிழை இல்லாமல் பிழைக்கு விடிவு வந்து விட்டதா! கோடி முறை வணங்குகிறேன் கொண்டலே! யாது கருதி இந்தச் சூது.

அரங் ; உன் மேன்மை கருதியும் உன்னை தன் நிலைப்படுத்தவும் இப்படி ஒரு விளையாட்டு, வந்த வேலையை மறந்து விட்டாயே,

விப் : துயர் தாள வில்லை ப்ரபோ பொறுத்தருளவேண்டுகிறேன் சிந்றின்ப விளையாட்டை சீ என்று தள்ளிய விப்ரன் உம முன் நிற்கிறேன் சினம தணிக என் சீரே சினம் தணிக!

அரங் : நாச்சியும்—நல்லது விப்ரா

விப் : தாயே உங்களிடமும் தான் ஒன்று கேட்கலாமா!

எளியேனைத் தடுத்தாட்கொள்ளும் முறையில ஏன் இத்தனை தகிடுதத்தும்.

அரசன் ஆளுவோன்! தேவரீரைப் போன்று மக்களை நெறிப்படுத்தி மாறாத அன்புடன் செங்கோல் செலுத்த வேண்டியவன் அந்த வகையில் வேந்தன் உம் நிறைக்கு நிகரானவன்! அந்த நிலை மாணவின் மாட்சி.

அரங் : விப்ரா நாங்கள் அரசனின் கனவில் வந்ததைக் கூறவா இந்தத் தயக்கமும் மயக்கமும் அதுவும் உன் பொருட்டுத் தானே.

விப் : ஆனால் தேவ தேவியின் தாய் தாசி செய்த தவம் என்ன ப்ரபோ! எளியேனை அபசாரகளுக்கு அவளுக்கு ஒரு உபசாரம் செய்து விட்டீர்களே! மறை காணு மாண்பே! அவள் முன், கேவலம் அடியேனுக்காக திருவாய் மலர்ந் தருளிய எளிமை என்னென்க! வேத சாஸ்த்திரங்களின் விளிம்பிலே நின்று விளையாடும் வித்தகர்கள் கூட காண முடியாத ஒரு வேசியின் வீட்டு வாசலில் இரக்கச் செய்த மாபாதகத்து பரிகாரம் என்ன செய்வேன் ப்ரபுவே! செய்தவத்தின் மேன்மை தேவ தேவியின் தாய்க்கும் உண்டென்றால் அடுத்தடுத்து அவம் புரியும் அடியேனின் கதி என்ன! இந்தப் பாதாளச் சிறைமை பாதியாகப் பிளந்து என்னை விழுங்குமாறு செய்யுங்கள் சுவாமி சரியான தண்டனையாயிருக்கும்! ஐயோ!

அரங் : விப்ரா வேசியின் பேற்றுக்கு உனக்கு விளக்கம் வேண்டும் அது தானே இந்தப் புலம்பல்.

கேள் உனக்கு தன் மகளை தந்தது மட்டும் ஒரு காரணம் அல்ல.

தேவ தேவியின் தாய் வேசியர் குலததின் விளக்கு இழிவு இகழ்வு பாராமல் குலத் தொழில் புரியும் எவரும எனக்கு இன்பமானவர்.

விப்ரா அரச தண்டனையிலிருந்து காக்க வேசியுகு விழும் உதவுவள் என்ற தன நிர்ஹேது க்ருபை என்பதே நல்லது. குலத் தொழில் என்று கொள்ளல் தேவதேவி கடமை தவறியவள் என்றாகும்,

அவர்களும் கோயில் கைங்கர்ய பரர்களே.

செயற்பாட்டில் நம்பிக்கை கொண்ட எவரையும் நான் விரும்புவேன்.

தாஸியர் குலத்தழைக்க தான் பிரிது என்ற தயவு தாட்சண்யங்களை ஒதுக்கி விட்டு ஓயாமல் உழைக்கும் உத்தம ஸ்திரி அவள் செயற்பாட்டில் தெளிவு சுளுவுகளை கண்ட அவள் என்மீதும் பக்தி கொண்ட பெருமைக்கு உரியவள்.

அரங்கர் என அழைத்து எனக்கு ஆராதனம் செய் விட்டுத்தான் அப்புறம் போவாள்,

செயல் சார்ந்த எந்த உயிரையும் நான் நேசிப்பேன் அந்த வகையில் தான் தேவ தேவியின் தாயும் ஏற்றதாழ்வுகளின் இலக்கணம் எனக்கு வேண்டாதது விப்ரா!

செயற்பாடுகளின் தாக்கம் திட்ப நுட்பம் எங்கிருந்தாலும் நான் அங்கிருப்பேன் அதுவே அறம் தருமம்!

விப் : [விம்மி விசித்து] தெரிந்து கொண்டேன் ஸ்வாமி என் குற்றத்தையும் உணர்ந்தேன! தேவரீரின் குண விசேஷங்களையும் அறிந்தேன! இனி அருள் கூர்ந்து அடியேனை ஆட்கொள்ளும் வகை கூறுங்கள் ப்ரபோ! பூவுலக வாசம் எளியேனை புரட்டி எடுத்தது போதும்.

அன்னை: [சிரித்துக் கொண்டே] வானுலக வாழ்வு இன்னும் மோசம் மைந்தா வேண்டுதல் வேண்டாமை இல்லாத தால் எங்கு நோக்கினும் ஓரே வெறுமை ;உழைப்பையே காணுத ஒரு உனமத்தம் அதனுல் தானே நாங்கள் இப்படி கோவில் குளம் என்று (வாடகை) போக்கிரத்தில் இருக்கிறேம்!

அரங் : ஆமாம் விப்ரா அலுத்துக் கொள்ளாதே பூவுலக வாழ்வு பொன் போன்றது!

இருக்க வேண்டிய நாட்கள் இங்கு இனிதாக இருந்து தேவ தேவியுடன் எமக்கு துளவத் தொண்டு செய்.

தெவிட்டாத உன், தேனூறும் திருப்பள்ளி எழுச்சி பாடல்களைப் போல் செந்தமிழால் மாலை கட்டி எமக்கு சூட்டு.

அதுவே நீ மறந்த மறை வாழ்வை மலர்த்தட்டும்.

சோழன் அன்றொரு நாள் சொன்னது போல் தொண்டரடிப்பொடி எனும் பெயர் உன்னை தொடரட்டும்.

தொண்டர் தம் திருவடித்துகள் அணிந்து தூய்மை பெற்றிலங்கி தொண்டினைத் தொடங்கு.

வைணவத்தின் மரபும் வரலாறும் உன்னை ஒரு வைர வடமாக அணிந்து கொள்ளட்டும்

அரசே விடை தரலாமா (மறைதல்)

எல்லோர் முகத்திலும் இன்பத்தை மாத்திய இறு மாப்பு—பூரிப்பு புளகம்.

ஒருவரை ஒருவர் பார்த்து புன்முறுவல் பூக்க விடை பெறுகின்றனர்.

தேவதேவி தொடர தொண்டரடிப்பொடி இசையி லாழ்கிறார்.

பச்சை மாமலை போல் மேனி
பவள வாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரரேறு ஆயர்தம்
கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான் போய்
இந்திர லோக மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே!

இப்படி சொற் பூக்களால் மாலை கட்டத் துவங்கிய ஆழ் வார் நாற்பத்தி ஐந்து பாடல்களியற்றி **திருமாலை** எனும் ஓர் அற்புத ஆரத்தை அரங்கனுக்கு சூட்ட நாமும் மகிழுகிறோம்.

வணக்கம்

# பாத்திரங்களின் பெயர் விளக்கம்

தேவி—ஸ்ரீதேவி தாயார்
இறை—இறைவன்
நார—நாரதன்
இந்தி—இந்திரன்
வந்த—வந்தவர்கள்
பிரம்மன்—பிரம்மன்
ஒருவன்—ஒருவன்
மற்ற—மற்றவன்
அடுத்—அடுத்தவன்
முதல்—முதல்வன்
கூ. எ—கூடி எல்லோரும்
ஒரு—ஒருவர்
விப்—விப்ரர்
அடி—அடியவர்கள்
ஓ. வா. — ஓலை வாசிப்பவன்
புல—புலவர்
அர—அரசன்
தேவி—தேவதேவி
ப. தூ. —பல்லக்கு தூக்கி
தமக்—தமக்கை
பெரி—பெரியவர்
அவர்—அவர்
ஒ. பெரி—ஒரு பெரிவர்
அமை—அமைச்சர்
ஒ. வித்—ஒரு வித்தகர்

ஒ. ச—ஒரு சமயி
மக்—மக்கள்
ஒ. பு. ச. —ஒரு புறச் சமயி
உ. க. — உபகனம்
அ. ப. — அனுபல்லவி
பெரி—பெரியவர்
இளை—இளைஞர்
பட்டர்—பட்டர்
மடப்—மடப்பள்ளி
மோ—மோகனு
சி. கு. — சிலகுரல்
தாய்—தேவதேவி தாயார்
தயா—தயாநந்தர்
ஒ. கா—ஒரு காவலன்
பலர்—பலர்
செந்—செந்திரு
அரங்—அரங்கன்
வ. கு —வந்த கும்பல்
அ. பெண்—அந்த பெண்
பெண்—பெண்
மக்—மக்கள்
தவில்—தவில்காரர்
ஆன் — ஆன்மா
அரசி—அரசி

திருமலை யப்பன

